# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 15 செவ்வாய்க்கிழமை (01.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 340


## புத்தூர்ச் சம்பவத்தைக் கண்டித்து நல்லூரில் நேற்று கண்டனப் பேரணி

### கண்காணிப்புக் குழுவுக்கு மகஜரும் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

கடந்த வெள்ளிக்கிழமை புத்தூர் கிழக்கில் பொதுமக்கள் மீது படையினரும் பொலீஸாரும் நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து அப்பகுதி மக்களும், மாணவர்களும் நேற்று நல்லூரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

படங்கள் 2ஆம் பக்கத்தில்

நேற்றுக்காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பகுதியில் ஒன்றுதிரண்ட மக்களும், மாணவர்களும் படையினருக்கு எதிரான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு கோவில் வீதியிலுள்ள இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகம் நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் வாகனம் மீது கிரனேட் வீச்சு ஒருவர் உயிரிழப்பு: மூவர் படுகாயம்!

### யாழ்.கந்தர்மடத்தில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.1

பொலீஸ் வாகனம் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

யாழ்.பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும், கந்தர்மடம் சந்திக்கும் இடையே நேற்று மாலை 6.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ்.நகர் நோக்கி பலாலி வீதி ஊடாக வந்துகொண்டிருந்த பொலீஸாரின் விநியோகப் பிரிவு வாகனம் மீதே இந்தக் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கிரனேட் வெடித்ததும் அந்த வாகனத்திலிருந்த பொலீஸாரில் ஒருவர் வாகனத்திலிருந்து வீதியில் வீழ்ந்தார் என்று கூறப்படுகிறது.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த லலித்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரச்சினைக்குரிய படைமுகாமை அகற்ற கண்காணிப்புக்குழுவுக்கு அதிகாரமில்லை

## பாதிக்கப்பட்ட புத்தூர் மக்களிடம் யாழ்.அலுவலக அதிகாரி கைவிரிப்பு



யாழ்ப்பாணம்,நவம்பர்1

**பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகக் கூறப்படும் இராணுவ முகாமை அகற்றும் அதிகாரம் தமக்கு இல்லை என்று படையினரால் பாதிக்கப்பட்ட புத்தூர் மக்களிடம் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி தெரிவித்தார்.**

புத்தூர் கிழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் மீது, படையினரும் பொலீஸாரும் நடத்திய தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து நேற்றுக்காலை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் அப்பகுதி மக்கள் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இராணுவத்தினர் தமக்குஅச்சுறுத்தல்

(12 ஆம் பக்கம் பார்க்க)






## மீடின் கொலை குறித்து இராணுவம் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

கொழும்பு, நவ.01

இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர் கேணல் துவான் நிஸ்வி மீடின் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை இராணுவம் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று இராணுவம் கண்காணிப்புக் குழுவிற்கு கடிதமொன்றையும் அனுப்பியுள்ளது. போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் சூழ்நிலையில் இவ்வாறான கொலைகள் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலென்று இலங்கை இராணுவம் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்க சமாதான செயலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கும் இராணுவம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## புலனாய்வு அதிகாரி கொலை: 'புளொட்' பாபுவிடம் விசாரணை

கொழும்பு, நவ.01

தலைக்குள் மூன்று குண்டுகள் பாய்ந்ததால் ஏற்பட்ட அதிகமான ரத்தக் கசிவினாலும், அதிர்ச்சியினாலும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான கேணல் துவான் நிஸ்வி மீடின் மரணித்தார் என கொழும்பு உதவி சட்ட மருத்துவ அதிகாரி டி.எல்.ஐ. ரட்னாயக்க மரண விசாரணை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கேணல் மீடினின் கொலை தொடர்பான விசாரணை கொழும்பு பொலிஸ் சவச்சாலையில் இடம்பெற்றது. அப்போது மேற்படி மரண விசாரணை அறிக்கையைப் பெற்றுக்கொண்ட கொழும்பு மேலதிக நீதிவான் திருமதிலீலாமணி லியனாராய்ச்சி, இது தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மூன்றாம் திகதி நடத்தப்படுமென்று கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட் எப்போது? முடிவு நிதியமைச்சரிடம்!

கொழும்பு, நவ.1

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கையில் வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பது தவறு என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சேபித்துவரும் நிலையில் இந்த விடயத்தில் முடிவுசெய்யும் பொறுப்பை நிதி அமைச்சரிடம் தள்ளிவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் புலிகளுக்கும் இடங்கொடுப்பதில் என்ன தவறு?

### சித்தாலேப தொழிலதிபர் ஹெட்டிகொட கேள்வி

கொழும்பு, நவ.01

அமைதிக்காகப் பாடுபட்ட அஹிம்சாவாதியான மகாத்மா காந்தியைக் கொலை செய்தவர்களின் சந்ததியினரும், மிகச் சிறந்த பிரதமரான இந்திராகாந்தியை கொன்றவர்களின் சந்ததியினரும் இந்திய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கு நான் எனது அரசின் அமைச்சரவையில் இடமளிப்பதில் எந்தத் தவறுமே இல்லை.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி வேட்பாளரும், பிரபல தொழிலதிபருமான விக்டர் ஹெட்டிகொட.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றிபெற்றால் தனது அரசாங்கத்தின் அமைச்சரவையில் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் இடமளிக்கப்படும் என விக்டர் ஹெட்டிகொட கூறியிருக்கின்றார். அது தென்னிலங்கையில் ஒருவித பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து நேற்று 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த விக்டர் ஹெட்டிகொட மேலும் கூறியதாவது:-

நான் மற்றைய அரசியல் தலைவர்களைப் போல் அரசியலுக்காக எதனையும் கூறமாட்டேன். எனது கொள்கை சற்று வித்தியாசமானது. நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் எனது அமைச்சரவையில் விடுதலைப் புலிகளுக்கும் உரிய இடத்தை வழங்குவேன். இதில் நான் எந்தத் தவறையும் காணவில்லை.

நாட்டை முன்னேற்றுவதற்காக காந்தியைக் கொலைசெய்த சந்ததியும், இந்திரா காந்தியைக் கொலை செய்த சந்ததியும் இந்திய அரசாங்க அமைச்சரவையில் இருக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென யாழ். விஜயம் செய்ய பிரதமர் மஹிந்த, ரணில் திட்டம்?

கொழும்பு,நவ.01

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் தங்களின் தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வருவதற்குத் திட்டமிட்டு வருகின்றனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மூன்றாம் திகதி விமானத்தில் பலாலி வருவார். ஆனால், அவர் பலாலி படைத்தளத்தில் படையினரையும், அதிகாரிகளையும் சந்தித்துவிட்டு திரும்பிச் சென்றுவிடுவார் எனத் தெரிகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





புத்தூர் கிழக்கு அண்ணமார் கோயிலடி மக்கள் நல்லூரில் இருந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் வரை பேரணிஒன்றை நடத்தினர். மக்கள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க. ஈழவேந்தன் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவரிடம் மகஜர் கையளிப்பதை முதலாவது படத்திலும் கலந்துகொண்ட மக்களை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: பிரபா)

# புத்தூர் கிழக்கில் இராணுவமுகாமை மக்கள் திரண்டு அகற்றும் நிலை வரும்!

## கண்காணிப்புக் குழுவுக்கு மக்கள் ஒன்றியம் கடிதம்

யாழ்ப்பாணம்,நவ 1

புத்தூரில் மக்கள் செறிவாக வாழும் பகுதியில் இருந்து இராணுவ முகாமை அகற்றுமாறு கோருகின்றோம். இல்லையேல் மக்கள் ஒன்றிணைந்து இராணுவ முகாமை அகற்றும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

புத்தூர் கிழக்கு அண்ணமார் கோயிலடிப் பிரதேச மக்கள் அமைத்துள்ள மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பு மேற்கண்டவாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி புத்தூர் கிழக்கு அண்ணமார் கோயிலடிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் பொது மக்கள் மீது மேற் கொண்ட தாக்குதலைக் கண்டித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை அந்தப் பிரதேச மக்கள் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அவர்கள் யுத்த நிறுத்தர் கண்காணிப்புக்குழு அதிகாரியிடம் கையளித்த மகஜரில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தமகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயத்தின் ஒரு மாவட்டமான யாழ்ப்பாண மாவட்டத்தின் கிராமங்களில் ஒன்றான புத்தூர் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களாகிய நாம் மிகவும் செறிவாக வாழும் எமது இடத்தில் எந்தவித காரணமும் இன்றி தொடர்ந்து ஸ்ரீ லங்கா ஆக்கிரமிப்பு படையினர் பொது மண்டபம், ஆலயம், முன்பள்ளி , சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டு இருப்பதன் காரணமாக அவ்வூர்மக்களாகிய நாம் சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். எமது சொந்த ஊரில், சொந்த வீட்டில் சுதந்திர மாக வாழும் அடிப்படை மனித உரிமையினை இழந்து நிற்கின்றோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளின் படி இராணுவத்தினர் மக்கள் செறிவாக வாழும் எமது ஊரில் இருந்து வெளியேற வேண்டு. ஆனால், அது இன்று வரை இடம்பெறவில்லை. மாறாக இராணுவ முகாம் பலப்படுத்தப்படுவதுடன் அங்கு தங்கியுள்ள இராணுவத்தினரால் நாளாந்தம் துன்பங்களை அனுபவிப்பதுடன் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றோம்.யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் எமது வாழ்வில் மாற்றம் வரும் என்று எண்ணியிருந்த எமக்கு இன்று எல்லாம் வெறுமையாகவே உள்ளது.

யாழ்ப்பாண குடாநாடு ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பிடிக்குள் 95 ஆம் ஆண்டு வந்ததன் பின்னர் நாம்பட்ட துன்பங் களுக்கெல்லாம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நல்ல மாற்றத்தை உண்டு பண்ணும் என்று எண்ணியிருந்த எமக்கு அரசியல் பணிக்காக யாழ். குடா நாட்டுக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டு ஸ்ரீ லங்கா இராணுவதினரால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பற்ற, சூழல் காரணமாக வெளியேறியமையானது பெரும் கவலை அளித்துள்ளது. இந்த நிலையில் இராணுவதினரின் அத்துமீறலானது எமது கிராமத்தில் மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி அதிகாலை 3மணிக்கு எமது கிராமத்து வீடொன்றினுள் புகுந்த இராணுவச் சிப்பாய் அங்கிருந்த யுவதி மீது பாலியல் ரீதியான பலாத்காரத்தில் ஈடுபடவே அயலவர்கள் ஆகிய நாம் அந்த யுவதியின் அவல குரல் கேட்டு அவ்விடத்துக்கு உடனே வந்து இராணுவச் சிப்பாயை துரத்திய போது அச் சிப்பாய் முன்னால் உள்ள இராணுவ முகாமினுள் ஓடி ஒளிந்து கொண்டார். இதனால் ஆத்திரமுற்ற நாம் இந்த இராணுவ முகாம் முன் நீதி கேட்டு நின்றோம்.

செய்த பிழைகளை நியாயப்படுத்தியதுடன் இராணுவத்தினர்அன்று காலையிலேயே எம்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெண்கள் உட்பட நான்குபேர் காயமடைந்ததுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டோம். தொடர்ந்தும் நீதி கேட்டு எமது எதிர்ப்பை காட்டிய போது மதியம் இராணுவத்தினர் துப்பாக்கிகளால் சுட்டு எம்மை மிரட்டினர். இதன் பின்னர் ஆத்திரமுற்ற மக்களாகிய நாம் எமது எதிர்ப்பை தொடர்ந்தும் காட்ட முற்பட்ட வேளை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவாகிய உங்கள் முன்னிலையிலேயே நாம் துரத்தித் துரத்தி இராணுவத்தினரால் சுடப்பட்டோம், அத்துடன் தாக்குதல்களுக்கும் உள்ளானோம்.

இதனால் வயோதிபப் பெண்கள் உட்பட 15 இற்கும் மேற்பட்ட ஊர்மக்களாகிய நாம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடுகள் மூலமாகவும் தாக்குதல் காரணமாகவும் காயப்படுத்தப்பட்டதுடன் எமது ஊர் இளைஞன் தர்மராசா நிரோஜன் (வயது 20) இராணுவ துப்பாக்கி ரவைக்கு இலக்காகி மரணமடைய நேரிட்டது. இச் சம்பவமானது மேலும் மக்களாகிய எம்மை ஆத்திரமூட்டும் செயலாகவே உள்ளது. ,

இதுதொடர்பாக ஆராய்ந்து மக்களாகிய நாம் செறிவாக வாழும் எம் மத்தியில் உள்ள இராணுவ முகாமை அகற்றுமாறு தங்களிடம் வேண்டுகின்றோம். இல்லையேல் மக்களாகிய நாம் ஒன்றிணைந்து எம்மத்தியில் உள்ள இராணுவ முகாமை அகற்றும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ-3-7)

# மக்கள்வங்கிக் கிளைகள் 9 மணிமுதல் இயங்கும்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகள் யாவும் மக்களின் நலன் கருதி பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக தீபாவளித் தினமான இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை திறந்திருக்கும் என மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தீபாவளித் தினமான இன்றைய தினம் புதிய கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கும் -

ஏற்கனவே உள்ள கணக்கில் 25 ஆயிரம் ரூபாக்கு மேல் வைப்பிலிடுபவர்களுக்கும் - பெறுமதிமிக்க அழகிய சுவர் மணிக்கூடு ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும் எனவும்

வாடிக்கையாளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்து அன்பளிப்பை பெற்றுக்கொள்ளுமாறு- அவர் மேலும் தெரிவித்தார்.

தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வு ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (3-204)

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.1

வட அல்வாய் நக்கீரன் சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் க.தவயோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிக[ழ்]வில் பிரதமவிருந்தினராக உள்ளூராட்சி உத[வி] ஆணையாளர் க.இராசையா கலந்து கொள்வ[ர்].
(3-20[illegible])

# இஸ்ரேல் பற்றிய ஈரானின் கருத்துக்கு ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம்

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முறையிட முடிவு

ஈரானிய அதிபர் அண்மையில் இஸ்ரேலை அழித்தொழிக்கவேண்டும் என்று தெரிவித்திருந்த கருத்து இஸ்ரேலை மட்டுமன்றி மேற்குலகை குறிப்பா ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை பெரிதும் ஆத்திரம் கொள்ளச் செய்துள்ளது.

ஈரான் எமது உலகுக்கு ஓர் அச்சுறுத்தலாக மாறுவதை அனுமதிக்கமுடியாது என்று கூறியுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளெயர் ஈரான் மீது பலாத்காரத்தை பிரயோகிக்க வேண்டிய நிலைமையும் மேற்குலகுக்கு ஏற்படக்கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்

ஈரானிய ஜனாதிபதி அகமட் ஜிஜகாத் தெஹ்ரானில் இடம்பெற்ற 'ஸியோனிஸம் இல்லாத உலகம்' என்ற தலைப்பிலான மாநாட்டில் பேசியபோது ஸீயோனிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டதானது இஸ்லாமிய உலகுக்கெதிரான ஒடுக்குமுறையாளரின் செயற்பாடாகும். இஸ்ரேல் நாடு உலக வரைபடத்திலிருந்து ஒழிக்கப்படவேண்டும். என்று கூறியிருந்தார்.

ஈரானிய அதிபரின் இந்தக் கூற்று தொடர்பாக விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபையை அழைக்கும்படி கோரப்போவதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் ஈரானிய அதிபரின் கூற்றுக்குப் பலத்த கண்டனம் எழுந்துள்ளது.

மேற்கு லண்டனிலுள்ள ஹம்ரனில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் மாநாட்டில் பேசிய ஒன்றியத் தலைவரும் பிரிட்டிஷ் பிரத மருமான ரொனி பிளெயர் ஈரானிய அதிபரின் கருத்துக்களை பலமா கக் கண்டித்தார்.

ஈரானின் அணு ஆயுதத் திட்டம் பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு அது அளித்துவரும் ஆதரவு அணுஆயுதம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை ஈராக்கிய தீவிரவாதிகளுக்கு வழங்கியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் இவை யாவும் ஈரான் மீதான மேற்குலக ஆத்திரத்தை அதிகரித்துள்ளன. (ப-8)






# வெனிசுலாவில் நில அதிர்வு

வெனிசுலா மற்றும் இரண்டு தீவுகளில் கடந்த வெள்ளிக்கிழமை பூகம்பம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆகப் பதிவான இந்த பூகம்பத்தால் ஏற்பட்ட சேதம் பற்றி தகவல் ஏதும் இல்லை.

பூகம்பம் தாக்கிய ட்ரினிடாட், க்ரேனேடா ஆகிய இரு தீவுகளும் கரீபியன் கடல் பகுதியில் அமைந்துள்ளன. ரிச்டர் அளவுகோலில் 5இற்கு மேல் பதிவானால் பின்னதிர்வுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் -

என்வே,மேற்கண்ட 3 நாடுகளிலும் பின்னதிர்வுகள் ஏற்படும் என்றும் நிபுணர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானில் இன்னும் பின்னதிர்வுகள் நீடித்து வருகின்றன. சனிக்கிழமை அதிகாலை இஸ்லாமாபாத்துக்கு 120 கிலோ மீற்றர் வடக்கே பின்னதிர்வு ஏற்பட்டது. அது ரிச்டர் அளவில் 5.5 ஆகப்பதிவானது. சேத விவரம் பற்றிய தகவல் இல்லை. (8)

# புதுடெல்லி தொடர் குண்டு வெடிப்பு : உலகத் தலைவர்கள் கண்டனம்

வாஷிங்ரன்,நவ.1

டெல்லி தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு சர்வதேச தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தீபாவளி பண்டிகையின் போது தீவிரவாதிகள் நடத்திய இந்த தாக்குதல் சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் கூறியுள்ளார்.

அமெரிக்கவெளியுறவு அமைச்சர் கொண்டலீசா ரைஸ் தாக்குதல் சம்பவத்தை கண்டித்துள்ளார்.

பண்டிகை கொண்டாட்டத்தில் ஈடுபட மக்கள் தங்களை தயார்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில் இந்தக் கொடிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குண்டுவெடிப்புக்கு இரையானவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்கள் விரைவாக குணம் அடையவும் பிரார்த்திப்போம் என்றார் அவர்.

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளெயர் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சீன அதிபர் ஹு - ஜிண்டோ, குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அனைத்து வகையான தீவிரவாதத்தையும் சீனா கண்டிக்கிறது.தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடவும் உலகில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டவும் சர்வதேச சமுதாயத்துடன் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம் எனக் கூறியுள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்த பாகிஸ்தான் இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்படும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளது.

இது கோளைத்தனமான செயல் என்று பங்களாதேஷ் கூறியுள்ளது.

இதேபோன்று மாலைதீவு,தென்னா பிரிக்கா, கனடா நாட்டுத் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நீதி நிலை நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் தீபத் திருநாள்

''தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; தர்மம் ஒரு நாள் வெல்லும்.'' - இந்த நீதிப்போதனையை உரைக்கும் - உணர்த்தும் - திருநாள் இன்று.

இது தீபத்திருநாள் . இருள் அகன்று ஒளி பிறந்த நாள். உலகைக் கவ்விய அதர்ம இருள் நீங்கி, தர்மஒளி துலங்கிய நன்னாள். அதைத்தான் தீபாவளித் திருநாளாக இன்று கொண்டாடுகிறோம்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை 'கொண்டாடும்' நிலையில் அவர்கள் இல்லை. 'அனுஷ்டிக்கும்' நிலையில் தான் உள்ளார்கள்.

தீயவை அகன்று, நல்லவை தோற்றும் என்று நம்பிக்கை யோடு - அநீதி அழிந்து, நீதி பிழைக்கும் என்ற எதிர்பார்ப் போடு - இந்தத் தீபத்திருநாளை அனுஷ்டிக்கிறார்கள் அவர்கள்.

உலகின் மூலமும் முதலும் உதயன். அவன் ஒளிம் பிழம்பானவன். அவனே சக்தியின் மூலம்; தோற்றுவாய். உலகை இயக்கும் பேராற்றலும் அவனே . அவனின்றி அணுவும் அசையாது.

அவனால்தான் உயிர்கள் உயிர்க்கின்றன; பிறக்கின் றன; பிழைக்கின்றன; நிலைக்கின்றன; ஒளிர்கின்றன; அழிகின்றன.

இயற்கையின் இயக்க காரணனும் அவனே. ஒளி வடிவில் அவனை ஏற்றும் திருநாள் இது.

தனது அதர்மப் போக்கினால் ஈரேழு பதினான்கு உலகையும் ஆட்டிப் படைத்து, அடக்கி, ஒடுக்கி, அட்ட காசம் புரிந்த நரகாசுரனை மகாவிஷ்ணு தனது சக்கராயு தத்தை ஏவிக்கொன்றொழித்த தினம் இதுவாகையால் அதர்மம் அழிந்து, தர்மம் நிலைநிறுத்தப்படும் திருநாளாக இது போற்றப்படுகின்றது.

அநீதி அழிக்கப்பட்டு, நீதி நிலைநிறுத்தப்பட்ட பொதுச் சிறப்பை எடுத்தியம்பும் இதுபோன்ற பல கர்ண பரம் பரைக் கதைகளும், ஐதீகங்களும், இதிகாச புராணங் களும் நம்மத்தியில் உள்ளன. அவற்றில் ஒன்றே தீபாவ ளித் திருநாளின் உட்கிடக்கைத் தத்துவமாகும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களும் இன்று அடக்கி, ஒடுக்கப்பட்டு, அடிமை வாழ்வில் மூழ் கடிக்கப்பட்டு, தாங்கொணா துன்ப, துயரங்களில் சிக்கி இருக்கின்றார்கள். பேரினவாதம் என்ற நரகாசுரனின் அதர் மம்தான் இன்று தலைவிரித்தாடுகின்றது.

நரகாசுரனின் பிடியிலிருந்து அன்றைய மக்களை கிருஷ்ண பகவான் விடுவித்தமை போன்று தங்களையும் சூரியக் கடவுள் காப்பான் என்ற நம்பிக்கை ஈழத் தமிழர் மனதில் திடமாக உள்ளது.

மகாபாரதத்தில் கூட அமைதி வழியில் தீர்வு காண்பதற் காகத் தானே தூது சென்றான் கிருஷ்ணபரமாத்மா. ஆனால், தர்மம் மறந்த துரியோதனும், கௌரவர்களும், தர்மன் தலைமையிலான பஞ்சபாண்டவர் விடயத்தில் தர்மத்தோடு நடந்து கொள்ள மறந்து விட்டனர்; மறுத்து விட்டனர்

எனவே, நீதியை , நியாயத்தை, தர்மத்தை நிலைநாட்ட அருச்சுணனின் தேர்ச் சாரதியாகத் தானே வந்து, சங்கு ஊதி, யுத்தத்திற்கு வித்திட்டான் கிருஷ்ணன்.

அதுபோன்று,பேரினவாத நரகாசுரனை அழிப்பதற்கு நவீன கிருஷ்னன் யுத்த களத்தில் பேரிகை முழங்க , சங்கு ஊதி, யுத்த சன்னதம் கொள்ளத் தயாராகி விட்டான்.

இராமாயாணத்திலே ஸ்ரீ ராமர் தமது வனவாசத்தை முடித்துக் கொண்டு பட்டாபிஷேகம் செய்ததும் இந்தத் தீபாவளித் திருநாளில்தான் என்பது நமது ஐதீகம்.

ஆக, அநீதி முடிந்து, முடிக்கப்பட்டு, நீதி நிலைபெறு வதைக் குறிக்கும் தினமாகத் தீபாவளித் திருநாளை நாம் போற்ற முடியும்.

சரி. அதர்மம் வீழ்வதும் தர்மம் வெல்வதும் உறுதி என் றால், அந்தத் தர்மத்தை வரவேற்கும் நேரிய சிந்தனை யோடு, சீரிய செயற்பாட்டோடு தமிழினம் இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

சாதி, மத கொள்கைக் கோட்பாடுகளை முன்னிறுத்தி, தமிழ்பேசும் மக்களாகிய நம்மை சமய, சமூக மார்க்கங் களில் பிளவுபடுத்தி, துண்டு துண்டாகிக் குழுக்களாகப் பிரிந்து நிற்கும் கேவலப் போக்கிலிருந்து நம்மை விடு விடுத்து, ஒன்றுபட்ட சக்தியாய் - ஒரே குரலில் - தர்மத்தை யும், நீதியையும் வரவேற்கும் ஆயத்த நிலைக்கு நமது மக்களை நாம்தயார்ப்படுத்தி விட்டோமா என்பதுதான் இன்றைய நாளில் நாம் நம்மைப்பார்த்தே கேட்க வேண் டிய கேள்வியாகும்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை இந்த மாதம் மிக முக்கியமானது.உயர்வானது.

முஸ்லிம் சகோதரர்கள் தம்மை ஒறுத்து, நோன்பு நோற் கும் புனித காலம் இது.

அதேபோன்று ஈகத்துக்கும், கொடைக்கும், உன்னத தியாகத்துக்கும் ஒப்புயர்வற்ற தினமாகப் போற்றப்படும் மாவீரர் தினமும் இந்த மாதத்தில்தான் வருகின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரை தீபம் ஏற்றிப் போற்றும் இரண்டு திருநாள்களும் - தீபாவளியும் - மாவீரர் தினமும் - இந்த மாதத்தில் வருவது குறிப்பிடத்தக்கது.

அநியாயம் ஒழிக்கப்பட்டு நியாயம் நிலைநிறுத்தப்படு வதைக் குறிக்கின்ற தினமும், வாழ்வின் உயர் விழுமிய மான - உன்னதமான - சுதந்திரத்துக்காக தம்முயிரைத் தற் கொடையாக வழங்கும் தியாகிகளை ஏற்றும் தினமும் வருகின்ற இம் மாதத்தில் இந்த இரு தினங்களும் குறிக் கின்ற ஆழமான அர்த்தங்களைப் புரிந்துகொண்டு அவற்றை வரவேற்க நம்மை நாமே தயார் செய்துகொள்ள வேண்டும்.

அப்போதுதான் நீதி நம்மைத் தேடி வரும். நியாயம் நமக்குக் கிட்டும்.

# ஆழிப்பேரலை பாதித்த வர்த்தகர் போராட்டம் நடத்த ஏற்பாடு

வடமராட்சி,நவ.1

வடமராட்சி வடக்கில், கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் இது வரை எந்தவிதமான நிவாரணமும் வழங் கப்படாமையினால், தமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிப் போராட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட இந்த வர்த்தகர்கள் அண்மையில் அல்வாய் வடக்கு, சக் கோட்டை முன்பள்ளியில் ஒன்றுகூடித் தமக்கென வடமராட்சி வடக்குக் கரை யோர வர்த்தகர் சங்கம் என்ற பெயரில் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

இச்சங்கத்தின் தலைவராக ம.பிரேம் ஆனந்தும், செயலாளராக கே.சூரிய குமாரனும், பொருளாளராக கா.மதன ரூபனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற் பட்டு ஒருவருடத்தை எட்டிப்பிடிக்கும் இவ்வேளையில் இதனால் பாதிக்கப் பட்ட கரையோர வர்த்தகர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த எவ்வித நிவா ரண உதவிகளோ அன்றேல் வங்கிக் கடன் வசதிகளோ செய்துதரப்பட வில்லை.

இந்த நிலையில் நாம் எமது வாழ் வையோ, தொழிலையோ மீளக்கட்டி எழுப்ப முடியாமல் அன்றாடம் திண் டாடுகிறோம். எமது நிலைகுறித்து மீண் டும் ஒருமுறை அரச திணைக்கள, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விளக்க மாக மகஜர்களை அனுப்பிவைத்து, அவற்றிற்குச் சாதகமான பதில்கிடைக் காத பட்சத்தில், போராட்டம் ஒன்று நடத் தப்படும் என இச்சங்கத்தின் கூட்டத் தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தில் 60 இற்கு மேற்பட்ட வர்த்தகர்கள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (3-173)

வீண்பொழுது போக்குக்காக

# வீதியில் கூடிநிற்போர் மீது வடமராட்சியில் தாக்குதல்

வடமராட்சி,நவ.1

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு 9 மணிக்குப் பின்னர் தெருக்கள், சந்திக ளில் கூடிநின்று கதைத்து வீண் பொழுது போக்குவோர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள துன்னாலை, மந்திகை, தம்பசிட்டி, பருத்தித்துறை, அல்வாய் வடக்கு, நாவலடி, வல்வெட் டித்துறை ஆகிய இடங்களில் சுமார் 10 இற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் களில் வந்தோர் இவ்வாறு கூடிநின் றோர் மீது தாக்குதல்களை நடத்தியுள் ளனர்.

இத்தாக்குதல்களையடுத்துச் சந்தி கள், தெருக்களில் வீண் பொழுது போக்குவதைப் பலர் கைவிட்டுள்ள னர். (3-173)

# வடக்கு-கிழக்கில் அடுத்த ஆண்டு முதல் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

## முதற்கட்டமாக அதிபர்களுக்குக் கருத்தரங்குகள்

அச்சுவேலி,நவ.1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் அடுத்தவருட ஆரம்பத்திலிருந்து வழிகாட்டல் ஆலோ சனைச் சேவை வேலைத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது. இதன் முன்னோடியாக பாடசாலை அதிபர் களுக்கு வலயரீதியாக வேலைத்திட்ட அறிமுகக் கருத்தரங்குகள் நடைபெற வுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்த ஆலோ சனைகளின் படி 2001 ஆம் ஆண்டு பரீட்சார்த்த ரீதியிலும் 2002ஆம் ஆண்டி லிருந்து முழுமையாகவும் தென்னிலங் கைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுவந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் 2006ஆம் ஆண்டிலிருந்து வழிகாட்டல் ஆலோ சனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

வழிகாட்டல் ஆலோசனை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக, பாடசாலை அதிபர்களுக்கு அது தொடர்பான விளக்கத்தை வழங் கும் முகமாகவே கல்வி வலய ரீதியா கக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்ய பட்டுள்ளன.

இம்மாத இறுதிக்கு முன்னதாக வடக்கு - கிழக்கிலுள்ள 24 வலயக் கல்வி அலுவலகங்களும் அதிபர்களுக் கான கருத்தரங்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன என வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக் கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. முருகுப்பிள்ளை தெரிவித்தார். (ஏ-11)

# பல்கலையில் சிறப்புற நடைபெற்ற அகரமுதலி இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.1

''தகவல் தொழில்நுட்ப கலைச் சொல் அகரமுதலி'' கணனி மென்பொருள் வெளி யீட்டுவிழா நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங் கில் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் எஸ்.செல்வதாசன் வடிவமைத்த கணனி மென்பொருள் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். பல்லைக்கழக மாணவர் ஒன் றியத்தின் செயலாளர் இ.கோகுலரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் சமூக வியல்துறைப் பேராசிரியர் என்.சண் முகலிங்கன் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரலிங்கம், ஐ.ஐ. எஸ். நிறுவனத்தின் இயக்குநனர் எஸ். விக்னேஸ், யாழ். பல்கலைக்கழக முகா மைத்துவ வணிக பீட பீடாதிபதி கே. தேவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாகவும் கலந்துகொண்டனர்.

கணனி மென்பொருள் இறுவட்டைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளி யிட்டுவைக்க வணிகபீடாதிபதி கே.தேவ ராஜா பெற்றுக்கொண்டார். (எ-ரி)

# வலிகாமம் பாடசாலைகளில் திருட்டுக்கள் அதிகரிப்பு

வலி.தெற்கு,நவ.1

அண்மைக்காலமாக வலிகாமம் பாடசாலைகள் பலவற்றில் சிறுசிறு களவுகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிய வருகின்றது.

பாடசாலைக் காரியாலயங்களை உடைத்தும், அறைகளைத் திறந்தும் பல திருட்டுகள் பரவலாக இடம்பெற்று வரு கின்றன.

சுன்னாகம் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கடந்த வியாழக் கிழமை இரவு பாடசாலை வளவில் பாது காப்பாக வைக்கப்பட்டிருந்த நீர் இறைக் கும் மோட்டார் இயந்திரம் களவாடப் பட்டுள்ளதாக அதன் அதிபர் தெரிவித் துள்ளார். யூனிசெப் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 8 ஆயிரம் ரூபா பெறு மதியுடைய இயந்திரம் களவாடப்பட் டுள்ளது.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை யிலும் அண்மையில் நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரம் களவாடப்பட் டுள்ளதாக அதிபர் முறைப்பாடு செய் துள்ளார்.

பாடசாலை மாணவர்களின் குடிதண் ணீர் பாவனைக்கென வழங்கப்பட்ட இவ் வியந்திரங்கள் களவாடப்பட்டமையால் மேற்படி பாடசாலைகளின் மாணவர்கள் குடி தண்ணீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மேற்படி பாடசாலைகளில் இடம் பெற்ற இக்களவுகள் தொடர்பாகப் பாட சாலை அதிபர்கள் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது டன் வலிகாமம் கல்வி வலயத்திற்கும் அறிவித்துள்ளனர். (3-152)

# பயணிகள் சேவைக்குச் சிறிய படகுகள்; அரச அதிபரிடம் ப.நோ.கூ.ச. கோரிக்கை

நெடுந்தீவு,நவ.1

பயணிகள் சேவைக்கென வழங்கப் பட்ட பெரிய படகுகளுக்குப் பதிலாக சிறிய படகுகளை வழங்குமாறு நெடுந் தீவு ப.நோ.கூ. சங்கம் கோரியுள்ளது.

யாழ். அரச அதிபரால் கடந்த ஆண்டில் நெடுந்தீவு பலநோ.கூ.சங்கத் திற்கென இரண்டு பெரிய இழுவைப் படகுகள் இலவசமாக வழங்கப்பட்டி ருந்தன.

ஊர்காவற்றுறையில் வைத்துக் கையளிக்கப்பட்ட இப்படகுகள் நெடுந்தீ வுத் துறைமுகத்தில் தற்சமயம் தரைதட் டிய நிலையில் நிறுத்திவைக்கப்பட் டுள்ளன. மிகப்பெரிய ஏராவைக் கொண் டுள்ள இந்தப் படகுகள் மிதக்கக் கூடிய அளவுக்கு துறைமுகத்தினுள் நீர் இல் லாத நிலையில் இப்படகுகளைப் பயன் படுத்தக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்றும் -

குறிப்பிட்ட இரு படகுகளையும் மீள வும் அரச அதிபரிடம் ஒப்படைத்து, பதிலாக துறைமுகத்தினுள் மிதக்கக் கூடியதான இரண்டு சிறிய படகுக ளைக் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - தெரி விக்கப்பட்டது. (3-111)

## நாளை

ஐப்பசி 16
புதன்கிழமை
02.11.2005
திதி: அமாவாசை
காலை 07.24 வரை
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 03.33 வரை
ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம்
சுபநேரம்: 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34
[illegible]

## உதயவாக்கு

உண்ணாது நோற்பார் பெரி யர் பிறர் சொல்லு; மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

- திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமணக் கார் (குளிரூட்டியதும்)

வாடகைக்கு

+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு: நடேசன்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை;
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## தீபாவளிப்பூசை

மட்டுவில் வடக்கு புதரன்கேணி மாகாளி அம்பாள் ஆலயத்தின் தீபாவளிப் பூசைகள் இன்று மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் அபிராமி அந்தாதி முற்றோதலும் வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் கந்த சத்தியதாசனின் சொற்பொழிவும் இடம் பெறும். (3-13)




அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

**Bata** பாதணிகள் நியாய விலையில்

கடமைக்குப் போகும் கனவான்களுக்கும்
பள்ளி செல்லும் பாலர்களுக்கும்
பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும்

பொருத்தமான பாதணிகள்
எங்களிடம் கிடைக்கும்

நவநாகரிக டிசைன்களில்-பல்வேறு வடிவங்களில்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
உடனே விஜயஞ் செய்யுங்கள்-

# செந்தமிழ் பாதணி அழகு மாடம்!

[சி-A60...17-42]

யாழ்.சாலை, கிளிநொச்சி


# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்துகள்






முருகந்தநகர், மாசார், பளையைச் சேர்ந்த
**தங்கன் - உதயா**
தம்பதிகளின் செல்வப்புதல்வி
ஜிலைக்சனா (தனா) தனது இரண்டாவது

பிறந்தநாளை இன்று (01.11.2005) செவ்வாய்க் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், அம்மம்மா, அம்மப்பாமார்கள் மற்றும் அனைவரும் தனாவை பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**மாமா**
**சி.திலகநாதன்.**

புலோப்பளை மேற்கு.
(42197)(42-11-17)

# பாராட்டுகின்றோம்



கடந்த 14.09.2005 அன்று நடைபெற்ற மகா குடமுழுக்கு, மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் போன்ற கிரியைகளுக்கு பிரதிஸ்டா பிரதம குருக்களாக இருந்து சிறப்புற நடத்திய "கிரியா அலங்காரமணி"

சிவஸ்ரீ ரவீந்திரராசா குருக்கள்

அவர்களின் சேவையைப் பாராட்டி தென் கோவையூர் விளையாட்டரங்க வீதி, ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தினர் அகமகிழ்ந்து அவர்பணி மேலும் சிறப்புற்று வளர வேண்டுமென வாழ்த்தி

"வேதாகம வித்துவ சிரோண்மணி" எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவிக்கின்றோம்.

**ஆலய தர்மகர்த்தாவும்**
**அழகியவான் பதி வாழ் மக்களும்.**

[42119](42-11-17)



சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஐப்பசித் திங்கள் 17ஆம் நாள் (03.11.2005) வியாழக்கிழமை காலை 8.03 மணிமுதல் 10.03 மணிவரையுள்ள விசாக நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய தனு லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்



திரு.திருமதி செல்வரத்தினம்
தம்பதியரின் ஏக புத்திரன்
திருநிறை செல்வன்
**செல்வலோபன்**
(லோகன்)
அவர்களுக்கும்

திரு.திருமதி குமாரசாமி
தம்பதியரின் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சிவதர்சினி**
(தர்சினி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு 189, காலி வீதி, தெகிவளையில் அமைந்திருக்கும் ஹோட்டல்கொன்கோட்இன் கொன்னிமேரா ரிஷப்சன் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி செல்வரத்தினம்
கிராமசபை ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்,
இலங்கை.

(இதயம் கனிந்த இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி குமாரசாமி
261/3, கண்டி வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
1280, Military Trail,
Scarborough, Ontario, MIC 1A5, Canada.

# கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் அலுவலகப் பணியாளர் பதவிக்கும், ஆலயத் திருமண மண்டப அலுவலகப் பணியாளர் பதவிக்கும் வெவ்வேறாக ஆசார சீலர்களான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிவரங்களைக் குறிப்பிட்டு 14.11.2005 ஆம் திகதிக்கு முன்பதாக "செயலாளர், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்" என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:
* அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* சம்பளம் நேரிற்பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

பெறுநர்
**நடராஜாவும்**
**நிர்வாக சபையும்.**

(42255)(42-11-17)








# கிளிநொச்சி நகரில் ...
# கதிர் (அமல்)
# பல் மூக்குக்கண்ணாடியகம்
## Amal Dental & Optical Works

இலவசமாக கண்பரிசோதித்து நவீனரக பிறேம்களில் காலநிலைக்கேற்ற பார்வைக்கண்ணாடி வழங்குதல், கூலிங் கிளாஸ் வழங்குதல், றிம்லஸ் கூலிங்கிளாஸ் வழங்குதல் என்பனவும். சிறந்த சங்குப்பற்களை கட்டிக்கொள்ளவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக்கொள்ளவும்

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

**அமல் பல்மூக்குக் கண்ணாடியகம்**

தொடர்புகளுக்கு:

A9, சாலை, அரச அதிபர் இல்லம் முன்பாக, கிளிநொச்சி. கிளை- பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு



அன்புள்ள தமிழ், சிங்கள, முஸ்லீம், மலே, பறங்கியர் பிரஜைகளே நாம் நீண்ட காலம் பிரிந்து வாழ்ந்து விட்டோம். நாம் ஒரு சுயாதீன அரசை அமைப்போம். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து எமது நாட்டை முன்னேற்றி, முன்னேற்றமாக வாழ்வோம்.

விக்டர் ஹெட்டிகொட சித்தாலேப வைத்தியர் S.V.H.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியான வாழ்வு கிடைக்கப் பிரார்த்திப்போம்



இன்று தீபாவளிப் பண்டிகையாகும். இந்துக்களின் பிரதான கொண்டாட்டங்களில் இதுவும் ஒன்று.

தீபாவளி என்றால் தீபவரிசை என்று பொருள். தீபங்களை வரிசையாக ஏற்றி அதன் சுடர் விடும் பிரகாசத்தில் இறைவனைக் கண்டு வழிபடுவது நம் முன்னோர் வழக்கம், தொன்று தொட்டு வரும் மரபு.

அசுர பலம் அழிந்து ஆன்ம பலம் வளர்ந்த நாளாக இது கணிக்கப்படுகிறது. நரகாசுரனின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ மகா விஷ்ணு வரமீந்ததனால் இந்தத் தீபாவளி கொண்டாடப்படுவதாக வரலாறு பகர்கின்றது.

இன்றைய தீபாவளி நன்னாளில் நீராடிப் புத்தாடையணிந்து ஆலய தரிசனஞ்செய்து, இதுவரை பட்ட கஷ்டங்களும் துன்பங்களும் நீங்கப்பெற்று இனியாவது அமைதியும் சுபீட்சமும் சமாதானமும் மலர வேண்டுமென எல்லாம் வல்ல நல்லைக்கந்தனை வேண்டி, நல்லைக்குருமணியின் பாதகமலங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் வாழ இறையாசி வேண்டித் துதிக்கின்றோம்.

தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் ஆண்டவன் அவதரித்து நீதியை நிலைநாட்டுவான் என்பதை வலியுறுத்தி நிற்கும் இத் தீபாவளியில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீனமுதல்வர், இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## தீபாவளியன்று சமூகப்பணி செய்வோம்

இந்த நாட்டின் வரலாற்றில் முக்கியமான காலகட்டத்தில் தீபாவளி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தீபாவளி அதன் மகிமைக்கு இணங்க கொண்டாடப்பட வேண்டிய பண்டிகையாகும். இது இந்த நாட்டில் மட்டுமல்ல உலகிலேயே அதர்மம் ஒழிக்கப்பட்டு தர்மம் நிலை நாட்டுவதற்கு இறைவனைப் பிரார்த்தித்து நிற்கவேண்டிய முக்கிய நாளாகும்.

பல அரசியல் திருப்பங்களுக்கு மத்தியில் தத்தளிக்கும் எமது மக்களுக்கு இன்னமும் விடிவு கிடைக்காத நிலையில் இத்தீபாவளியை அனுஷ்டிக்க வேண்டியதாக இருக்கிறது. எமது சகோதர, சகோதரிகள் பலர் பல்வேறு வகையில் வேதனைகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்வதுடன், எம்மாலான உதவிகளையும் ஆதரவையும் அவர்களுக்கு வழங்கவேண்டும்.

இந்த நல்ல நாளிலே மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன் எமது மக்கள் மனிதநேய சமூகப்பணிகளுக்கு ஆதரவையும் உதவியையும் வழங்கும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்ய வேண்டும் என்று இந்து மக்களை அன்பாக வேண்டுகின்றோம்.

எமது மத நிறுவனங்களையும் ஆலயங்களையும் மதகுருமார்களையும் அரசியற் பகடைக்காய்களாகப் பாவித்து எமது மதத்தின் மகிமையை எவருமே கெடுக்கக்கூடாது. மத நிறுவனங்களும், ஆலயங்களும், குருமார்களும் அரசியல் சார்பற்ற வகையில் இறைபணி செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதனை இன்றைய காலகட்டத்தில் வற்புறுத்த விரும்புகிறோம்.

அகில இலங்கை
இந்துமாமன்றம்,
கொழும்பு.

**கந்தையா நீலகண்டன்**
பொதுச்செயலாளர்.


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி வாழ்த்துக்கள்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100 வீதம் சுத்தமானது உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டுவாங்குங்கள்.
அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
ஏக விநியோகஸ்தர்கள்
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel:021 222 2567
Packed By: Royal Industries
Colombo 12.
Tel:0112334603 (C/45782)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.



- கல்யாணப்பட்டு புடைவைகள்
- சல்வார் கமிஸ் வகைகள்
- ஆடவர், பெண்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான அனைத்துரக ஆடைவகைகளும்

கல்யாண பட்டு புடைவைகளின் களஞ்சியமான நிறுவனங்கள்
ராசி சில்க்ஸ்
நல்லி சில்க்ஸ்
ராசி சில்க்ஸ் 70,71A, நவீனசந்தை, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5571
நல்லி சில்க்ஸ் 121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 5573 (C/45783)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
அன்பான பெருமக்களே!



- விவசாய உபகரணங்கள்
- கெனடி, ராஜா, அமுதா, பிரான்ட் டீசல் என்ஜின்கள் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்.
- அரிசி, மிளகாய், கோப்பி, மருந்து அரைக்கும் இயந்திரங்கள்

ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:
சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்
(C/45784)
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2938.



பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே! நாடுங்கள்....
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
யாவற்றையும் நீங்கள் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
(C/45785) 212, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5542

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.



உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை நவீன மிக்சிங் மூலம் டியிற்றல் வீடியோ படப்பிடிப்பு, CD, DVD பதிவுகள் மற்றும் ஸ்ரில் படப்பிடிப்பு, அல்பம் கட்டுதல், உங்கள் வீடியோ கசற்றில் உள்ளவற்றை என்றும் அழியாமல் பாதுகாக்க CD, DVD ஆகியவற்றில் பதிவு செய்து கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்:



போட்டோ ரவி அன் வீடியோ
இல.139 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 6921 MOBILE 0777 222643


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்புப் பெறவுள்ள மேலும் 5 ஆயிரத்து 800 பேரின் பெயர்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் வெளியிட்டுள்ளனர். உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் எஞ்சியோரின் பெயர் களும் சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் ஒரு பகுதியினரின் பெயர்களும் வருமாறு:-

232யா/உ/4129 திருமதி. செல்வரத்தினம் பஞ்சாட்சரம்
233யா/உ/4163 திரு. நடராசா சிவானந்தம்
234யா/உ/4170 திரு. செல்லப்பா இராமநாதன்
235யா/உ/4194 திருமதி. சின்னத்தங்கச்சி சிவகுரு
236யா/உ/4206 திருமதி. ஆச்சிமுத்து இராசதுரை
237யா/உ/4216 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
238யா/உ/4230 திருமதி. அன்னம்மா கந்தசாமி
239யா/உ/4262 திரு. முருகேஸ் கதிரவேற்பிள்ளை
240யா/உ/4287 திரு. சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
241யா/உ/4315 திருமதி. சிவகாமிப்பிள்ளை
பரராசசிங்கம்
242யா/உ/4353 திருமதி. பரமேஸ்வரி கனகரத்தினம்
243யா/உ/4359 திரு. மயிலு கணேசு
244யா/உ/4361 திரு. ஐயாத்துரைக்குருக்கள்
பாலசுப்பிரமணியம்
245யா/உ/4364 திரு. வஸ்த்தியாம்பிள்ளை அல்பிறெட்
246யா/உ/4373 திரு. இராமசாமி சிவசுப்பிரமணியம்
247யா/உ/4393 திரு. செல்லர் தம்பியையா
248யா/உ/4429 திரு. முருகன் இராசலிங்கம்
249யா/உ/4433 திரு. சின்னத்தம்பி சிவராசா
250யா/உ/4453 திரு. பொன்னம்பலம் இரத்தினசிங்கம்
251யா/உ/4457 திருமதி. செல்வமணி லூசியாலியோ
252யா/உ/4523 திரு. சோமசேகரம் மகாதேவா
253யா/உ/4533 திரு. மார்க்கண்டு சண்முகம்
254யா/உ/4563 திரு. செல்லையா பத்மநாதன்
255யா/உ/4601 திரு. பரமானந்தி கயிலையங்கிரிநாதன்
256யா/உ/4623 திருமதி. நாகம்மா மாணிக்கவாசகர்
257யா/உ/4624 திருமதி. புஸ்பகாந்தி சிவலிங்கம்
258யா/உ/4627 திரு. கந்தையா விக்னராசா
259யா/உ/4657 செல்வி. ரஞ்சிதம் யோசுவா
260யா/உ/4668 திருமதி. தனலக்சுமி சுந்தரம்
261யா/உ/4675 திரு. சின்னையா கனகரத்தினம்
262யா/உ/4684 திருமதி. சிவக்கொழுந்து அருளம்பலம்
263யா/உ/4715 திருமதி. தங்கச்சியம்மா கதிரவேலு
264யா/உ/4720 திருமதி. சிவபாக்கியம் இராசரெத்தினம்
265யா/உ/4756 திருமதி. சங்கரப்பிள்ளை
கயிலாயநாதன்
266யா/உ/4778 திரு. சின்னத்தம்பி சின்னராசா
267யா/உ/4783 திருமதி. பாக்கியம் மார்க்கண்டு
268யா/உ/4792 திருமதி. அன்னபூரணம் இராசையா
269யா/உ/4831 திரு. கந்தையா நவரத்தினம்
270யா/உ/4835 திருமதி. இரத்தினம் கந்தப்பு
271யா/உ/4839 திருமதி. தங்கராணி தம்பிராஜா
272யா/உ/4849 திருமதி. தங்கம்மா நல்லதம்பி
273யா/உ/4856 திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்
274யா/உ/4874 திருமதி. அன்னப்பிள்ளை சுந்தரலிங்கம்
275யா/உ/4898 திருமதி. இராஜேஸ்வரி
சந்திரசேகரம்பிள்ளை
276யா/உ/4935 திரு. முத்தையா சோமசுந்தரம்
277யா/உ/4953 திருமதி. இரத்தினம் கந்தசாமி
278யா/உ/4954 திருமதி. சரஸ்வதி மூத்ததம்பி
279யா/உ/4962 திரு. சிவசுப்பிரமணியம் மகாதேவன்
280யா/உ/4963 திரு. கந்தையா இரத்தினசிங்கம்
281யா/உ/5048 திரு. அப்புக்குட்டி புஸ்பராசா
282யா/உ/5050 திரு. கந்தர் துரைசிங்கம்
283யா/உ/5057 திரு. மாணிக்கம் நாகையா
284யா/உ/5063 திரு. இரத்தினம் பஞ்சலிங்கம்
285யா/உ/5081 திருமதி. சரஸ்வதி கணபதிப்பிள்ளை
286யா/உ/5109 திருமதி. பரமேஸ்வரி நவரத்தினம்
287யா/உ/5132 திரு. கதிரித்தம்பி நடராசா
288யா/உ/5154 திருமதி. இராசேஸ்வரி திருமேனி
289யா/உ/5156 திருமதி. சறோஜினிதேவி அப்புத்துரை
290யா/உ/5160 திரு. மயில்வாகனம்
இராஜசுப்பிரமணியம்
291யா/உ/5177 திரு. செல்லப்பா மார்க்கண்டு
292யா/உ/5197 திருமதி. சிவபாக்கியம் பொன்னம்பலம்
293யா/உ/5201 திரு. துரையப்பா செல்வநாயகம்
294யா/உ/5222 திரு. சண்முகம் செல்லர்
295யா/உ/5258 திரு. செல்லத்துரை சீவரத்தினம்
296யா/உ/5281 திருமதி. யோகமலர் நாகலிங்கம்
297யா/உ/5284 திரு. சின்னப்பு பிலேந்திரன்
298யா/உ/5293 திருமதி. புஸ்பராணி தர்மரட்ணம்
299யா/உ/5315 திரு. காசிப்பிள்ளை சந்திரசேகரம்
300யா/உ/5374 திரு. யோசேப் திருஞானம்
301யா/உ/5382 திரு. செல்லர் சங்கரலிங்கம்
302யா/உ/5383 திரு. இளையதம்பி பிரகாசம்
303யா/உ/5402 திருமதி. பவளம் இராசரத்தினம்
304யா/உ/5403 திருமதி. கனகம்மா இராசதுரை
305யா/உ/5409 திருமதி. சுந்தரம் நடேசு
306யா/உ/5410 திரு. மௌனலிங்கம் முத்தையா
307யா/உ/5425 திருமதி. இராசமலர் தர்மராசா
308யா/உ/5449 திருமதி. பரமேஸ்வரி வைத்ததீஸ்வரன்
309யா/உ/5477 திரு. அன்னதானம் தவப்பிரகாசம்
310யா/உ/5503 திருமதி. தங்கரத்தினம் கதிரவேலு
311யா/உ/5504 திருமதி. சிவக்கொழுந்து அருணாசலம்
312யா/உ/5567 திரு. கனகசேகரம் தெசராசசிங்கம்
313யா/உ/5568 திரு. ஆசிர்வாதம் றெயினோல் பீற்றர்
அன்ரனி
314யா/உ/5593 திருமதி. நவரத்தினம் தில்லைநாதன்
315யா/உ/5596 திரு. நாகம்பிள்ளை பாலசிங்கம்
316யா/உ/5606 திருமதி. இராசம்மா குலத்திங்கம்
317யா/உ/5620 திரு. இராசையா சுப்பிரமணியம்
318யா/உ/5625 திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி
319யா/உ/5659 திரு. மாணிக்கம் கந்தசாமி
320யா/உ/5663 திரு. சோமசுந்தரம் நடேசப்பிள்ளை
321யா/உ/5678 திரு. சீனிவாசகம் பாலகிருஷ்ணன்
322யா/உ/5683 திருமதி. ஞானேஸ்வரி அப்புத்துரை
323யா/உ/5691 திருமதி. இராசாத்தி மொசெஸ்
324யா/உ/5693 திருமதி. மகேஸ்வரி ஞானசுந்தரம்
325யா/உ/5716 திரு. துரையப்பா ஞானசேகரம்
326யா/உ/5726 திருமதி. இராசம்மா முருகேசு
327யா/உ/5749 திரு. இளையதம்பி கந்தையா
328யா/உ/5754 திருமதி. தங்கரத்தினம் பொன்னையா
329யா/உ/5775 திரு. சின்னப்பு வேலாயுதம்
330யா/உ/5778 திருமதி. பொன்னம்மா தம்பிஐயா
331யா/உ/5789 திருமதி. சரஸ்வதி நாகரத்தினம்
332யா/உ/5856 திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு
333யா/உ/5859 திருமதி. சின்னம்மா சிவசம்பு
334யா/உ/5876 திருமதி. அன்னம்மா கந்தசாமி
335யா/உ/5895 திரு. கையிலாயர் சண்முகநாதன்
336யா/உ/5900 திருமதி. சிவபாக்கியம் நமசிவாயம்
337யா/உ/5966 திருமதி. பூரணம் கிருஸ்ணன்
338யா/உ/5971 திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை
339யா/உ/5992 திருமதி. கண்மணி சபாரத்தினம்
340யா/உ/6006 திருமதி. இராஜசுந்தரம் பாலசிங்கம்
341யா/உ/6058 திரு. கந்தையா பாலசிங்கம்
342யா/உ/6075 திரு. தம்பாப்பிள்ளை வையிரவநாதன்
343யா/உ/6173 திருமதி. அன்னலட்சுமி காசிநாதன்
344யா/உ/6221 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
345யா/உ/6228 திரு. அருணாசலம் முருகையா
346யா/உ/6259 திருமதி. மனோன்மணி சிவபாதசுந்தரம்
347யா/உ/6315 திருமதி. சயரஸ்வதி வயித்திலிங்கம்
348யா/உ/6337 திரு. சோமசுந்தரஐயர்
பாலகிருஷ்ணசர்மா
349யா/உ/6346 திரு. சங்கரப்பிள்ளை யோகராசா
350யா/உ/6389 திருமதி. செல்வமலர் செல்வநாயகம்
351யா/உ/6412 திரு. மாணிக்கர் நடராசா
352யா/உ/6438 திருமதி. இரத்தனம் சற்குணம்
353யா/உ/6446 திரு. கணபதிப்பிள்ளை குமாரசாமி
ஞானமித்திரன்
354யா/உ/6449 திரு. பிறின்ஸ் முத்துவேல்
ஜெயரட்ணம் ரட்ணம்
355யா/உ/6456 திரு. சின்னையா இராசலிங்கம்
356யா/உ/6457 திருமதி. திலகவதி கனகநாயகம்
357யா/உ/6517 திருமதி. பாக்கியம் குமரையா
358யா/உ/6555 திருமதி. தங்கம்மா சின்னத்துரை
359யா/உ/6569 திருமதி. புவனேஸ்வரியம்மா
விஜயரத்தினம்
360யா/உ/6601 திருமதி. கமலேஸ்வரி
திருஞானசம்பந்தர்
361யா/உ/6614 திரு. செல்லையா சுப்பிரமணியம்
362யா/உ/6618 திரு. பொன்னையா மார்க்கண்டு
363யா/உ/6638 திரு. கதிரேசு சுப்பிரமணியம்
364யா/உ/6644 திரு. செல்லத்துரை இராசதுரை
365யா/உ/6663 திரு. யோசுவா மனோகரன்
366யா/உ/6689 திருமதி. பாக்கியம் இராஜசிங்கம்
367யா/உ/6709 திருமதி. சத்தியதேவி கிருபைரத்தினம்
368யா/உ/6800 திரு. நாகன் பொன்னுத்துரை
369யா/உ/6807 திருமதி. தங்கம்மா கனகசபை
370யா/உ/6879 திரு. வைத்திலிங்கம் அருளையா
371யா/உ/6881 திரு. சின்னப்பிள்ளை சுவாமிநாதன்
372யா/உ/6892 திருமதி. பார்வதி செல்லப்பா
373யா/உ/6923 திரு. வல்லிபுரம் சிவபாதம்
374யா/உ/6950 திரு. வர்ணகுலசிங்கம் ஜெகநாதன்
375யா/உ/7019 திருமதி. வள்ளிப்பிள்ளை வல்லிபுரம்
376யா/உ/7029 திரு. தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர்
377யா/உ/7030 திரு. முருகேசு சின்னையா
378யா/உ/7096 திரு. ஐயம்பிள்ளை நவரத்தினம்
379யா/உ/7100 திருமதி. தெய்வானைப்பிள்ளை
சண்முகநாதன்
380யா/உ/7174 திரு. முருகன் வைத்தியன்
381யா/உ/7181 திரு. நாகநாதர் வேலாயுதபிள்ளை
382யா/உ/7207 திருமதி. இராஜேஸ்வரி செல்வராசா
383யா/உ/7237 திருமதி. இராசம்மா மரியாம்பிள்ளை

### சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

1யா/ச/3 திருமதி. மனோரஞ்சிதம் சங்கரபிள்ளை
2யா/ச/55 திருமதி. ஆச்சிமுத்து அருளையா
3யா/ச/89 திரு. தம்பு துரைராஜா
4யா/ச/120 திரு. சீவரத்தினம் பரந்தாமன்
5யா/ச/135 திரு. கிருஸ்ணபிள்ளை இராமச்சந்திரன்
6யா/ச/137 திரு. சரவணமுத்து கனகரத்தினம்
7யா/ச/203 திருமதி. மாக்கிறேற் அறுக்காச்சி
8யா/ச/229 திருமதி. கனகரத்தினம்மா கந்தசாமி
9யா/ச/230 திரு. சம்மந்தர் சிவகுமாரன்
10யா/ச/268 திரு. வயித்திலிங்கம் பொன்னுத்துரை
11யா/ச/285 திரு. வினாசித்தம்பி தெய்வேந்திரராசா
12யா/ச/294 திரு. செல்லையா பாலரத்தினராசா
13யா/ச/369 திருமதி. நேசம்மா சின்னத்துரை
14யா/ச/397 திருமதி. ஆரியப்பூமாலை கந்தையா
15யா/ச/439 திருமதி. மனோரஞ்சிதம் சிவசம்பு
16யா/ச/441 திருமதி. விமலராணி பரராசசிங்கம்
17யா/ச/477 திருமதி. மகேஸ்வரி மாணிக்க சகர்
18யா/ச/501 திருமதி. பவளரத்தினம் தம்பிராஜா
19யா/ச/555 திருமதி. மகேஸ்வரி சுபக்கின்
20யா/ச/575 திரு. பெரியான் செல்லப்பு
21யா/ச/611 திரு. கனகரத்தினம் சின்னத்தம்பி
22யா/ச/612 திரு. சின்னவி ஆறுமுகம்
23யா/ச/616 திருமதி. பொடினோனா அப்புகாமி
24யா/ச/661 திரு. வினாயகமூர்த்தி அரியநாயகம்
25யா/ச/698 திரு. கந்தையா பரமலிங்கம்
26யா/ச/700 திரு. கந்தையா பரமலிங்கம்
27யா/ச/716 திரு. சின்னத்தம்பி கனகசிங்கம்
28யா/ச/728 திரு. சபாபதிப்பிள்ளை
தெட்ஷணாமூர்த்தி
29யா/ச/730 திரு. தம்பு குமாரசாமி
30யா/ச/735 திரு. டானிஸ் வீரசிங்கசிறில்
31யா/ச/737 திரு. சின்னப்பு நல்லையா
32யா/ச/756 திரு. செல்லையா செல்வராசா
33யா/ச/768 திருமதி. நாகேஸ்வரி வேல்முருகன்
34யா/ச/775 திரு. முருகர் பாலசிங்கம்
35யா/ச/806 திருமதி. பரமேஸ்வரி பஞ்சாட்சரம்
36யா/ச/808 திருமதி. தங்கரத்தினம் நவரத்தினம்
37யா/ச/819 திருமதி. இலட்சுமி நவரத்தினம்
38யா/ச/823 திரு. செல்லையா உமாபதி
39யா/ச/841 திரு. நாகலிங்கம் கனகரத்தினம்
40யா/ச/845 திரு. சின்னத்தம்பி நடராசா
41யா/ச/862 திருமதி. கனகமணி நவரட்ணம்
42யா/ச/902 திரு. சின்னப்பொடி இரத்தினம்
43யா/ச/919 திருமதி. கிருஸ்ணாம்பிகை நடராஜா
44யா/ச/929 திருமதி. கனகம்மா செல்லத்துரை
45யா/ச/955 திருமதி. பத்மாவதி குணசிங்கம்
46யா/ச/957 திரு. சிவசுந்தரம் கனகரத்தினம்
47யா/ச/1002 திரு. சிவகுருநாதன் அருட்பிரகாசம்
48யா/ச/1022 திரு. இராசரத்தினம் சிவபுரநாதர்
49யா/ச/1029 திரு. சிற்றம்பலம் தியாகராசா
50யா/ச/1052 திரு. தம்பையா நித்தியரட்ணம்
51யா/ச/1070 திரு. தில்லையம்பலம்
கதிரவேற்பிள்ளை
52யா/ச/1076 திரு. முத்தையா தங்கராசா
53யா/ச/1090 திருமதி. சிவபாக்கியம் பொன்னையா
54யா/ச/1136 திருமதி. நேசமலர் திருநாவுக்கரசு
55யா/ச/1144 திரு. கந்தசாமி நவரத்தினம்
56யா/ச/1150 திருமதி. நாகரத்தினம்மா கனகரத்தினம்
57யா/ச/1166 திருமதி. சறோஜா இராசலிங்கம்
58யா/ச/1167 திருமதி. செல்லம்மா இரத்தினசிங்கம்
59யா/ச/1196 திரு. விசுவலிங்கம் சரவணபவன்
60யா/ச/1207 திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்
61யா/ச/1274 திரு. கனகசுந்தரம் தேவதாசன்
62யா/ச/1285 திருமதி. மனோரஞ்சிதம்
வேலுப்பிள்ளை
63யா/ச/1300 திரு. தர்மசுதந்தரன் குலத்துங்கம்
64யா/ச/1304 திருமதி. பரமேஸ்வரி பொன்னையா
65யா/ச/1368 திருமதி. இராஜேஸ்வரி கனகரத்தினம்
66யா/ச/1385 திருமதி. நீலாம்பிகை விநாயகமூர்த்தி
67யா/ச/1407 திரு. இராசசுந்தரம் அனாதரட்சகன்
68யா/ச/1425 திருமதி. மனோன்மணி
வேலாயுதம்பிள்ளை
69யா/ச/1439 செல்வி. ஸ்ரெலா செல்வமணி
செல்லத்துரை
70யா/ச/1453 திரு. செல்லத்துரை தருமலிங்கம்
71யா/ச/1459 திருமதி. மரகதம் நடராசா
72யா/ச/1463 திருமதி. பதுமநிதி சோமலிங்கம்
73யா/ச/1487 திருமதி. மகேஸ்வரிதேவி
கதிர்காமராசா
74யா/ச/1523 திருமதி. செல்லம்மா ஆறுமுகம்
75யா/ச/1526 திரு. சதாசிவம் கலியுகவரதன்
76யா/ச/1543 திரு. கார்த்திகேசு சிதம்பரநாதன்
77யா/ச/1544 திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
78யா/ச/1561 திருமதி. தனலட்சுமி சண்முகநாதன்
79யா/ச/1591 திரு. தம்பு துரைச்சாமி
80யா/ச/1651 திரு. கதிரவேலு மகாதேவா
81யா/ச/1667 திருமதி. கனகாம்பிகை மயில்வாகனம்
82யா/ச/1715 திரு. குமாரவேலு சுந்தரம்பிள்ளை
83யா/ச/1718 திருமதி. நாகம்மா நன்னித்தம்பி
84யா/ச/1767 திரு. நடராசா சிவானந்தன்
85யா/ச/1784 திரு. நாகலிங்கம் வீரசிங்கம்
86யா/ச/1795 திரு. சரவணமுத்து குமாரவேல்
87யா/ச/1880 திரு. இராமநாதர் சோதிலிங்கம்
88யா/ச/1898 திருமதி. நாகம்மா இராசா
89யா/ச/1923 திருமதி. மகேஸ்வரி வேலுப்பிள்ளை
90யா/ச/1949 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்
91யா/ச/1956 திருமதி. பூரணம் நடராசா
92யா/ச/2008 திருமதி. தங்கம்மா வடிவேலு
93யா/ச/2015 திருமதி. நாகம்மா ஐயாத்துரை
94யா/ச/2046 திருமதி. பொன்னம்மா கந்தையா
95யா/ச/2066 திருமதி. லட்சுமியார் சபாரத்தினம்
96யா/ச/2087 திரு. ஆறுமுகம் பாலகிருஷ்ணன்
97யா/ச/2092 திரு. ஆறுமுகம் நடராசா
98யா/ச/2106 திருமதி. செல்லாச்சி கிருஷ்ணர்
99யா/ச/2114 திரு. சதாசிவம் கணேசன்
100யா/ச/2146 திரு. கணபதிப்பிள்ளை சரவணமுத்து
101யா/ச/2154 திரு. கனகரத்தினம் பரமசிவம்
102யா/ச/2162 திருமதி. ஞானாம்பிகை
குருநாதப்பிள்ளை
103யா/ச/2190 திருமதி. பறுவதம் கதிரவேலு
104யா/ச/2201 திருமதி. சரஸ்வதியம்மா வரதராஜா
105யா/ச/2212 திரு. நாகர் காசிப்பிள்ளை
106யா/ச/2230 திருமதி. தங்கம்மா கணேசன்
107யா/ச/2274 திரு. முருகேசு சண்முகநாதன்
108யா/ச/2284 திருமதி. சுகிர்தமலர் பரமசாமி
109யா/ச/2293 திருமதி. ஞானேஸ்வரி
தெய்வேந்திரநாதன்
110யா/ச/2310 திரு. துரையப்பா நவரத்தினம்
111யா/ச/2322 திருமதி. கனகபூஷனம் சுப்பையா
112யா/ச/2326 திருமதி. பராசக்தி குருபரன்
113யா/ச/2330 திரு. கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்
114யா/ச/2345 திரு. மாதவர் கோவிந்தர்
115யா/ச/2371 திருமதி. இராமலிங்கம் சிவகாமன்
116யா/ச/2386 திருமதி. விமலா சிவசற்குணனந்தன்
117யா/ச/2392 திருமதி. திலகஞானம் ராஜேஸ்வரன்
118யா/ச/2479 திரு. பொன்னையா குலவீரசிங்கம்
119யா/ச/2481 திருமதி. மங்கையற்கரசி சண்முகராசா
120யா/ச/2547 திருமதி. நாகம்மா துரை
121யா/ச/2651 திரு. வேலுப்பிள்ளை நமசிவாயம்
122யா/ச/2662 திருமதி. யோகேஸ்வரி துரைராஜா
123யா/ச/2702 திரு. கந்தர் மாணிக்கம்
124யா/ச/2714 திரு. சின்னையா சோமசுந்தரம்
125யா/ச/2726 திருமதி. முத்துநாயகி இரத்தினசபாபதி
126யா/ச/2758 திருமதி. பூபதி இராசலிங்கம்
127யா/ச/2787 திரு. சுந்தரம் சுப்பிரமணியம்
128யா/ச/2789 திரு. முத்துக்குமாரு குழந்தைவேலு
129யா/ச/2861 திரு. ஆறுமுகம் குருலிங்கம்
130யா/ச/2862 திருமதி. பேரின்பவல்லி சரவணமுத்து
131யா/ச/2869 திரு. காசிப்பிள்ளை பொன்னுத்துரை
132யா/ச/2918 திருமதி. இராசலட்சுமி சண்முகநாதன்
133யா/ச/2920 திரு. சுப்பிரமணியம் தியாகராசா
134யா/ச/2991 திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை
135யா/ச/3034 திருமதி. மனோன்மணி பாலசிங்கம்
136யா/ச/3055 திரு. கந்தையா கதிரவேல் ஐயா
137யா/ச/3058 திருமதி. பரமேஸ்வரி கனகரத்தினம்
138யா/ச/3083 திருமதி. சிந்தாமணி சின்னத்துரை
139யா/ச/3105 திருமதி. வேதமணி
கோபாலகிருஷ்ணன்
140யா/ச/3112 திருமதி. தேவநாயகி இராசையா
141யா/ச/3117 திரு. கந்தையா சுப்பிரமணியம்
142யா/ச/3146 திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம்
143யா/ச/3154 திருமதி. பாக்கியம் சின்னவன்

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த நிவாரணப் பொருள்களின் களஞ்சியங்கள் அடிக்கடி தீப்பிடித்து எரிந்து நாசமாவதன் மர்மம் என்ன?

## ரணில் ஜனாதிபதியானதும் விசாரிக்க ஆணைக்குழு என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,நவ.1

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக கிடைத்த பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் முடக்கிவைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலைகள் இரண்டு தீப்பிடித்து எரிந்ததின் மர்மம் என்ன? அங்கு இடம் பெற்ற ஊழல் மோசடிகளை மூடி மறைப்ப தற்காகவே இந்தக் களஞ்சியசாலைகளுக்கு எரியூட்டப்பட்டிருக்கலாம்.

- இப்படி ஐக்கிய தேசியக் கட்சி சந் தேகம் எழுப்பி உள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பாகப் பாரபட்ச மற்ற முறையில் விசாரணை நடத்தி உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும் என்றும் ஐ.தே.க. வலியுறுத்தியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவ ரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே இத னைத் தெரிவித்தார். அங்கு அவர் கூறிய தாவது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு என உலக நாடுகளில் இருந்து கிடைத்த பல கோடி ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்ட மக் களுக்கு வழங்கப்படாமல் பல்வேறு இடங் களில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் எந்த ஒரு பேரலைப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், நிவாரணப் பொருள்கள் அங்கு ஓர் அரசி யல்வாதியினால் முடக்கி வைக்கப்பட்டிருந் தன. இவ்விடயம் தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்ட சமயத்தில் அந்தப் பொருள்கள் முடக்கி வைக்கப்பட் டுள்ள களஞ்சியசாலை திடீரென தீ பிடித்து எரிந்து சாம்பலானது.

அதேபோன்று அம்பலாங்கொடையில் நிவாரணப் பொருள்கள் முடக்கிவைக்கப் பட்டிருந்த களஞ்சியசாலையும் அண்மை யில் தீக்கிரையாகி உள்ளது.

தொடர்ச்சியாக இப்படி களஞ்சியசாலை கள் மட்டும் தீப்பற்றி எரிவது மக்கள் மத்தி யில் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் பசி, பட்டினியால் அகதி முகம்களில் கஷ்டப்படுகின்றனர். ஆனால், பல கோடி பெறுமதியான பொருள் கள் தீக்கிரையாகின்றன. அங்கு இடம்பெற்ற மோசடிகளை மூடிமறைப்பதற்காகவே களஞ் சியசாலைகள் இவ்வாறு எரியூட்டி அழிக்கப் படுகின்றன.

அதேவேளை, நிவாரணப் பொருள் களைக் கொண்டுவந்த கப்பல்களில் இருந்து இறக்கப்பட்ட கொள்கலன்கள் அப்படியே இருக்கின்றன. அவற்றிலுள்ள பொருள்கள் இன்னும் அகற்றப்படாமல் தேங்கிக்கிடக் கின்றன.

இதனால், இப்பொருள்களுக்கான தேக் கக் கட்டணமாக இருபதுக்கும் மேற்பட்ட கொள்கலன்களுக்கு மாதாந்தம் தலா பத்தா யிரம் ரூபாவை அரசு செலுத்திவருகின்றது. அதேசமயம், உள்ளே கிடந்த பொருள்கள் பழுதடைந்து போயுள்ளன.

இதேபோன்றுதான் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாகக் கிடைத்த சுமார் எட்டரைக் கோடிரூபாவைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முடக்கிவைத்தார். ஆனால், அம் பாந்தோட்டை மக்கள் பட்டினி கிடக்கின் றனர். இதற்கெல்லாம் நவம்பர் 17ஆம் திகதி விமோசனம் கிடைக்கும். ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியானவுடன் ஆழிப்பேரலை மோசடிகள் தெடர்பான விசாரணைக் கமி ஷன் ஒன்றும் உருவாக்கப்படும் - என்றும் காமினி லொக்குகே எம்.பி. கூறினார். (க)

## மட்டக்களப்பில் குண்டுவெடிப்பு; இரண்டு பெண்கள் காயம்!

கொழும்பு, நவ.1

மட்டக்களப்பு ஆரயம்பதியில் வீடொன் றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அங்கி ருந்த இரு பெண்கள் காயமுற்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்றவர்கள் நவரத்தினம் புஸ்பமாலா (வயது -34), நவரத் தினம் ஜெசிந்தா (வயது -16) என்று கூறப் படுகின்றது. காயமுற்ற இரு பெண்களும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பின் பின்னணி பற் றித் தாம் விசாரணை நடத்தி வருகிறார்கள் என்றும் -

இதுவரை இதற்கான காரணம் என்ன வென்று தெரியவில்லை என்றும் - காத்தான் குடிப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

# துணைப்படைக் குழுக்களை விலக்க ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை!

கொழும்பு,நவ.1

ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங் கும் ஆயுதக் குழுவினரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அனுமதிக்கக்கூடாது. அவர் களை அப்புறப்படுத்தவேண்டும் என்று இலங் கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்த பரிந்துரையை ஸ்ரீலங்கா ஜனாதி பதி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படு கொலை மற்றும் அக்காலத்தில் கிழக்கில் இடம்பெற்ற வன்முறைகள் ஆகியவை குறித்து விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி யினால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை கள் கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக் கப்பட்டது. அதில் ஆயுதக் குழுக்களை விலக்குவது தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புத் தலைவர் ஸ்டீன் ஜோர்ஜென்சென் தெரிவித் திருந்த கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளன.

இருப்பினும் இந்தக் குழு குறிப்பிடத் தக்க எந்தப் பரிந்துரையையும் ஜனாதி பதிக்கு அளிக்கவில்லை என்று கூறப்படு கின்றது.

அரச இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரால் கௌசல்யன் படுகொலை செய் யப்பட்டிருக்கும் நிலையில், அந்த ஸ்ரீலங்கா இராணுவத்தை இயக்குகின்ற ஸ்ரீலங்கா ஜனாதிபதி அமைத்துள்ள ஆணைக்குழு விடம் நீதியான விசாரணையை எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்து தமிழீழ விடு தலைப் புலிகள் இந்த ஆணைக் குழுவை நிராகரித்திருந்தனர்.

அதேபோல், மட்டக்களப்பு - அம்பாறை தமிழ் மக்களும் இந்தஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளைப் புறக்கணித் தனர்.

இதனால், கௌசல்யன் கொலை தொடர் பாக ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பு மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரது கருத்துகளை மட்டுமே ஆணைக்குழுவால் பெறமுடிந்தது.

இதைச் சுட்டிக்காட்டும் ஆணைக்குழு வினது வட்டாரங்கள் இந்தக் காரணங்களால் ஆணைக் குழுவினர் இறுதியான எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை என்று கூறு கின்றன.

இருப்பினும், இருதரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க வேண் டும். இருதரப்பினரும் யுத்தநிறுத்த மீறல் களில் ஈடுபடுகின்றனர் என்ற பொதுவான கருத்துகளை அந்த ஆணைக்குழு தெரிவித் துள்ளது என்று கூறப்படுகிறது. (க)

## மன்னாரில் கைதி ஒருவர் தப்பி ஓட்டம்

மன்னார் சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அங்கிருந்து தப்பியோடியுள்ளார் .

தப்பியோடியவர் மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த செபஸ்டியான் பிகிறாடோ என்பவராவார். மேற்படி நபர் தப்பியோடியது தொடர்பாக மன்னார் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி மன்னார் பொலீஸ் தலைமையகத்துக்கும் மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கும் அறிவித்துள்ளார். தப்பியோடிய கைதியைத் தேடிப் பொலீஸார் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், அவர் விரைவில் மீண்டும் கைதுசெய்யப்படுவார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் மூன்று கிராம் ஹெரோயின் போதைவஸ்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு கடந்த ஒருவருட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்றும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது மேலும்14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய சந்தேக நபரை மீண்டும்அநுராதபுரச் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்ல இருந்தபோதே அவர் தப்பியோடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எம்.பி. அஞ்சான் உம்மாவோ ஜே.வி.பியில்; ஆனால் குடும்பத்தவரோ ரணிலின் பக்கம்!

ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் உறுப் பினரும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவரு மான அஞ்சான் உம்மாவின் குடும்பத்த வரும் உறவினரும் ஐ.தே.கட்சியின் ஜனாதி பதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க வைத் தாங்கள் ஆதரிக்கிறார்கள் எனத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரின் தாயும், இரு சகோதரிகளும் அவரின் சகோ தரரும், உறவினருமே இந்தத் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துள்ளனர் எனத் தெரிவித் தனர். அஞ்சான் உம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரரான சுஹைர் ஜே.வி.பியினரின் போக்கையும் அரசியல் நிலைப்பாட்டையும் தாமும் விரும்பவில்லை என்றும்

அவர்களின் அரசியல் போக்கால் தாங் கள் மனமுடைந்துள்ளனர் என்றும் - செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்தார். (க)

## அமைச்சர் ஜெயராஜின் விளக்கத்தை ஜனாதிபதி கோரவேயில்லையாம்!

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தொடர்பில் தாம் தெரிவித்தவை எனக் கூறப் படும் கருத்துகள் குறித்து ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க தம்மிடம் விளக்கங்கள் எதனையும் கோரவில்லை என்கிறார் அமைச் சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

அமைச்சர் ஜெயராஜ் கட்சியின் கொள்கை, கோட்பாடுகளை மீறிச் செயற்பட்டும், கருத் துகளை வெளியிட்டும் வருவதால் அவரிட மிருந்து ஜனாதிபதி விளக்கம் கோரியி ருக் கிறார் எனச் செய்திகள் வெளிவந்திருந்தன.

இது குறித்து நேற்றுமுன்தினம் 'உதயனு' க்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜெய ராஜ், இவ்வாறான விளக்கம் எதனையும் தன்னிடம் கோரவில்லையென்றும், அப்படி கோரப்படும் பட்சத்தில் அவற்றுக்கு விளக்க மளிக்கத் தாம் எப்போதும் தயாராகவே இருக்கிறார் என்று கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அடுத்த பிரதமர் பதவிக்கு அநுராவை அல்லாமல் வேறு ஒருவரை முன்நிறுத்த வேண்டும் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறினார் எனத் தெரிவிக்கப்படும் கருத்துகள் குறித்து அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா, கட்சித்தலைவியும், ஜனாதிபதியுமான தமது சகோதரி சந்திரிகா குமாரதுங்கவிடம் முறைப்பாடு செய்துள்ளார் என்பதும் -

அது தொடர்பாகவே ஜனாதிபதி சந் திரிகா, அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே யிடம் விளக்கம் கோரியிருக்கிறார் என சில செய்தி நிறுவனங்கள் நேற்று செய்தி வெளி யிட்டிருந்தன என்பதும் - குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் சிகிச்சை பெற்ற போராளி உயிரிழந்தார் எனத் தவறான செய்தி!

## கண்காணிப்புக் குழு விசனமாம்

கொழும்பு,நவ.1

கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த தமி ழீழ விடுதலைப் புலிகளின் போராளி ஒரு வர் உயிரிழந்தார் என இலங்கை அரச தொலைக்காட்சியான 'ரூபவாஹினி' செய்தி வெளியிட்டதற்குப் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழு கடும் விசனத்தை வெளிப் படுத்தியுள்ளது.

வவுணதீவுப் பகுதியில் தமிழீழ விடு தலைப் புலிகளின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல் முயற்சியை முறியடித்த போது போராளி ஒருவர் படுகாயமடைந் தார்.

பின்னர் அவர் கொழும்பில் உள்ள அப் பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த நிலையில் கடந்த ஒக்ரோபர் 13ஆம் நாளன்று அந்தப் போராளி உயிரிழந்தார் என்று ரூபவாஹினி செய்தி வெளியிட்டது. ஆனால், அவர் உயி ருடன்தான் உள்ளார். ஸ்ரீலங்கா அரசின் தொலைக்காட்சி இத்தகைய செய்தியை ஏன் வெளியிட்டது என்று போர்நிறுத்தக்கண் காணிப்புக் குழு அதிருப்தி வெளியிட் டிருக்கிறது.

இது தொடர்பில் அரசின் சமாதான செய லகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடனும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் விவாதித்திருக்கிறார்.

இதையடுத்து பிரதி ஊடகத்துறை அமைச் சர் டிலான் பெரேராவுக்கு ரூபவாஹினியின் செய்தி குறித்து கடுமையான குற்றச்சாட்டு களுடன் ஜயந்த தனபால கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என சில செய்தி வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

ஆனால், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் குற்றச்சாட்டை ரூபவாஹினியின் தலைவர் எம்.எம். சுஹைர் மறுத்துள்ளார். அப்படியான செய்தி எதையும் ஒக்ரேடாபர் 13ஆம் திகதி தாங்கள் ஒளிபரப்பவில்லை என்றும் தாக்குதல் குறித்த செய்திகள் மட் டுமே ஒளிபரப்பப்பட்டன என்றும் அவர் கூறி யுள்ளார்.

ரூபவாஹினியின் செய்தித் தொகுப்பு கள் மூன்று மொழிகளில் உள்ளன. இதை எப்போது வேண்டுமானாலும் கண்காணிப் புக் குழு ஆய்வுசெய்துகொள்ளலாம் என் றும் கூறிய அவர், தனியார் ஊடகம் ஒன்று வெளியிட்ட செய்தியின் அடிப்படையில் இத் தகைய குற்றம் சாட்டப்படுவதாகவும் தெரி வித்தார்.

## பொலன்னறுவையில் கொடூரம்:

# அயர்ந்து தூங்கிய இளம் தம்பதியர் பெற்றோல் ஊற்றி எரித்துக் கொலை!

பொலனறுவை, கதுருவெல பரகும் பிளேஸில் வீடொன்றில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த இளம் தம்பதியர் மீது திடீ ரெனப் பெற்றோல் ஊற்றி நெருப்பு வைக்கப் பட்டது. இதில் அந்த இளம் தம்பதியினர் உயிரிழந்தனர். அவர்களின் ஒரே பிள்ளை யான நான்கு வயதுக் குழந்தை, அதிக எரி காயங்களோடு ஆபத்தான நிலையில் வைத் தியசாலையில் உயிருக்குப் போராடிக் கொண் டிருக்கிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றிருக்கின்றது.

இப்படுகொலைக்குத் தனிப்பட்ட பகை மையே காரணம் என்று பொலீஸார் தரப்பில் சந்தேகிக்கப்படுகின்றது.

நள்ளிரவுவேளை அறைக்குள் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது ஜன்னல் வழியாக திடீரென பெருமளவு பெற்றோலை ஊற்றி தீவைக்கப்பட்டிருக்கின்றது.

படுகாயமுற்ற இளம் சிங்கள தம்பதி யினரும் அவர்களின் ஒரே குழந்தையும் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட் டனர். இளம் தம்பதியினர் அங்கு உயிரிழந் தனர். குழந்தை உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது.

இது ஜன்னல் வழியாக நடத்தப்பட்ட கிர னேட் தாக்குதல் என்று செய்தி நிறுவனம் ஒன்று அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம்
## CENTER FOR HEALTH CARE

C.H.C

Reg No. L-85305

### பணிநிலைக்கான வெற்றிடங்கள்

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் கிளிநொச்சியில் அமைந்திருக் கும் தலைமைப்பணிமனையில் கடமையாற்றுவதற்கு ஏற்றதாக கீழ்க் காணும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் இப்பணிநிலைகளுக்கு தங்கள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் தகுதிகளுக்குமைய 10-11-2005 இற்கு (வியாழக்கிழமை) முன்னதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

### பணிநிலைகள்

**1. நிர்வாக உத்தியோகத்தர்**

தகுதி

a) அரச , அரசசார்பற்ற நிறுவனங்களில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய அனுபவம்
b) ஆங்கிலம் எழுத, வாசிக்க, கடிதங்கள் வாசிக்க, தயாரிக்க, வெளி நாட்டுத் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.
c) கணனி அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
d) வயதெல்லை - 40 இற்கு மேற்பட

**2. திட்ட உதவியாளர்**

தகுதி

a) குறைந்தது 2 வருடம் திட்ட முன் மொழிவுகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
b) கணனியில் Ms Office இல் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றிருத் தல் வேண்டும்.
c) தமிழிலும் ஆங்கிலத்திலும் திட்ட முன் மொழிவுகள் தயாரிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
d) சுகாதாரம் பற்றிய அடிப்படை அறிவு இருத்தல் விரும்பத்தக்கது

*நலமான சமூகத்தை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்*
''Working to gether for a Healthier community''

**தலைமைப் பணிமனை: கிளிநொச்சி, இலங்கை**
**தொலைபேசி/ தொலைநகல்: 021 228 5884,**
மின்னஞ்சல்: chc- hq - ne@hotmail.com
(சி-46015)(21-11-34)
Head Office ChC Kilinochchi, Sri Lanka
Telephone/Facsimile: 021 228 5884 E-mail chc-hq-ne@ hotmail.com

### ஜனாதிபதித் தேர்தல் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-204)

* * *

யாழ்ப்பாணம்,நவ.1

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகக் கடமை புரிய உள்ளவர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மூன்று அமர்வுகளாக யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் கேட்டுள்ளார்.

(எ-204)

### அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் பொதுச்சபை (உபயகாரர்)
### கூட்டம் ஒத்திவைப்பு

06.11.2005 அன்று நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றோம்.

(42265)(21.11.34) **தர்மகர்த்தாக்கள் சபை.**


# UNIT

Proudly with Indian experienced Technology

**P4 Complete Set @ Colombo Price**

* Genuine warranty Replacement
* One 2 One replacement
* No Charges for warranty Claims

**FREE : UPS, SCREEN FILTER, DUSTCOVER, MOUSE PAD & ETC.**

347, K.K.S. Roacd, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720, 0773134737


### இனிய நெஞ்சங்களே!

*நன்றி கூற வார்த்தைகள் இல்லாததால் வணங்கி நிற்கிறோம்.*

## செல்வி போசேந்திராதேவி கந்தசாமி

(முன்னாள் ஆசிரியை யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஓய்வுபெற்ற அதிபர் யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து 29.10.2005, 30.10.2005 ஆகிய இரு தினங்களும் நேரில் வந்து அஞ்சலி செலுத்திப் பங்கு பற்றிய அனைத்து இதயங்களையும் குறிப்பாக யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை, யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவ சமூகத்தினர், வலயக் கல்வி அதிகாரிகள், லயன்ஸ் கழக அங்கத்தவர்கள், இரங்கலுரை நிகழ்த்திப் பெருமைப்படுத்தியவர்கள் சிறப்பாக பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர், அணிநடை வாத்திய மாணவிகள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் ஈரமான விழிகளுடன் நெஞ்சின் அலையான அன்பின் நினைவுகளோடு.......

**செல்வி போசேந்திராதேவி கந்தசாமியின்**
**உறவுகளாகிய நாங்கள்**

பூநாரி மரத்தடி,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(42266)(42-21-11-34)

### தமிழீழ மாவட்ட மன்று - முல்லைத்தீவு

வழ.இல:- 18/04
தன்மை:- பிரிவிடல்,

திரு.மு.சுப்பிரமணியம்,
திருமதி சு.புவனேஸ்வரி,
5ஆம் வட்டாரம்,
குமுழமுனை, முள்ளியவளை.
வழக்காளிகள்

எதிர்

1. திரு.அம்பலவாணர்பிள்ளை வைரவநாதஐயா, தண்ணீரூற்று, முள்ளியவளை.
2. அம்பலவாணர்பிள்ளை, [illegible]ணைசையா

மற்றும் 07 பேரும்.

எதிராளிகள்

**அறிவித்தல்**

கீழ்க்காணும் ஆதன டாப்பில் நன்கு விவரிக்கப்படும் ஆதனமானது பிரிவிடல் செய்வதற்காக வழக்கிடப்பட்டுள்ளது. இவ்வாதனத்தில் அக்கறையுடையவர்கள் எவரும் இருப்பின் இவ்வறிவித்தல் கிடைத்து 21 நாள்களுக்குள் முறைப்படி நீதிமன்றில் தோன்றி ஏற்புடைய நடவடிக்கைகளினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**ஆதன விவரம்**

வடமாகாணம் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைபற்று பிரதேசம், கரிக்கட்டுமூலை தெற்கு, இறை குமுழமுனை கிழக்கு கிராம சேவகர் பிரிவு, காட்டாமணக்கடி வளவு உத்தேசம் 1¼ ஏக்கர் எல்லைகள் கிழக்குத் தெரு - வடக்கு ஒழுங்கை தெற்கு சிற்றம்பலம் மறுபேருக்குரிய ஆதனம் மேற்கு வழக்காளி தரப்புக்குரிய ஆதனம் இவையும் இவையடங்கலும் பிரிவிடல் செய்யப்படாத ஆதனம்.

*நீதிமன்றின் கட்டளைப்படி*

*வழக்காளி சட்டவாளர்*
K.A. அற்புதராஜா
சட்டவாளர்,
மாவட்ட நீதிமன்று,
முல்லைத்தீவு.

**பதிவாளர்**
தமிழீழ நீதிமன்று
முல்லைத்தீவு.

(சி/46017)(32-21-11-34)


**Panasonic**
ideas for life

# நீர் இறைக்கும் இயந்திரம்

இதயங்கனிந்த நல் தீபாவளி வாழ்த்துகள்

விசேஷ அம்சங்கள்
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



***Model GP-200JA**
இயந்திரவலு 200W
வெளிப்பாய்ச்சல் வலு 45 liter/min (Max)
உயர வலு 35 meters (Max)

***Model GP-125JB**
இயந்திரவலு 125W
வெளிப்பாய்ச்சல் வலு 30 liter/min (Max)
உயர வலு 30 meters (Max)

***Model A-200JAE**
*(Auto pressure pump)*
இயந்திரவலு 200W
அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு Max 45 L/min
உயர வலு Ht12m 29 L/min
அழுத்த ஆளியுடன் Max 19 meter
அழுத்த ஆளிஇன்றி Max 35 meters
ON 1.1kgf/cm2
OFF 1.8 kgf/cm2

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®

* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்

**கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்**

காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: [illegible]
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் அதிகாலை வேளைகளில் வழிப்பறி

## பயணிகள், வியாபாரிகள் தரப்பில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,நவ.1

வடமராட்சி பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் சனநடமாட்டமற்ற பகுதியில் அண்மைக்காலமாக வழிப்பறித் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் கொடிகாமம் சந்தைக்கு தேங்காய் எடுத்துவருவதற்காக சென்ற ஒருவரை வழிமறித்த மூவர் அவரிடமிருந்து 7 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப்பணம், கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை அபகரித்துச் சென்றதுடன், தம்மைப் பின் தொடரக் கூடாதென எச்சரிக்கையும் செய்துவிட்டு ஓடிமறைந்துவிட்டனராம்.

தேங்காய் வியாபாரியான பருத்தித்துறை வி.எம். வீதியைச் சேர்ந்த சுசீதரன் என்பவரிடமே இந்த வழிப்பறி இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

அன்றைய தினம் அதிகாலை 5 மணிக்கு மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட மேற்படி வியாபாரி முள்ளிச் சந்தியை அண்மித்ததும் திடீரென குறுக்கே மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் அவரை நிறுத்தி கழுத்துப் பகுதியில் கத்தியை வைத்தவாறு வெட்டிப் போடுவோம் என்று மிரட்டியதுடன் -

பணத்தை எடு எனக் கேட்டு அவர் தேங்காய் வாங்கக் கொண்டுசென்ற அப்பணத்தை எடுத்துக்கொண்டதுடன், அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசியை எடுத்து அதிலிருந்த 'சிம்'மை எடுத்து தேங்காய் வியாபாரியிடம் கொடுத்துள்ளனர். அத்துடன், தம்மைத் தொடர்ந்தால் வெட்டிப்போடுவோம் என்றும் - எச்சரித்து விட்டு கொடிகாமப் பக்கமாகச் சென்று மறைந்து விட்டனராம்.

இதேவேளை- கடந்த சில தினங்களுக்கு முன்னர் இதே வீதியில் இதே இடத்திலிருந்து வரணிப் பக்கமாக சற்றுத் தூரம் தள்ளி பிரதான வீதியூடாகச் சென்ற நபர் ஒருவரை இனந்தெரியாதோர் மிரட்டியதாகவும் - அவரிடம் பணம் எதுவும் இல்லாததையடுத்து அவர் தப்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டார் என்றும் -

இதற்கு முன்பும் இரு தடவைகள் இது போன்ற சம்பவங்கள் குறித்த வீதியில் இடம்பெற்றன என்றும் -

இவை அனைத்தும் கடந்த ஒரு மாதப் பகுதிக்குள் இடம்பெற்றுள்ளன என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சம்பவங்களை அடுத்து மேற்படி வீதியூடாக அதிகாலை வேளைகளில் பயணிக்க வியாபாரிகளும் பொதுமக்களும் அஞ்சுவதாகவும் கூறப்பட்டது. (எ-15)

# நலிவுற்ற குடும்பங்களுக்கு மீண்டும் நிவாரண முத்திரை

வலி.மேற்கு,நவ.1

யாழ். மாவட்டத்தில் வறுமையான நலிவுற்ற குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு நிவாரண முத்திரைகள் மீண்டும் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது இடம் பெயர்ந்த குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய சகல குடும்பங்களுக்கும் இலவச உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் விநியோகிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண முத்திரைகளும் ஆயிரக்கணக்கான வசதிகளற்ற வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள வருமானம் குறைந்த - வசதிகளற்ற, நலிவுற்ற குடும்பங்களை இனங்கண்டு விவரங்களை அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர்களுக்குப் பணித்துள்ளார்.

நலிவுற்ற குடும்பங்களுக்கு ஆறுமாதங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரண முத்திரைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (த-175)



*மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக்கிளை பண்டத்தரிப்பு - பிரான்பற்று முருகன் ஆலயத் திருவிழா காலத்தில் ஆலயச் சூழலில் நடமாடும் வங்கிச் சேவையை நடத்தியது. மேற்படி நடமாடும் சேவையில் வங்கிக் கணக்கை ஆரம்பித்த சிறுமி ஒருவருக்கு வங்கி முகாமையாளர் ப.சச்சிதானந்தன் 'ரிதிரேகா' சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.* (எ-185)




## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.1

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் 'இந்து விழிப்பு பல் கலைச்சங்கமம்' எனும் நிகழ்வு இடம்பெறும். (எ-173)

## கந்தசஷ்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.1

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டி திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 7 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி சூரன் தலையாட்டும் நிகழ்வும், 7 ஆம் திகதி சூரசங்காரமும் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெறும். (எ-203)

* * *

கோப்பாய்,நவ.1

வல்வெட்டித்துறைத் தீருவில் வயலூர் சுப்பிரமணிய சுவாமிகள் ஆலய கந்த சஷ்டிப் பெருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 6 நாள்கள் நடைபெறவுள்ளது.

கந்தசஷ்டி காலங்களில் காலைப் பூசை முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கு அபிசேகப் பூசையும் நடைபெறும்.

தினமும் மாலை 4.30 மணிக்கு கந்தவேள் கருணை என்னும் தலைப்பில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் தொடர் சொற்பொழிவாற்றுவார். (எ-72-203)

* * *

புங்குடுதீவு,நவ.1

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயிலில் நாளை புதன்கிழமை கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகி எதிர்வரும் 7ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் இடம்பெறும்.

6ஆம் நாளன்று சூரசங்காரமும் மறுநாள் திருக்கல்யாணமும் நடைபெறும். (எ-ரி-203)

* * *

வடமராட்சி,நவ.1

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி ஆலய கந்தசஷ்டி நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 7 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் கந்தசஷ்டி விரதம் நிறைவடையும். (எ-173-203)

## ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

குடத்தனை,நவ.1

அல்வாய் வடக்கு, நக்கீரன் சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் தீபாவளி தினமான இன்று பிற்பகல் 2 மணிக்கு நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டியில் இல்லங்களுக்கிடையிலான போட்டிகள், வெளிக்கழகங்களுக்கிடையிலான போட்டிகள், பார்வையாளர்களுக்கான போட்டிகள் என மூன்று வகையாக போட்டிகள் நடைபெறும். (எ-78)

# கல்மடுக்குள ஆற்றுப்படுக்கையில் தொல்பொருள் சான்றுகள் பல மீட்பு

பரந்தன்,நவ.1

கல்மடுக்குள ஆற்றுப்படுக்கையில் தொல்பொருள்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்மடுக்குள நிலையாற்றுப் படுக்கையான நெத்தலியாற்றுப் படுக்கையிலேயே இந்தத் தொல்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆற்றுப்படுக்கையில் மணல் அகழ்வை மேற்கொள்ளும்போது தொல்பொருள்கள் பல வெளிக்கிளம்பியுள்ளன.

மணல் அகழ்வின்போது காணப்பட்ட சில தடயங்களை இனங்கண்ட த.சுகிர்தன் என்னும் மாணவன் இதுதொடர்பாகக் கிளிநொச்சி அரும்பொருள் காப்பு நடுவத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து நடுவப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் தலைமையிலான குழுவினர் மேற்படி ஆற்றுப்படுக்கையில் ஆய்வினை மேற்கொண்டனர். அதன்போது தொன்மை வாய்ந்த பல சுடுமண் பொருள்கள், உருவச் சிலைகள், மூதாதையர் பாவித்த பொருள்கள் எனப் பல தொல்பொருள்கள் மீட்கப்பட்டன.

இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவரான த.சுகிர்தனை நடுவத்தினர் பாராட்டியுள்ளனர்.

இதேவேளை -

தமிழீழப் பிரதேசத்தில் தொல்பொருள்கள் பற்றிய தகவல்களோ தடயங்களோ தென்பட்டால் அது தொடர்பாகக் கிளிநொச்சியிலுள்ள அரும்பொருள் காப்பக நடுவப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு என்று அரும்பொருள் காப்பு நடுவப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (எ-352-202)



*கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களில் சிலவற்றையும் தொல்பொருள் ஒன்றை மாணவன் த.சுகிர்தன் வன்னி தொல்லியல் தேடல்குழு உறுப்பினர் பெ.தெய்வேந்திரத்திடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.* *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

## மதியாமடுவில் மருத்துவமுகாம்

நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினரின் ஒழுங்குபடுத்தலில் மதியாமடு பாடசாலையில் அண்மையில் கண்பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.


வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 'கோப் மெடிசின்' அணியினரால் கண் பரிசோதனை நடத்தப்பட்டு 120 பேருக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (எ-355-202)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

கூட்டம்கூட்டமாக வரும் கட்டாக்காலி நாய்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் பலர் நாய்க்கடிக்கு இலக்காவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்துச் செயற்படவேண்டும் என்று பொதுமக்கள் கோரியுள்ளனர். (எ-355-202)




# ஒட்டுசுட்டானில் முதியோருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பு

ஒட்டுசுட்டான்,நவ.1

ஒட்டுசுட்டான் பிரதேச முதியோர் தின விழா கடந்த 25ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் சுபாஜினி கந்தையா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் அஜீத்தின் தந்தை த.பசுபதி ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை முல்லை. மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செல்வம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து பிரதேசக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் சுபாஜினி கந்தையா ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 27 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட முதியவர்களுக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை அலுவலர்கள், கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சிரேஷ்ட மருத்துவ தாதிமார், பணிமனை உத்தியோகத்தர்கள் ஆகியோர் மாலை அணிவித்தனர்.

ஈகச்சுடரை திலீபன் மருத்துவமனை வைத்தியர் ஈழவாணி, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் த.பங்கயற்செல்வன் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து கருத்துரைகளை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் பங்கயற்செல்வன், கிராம சேவை அலுவலர்களான சி.தெய்வேந்திரம் பிள்ளை, மு.சிவனேசன் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சிவபாலராசா, மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் திருமதி செல்வராணி, முல்லை. மாவட்ட சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் யோ.ஸ்ராலின் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் நிகழ்த்தினார். (341-202)

# அடிப்படை வசதியின்றி இயங்கும் முன்பள்ளிகள்

ஒட்டுசுட்டான்,நவ.1

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்பள்ளிகள் பல அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருகின்றன.

கரும்புள்ளியான் இருபநாதர் முன்பள்ளி மற்றும் செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்,சிவபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள முன்பள்ளிகள் கிணறு, விளையாட்டு மைதானம் முதலிய அடிப்படை வசதிகளின்றி இயங்கி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-341-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவனையில் உள்ள போட்டோ பிரதி இயந்திரம் உடனடி விற்பனைக்குண்டு. டொசியா 1560. தொடர்பு: **T.P.No.:** 0777 588515 (42150)

நல்ல இன கிரேடன் ஆண் நாயும் ஜேர்மன் சப்பட் ஆண் நாயும் விற்பனைக்குண்டு. (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: **T.P. No.:** 0777166917 (42277)

## காணி விற்பனைக்கு

சங்கானை, குதிரைப்பிட்டி வயல், சுடலையடி வயல், கேணியடி வயல் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.க.சண்முகதாசன், தேவாலய வீதி, சங்கானை. (42041)

## மணமகன்கள் தேவை

யாழ். இந்து 1972, றோகிணி, இடபம் 12 இல் செவ்வாய், 27 கிரக பாவம், 5'4'' உயரம், **B.A.**, சைவப்புலவர் ஆசிரியைக்கும் 1971, பூசம், கடகராசி, 23 கிரகபாவம், 5 அடி, வெள்ளை நிறம், **B.A.**, பட்டதாரி மணமகள்களுக்கு ஆசிரியர், அரச பணிபுரியும் மணமகன்கள் தேவை. தொடர்பு: சிவாலயா, இல. 11, யமுனா வீதி, நல்லூர். **T.P.No.:** 0776 528641 (42273)

## திருமண சேவை

இந்து, கிறிஸ்தவ மணமக்களுக்கு சிவாலயாவின் தலைத் தீபாவளி வாழ்த்துக்கள். எங்களிடம் உள்நாட்டு, வெளிநாட்டு, பட்டதாரி, டாக்டர், எஞ்சினியர், ஆசிரியர், வர்த்தகர், சுயதொழில் புரியும் மணமக்களின் ஜாதகங்கள் விவரம் பெற சகோதரன் **S.K.** சிவகரன் (அமைப்பாளர்), No:11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை. **T.P.No.:** 0776 528641. (42274)

## வீடற்றவன் நாவல்

**O/L** மாணவர்களே! வீடற்றவன் நாவ லின் கதைச்சுருக்கம் - விளக்கம் - விமர்சனம் ஆகியவற்றின் திருத்திய இரண்டாம் பதிப்பு எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா. 75.00 (42180)

## தவறிவிட்டது

கந்தையா வடிவேல் என்பவருடைய **MD** 90 மோட்டார் சைக்கிள் புத்தகம் ஆடியபாதம் றோட்டுக்கும் செம்மணி றோட்டுக்கும் இடையில் 28.10.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வேலணை கிழக்கு, வட்டாரம் 04, துறையூர், வேலணை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42195)

## சேவை

55000 அமெரிக்க நிரந்தர விசா லொத் தர் விண்ணப்பம் Internet மூலம் Process பண்ணி அமெரிக்காவிற்கு அனுப்பி அமெரிக்க றிசீட் தரப்படும். ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம். 16 வயதிற்கு மேற்பட்டவர்களும் தனியாக அனுப்பலாம். Latent விண்ணப்பத்த்த இலவசமாகப்பெற Penquin Book shop, B2/F23 Bloemendhal Flats Colombo-13. T.P.: 0773081764, 2438367. (சி-45983)

## ஹரிஸ் கார்டின்

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*சகல வகையான பூங்கன்றுகளும் பயன்தரு மரங்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு. அத்துடன், சிறந்த முறையில் வீட்டுப் பூந்தோட்டம் அமைத்துக்கொடுக்கப்படும்.*

தொடர்பு: **ஹரிஸ் கார்டின்**
நந்தாவில் ஒழுங்கை, சம்பியன்லேன் (K.K.S. Road), கொக்குவில்.
(42147) (24.17.45) T.P.: 0776524970

## கூறுவிலை

care

''கெயர்'' சர்வ்தேசம் கீழ்காணப்படும் மீன்பிடி உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

**2 இளை 1 1/8'' - 330" 1500 590 பீஸ்.**
**6 மி.மி நயிலோன் கயிறு 232 றோல்**
**15 இளை நயிலோன் நூல் 05 கிலோ**
**7'' P.V.C மிதப்புக்கள் 2692**

மேற்படி உபகரணங்களை வழங்க விரும்புபவர்கள் ஒவ்வொரு கூறுக்குமான விலை வர்க்கம், உற்பத்தி நிறுவனம் ஆகிய விவரங் களுடன் எதிர்வரும் 2005.11.10ஆம் திகதிக்கு முன்னர் 'கெயர்' சர்வதேசம், சாரையடி, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

2005.10.28
(சி-46026)(21-17-45-42)

**குழுத்தலைவர்,**
**கெயர் சர்வதேசம்,**
**பருத்தித்துறை.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்மகிழ 10 - 05 - 1922



கண்நெகிழ 02 - 10 - 2005

### திருமதி நாகலிங்கம் சின்னம்மா

*ஏழேழு பிறவிதனில்*
*எம் விளக்காய் பிரகாசித்த - எம்*
*அன்புத் தாயவளே! எம் அம்மா*
*உமது பிரிவுத் துயர்*
*தாங்காது தவிக்கிறோமம்மா!*
*31 நாள்களல்ல எத்தனை யுகம் - சென்றாலும்*
*நீங்காது உம் நினைவலைகள்.*
*உங்கள் ஆத்மாசாந்தியடைய*
*பிரார்த்தித்து நிற்கிறோம்.*
*ஓம்சாந்தி!*

இன்று (01.11.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

சுதுமலை வடக்கு,
சந்தையடி கிழக்கு [illegible]
மானிப்பாய். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அமரர் சி.சோமசுந்தரம் அம்பலவாணர்



அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சோமசுந்தரம் அம்பலவாணர் அவர்கள் 26.10.2005 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர் மனோன்மணியின் அன்புக் கணவரும் அமரர் சிவகுரு, அமரர் மனோன்மணி, அமரர் செல்லக்கண்டு ஆகியோரின் சகோதரனும் அமரர் சபாரத்தினம், அழகுரத்தினம், அமரர் நவரத்தினம், குணரத்தினம், இராசரத்தினம், கனகரத்தினம், அமரர் துரைரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் அமரர் சிவசக்தி, உமாசக்தி, பாலச்சந்திரன் (ஜேர்மனி), பத்மாவதி, புனிதவதி, ஜெயராணி (டென்மார்க்), அமரர் நிர்மலர் ஆகியோரின் தந்தையும் அமரர் துரைராசா, மகேந்திரன், மேனகா (ஜேர்மனி), செல்வராசா, சற்குணராசா ஆகியோரின் மாமனாரும் திருஞானமோகன், விஜயகுமாரி, மனோரஞ்சன், நிர்மலராஜன், சதீஸ், பிரதீஸ், பிருந்தா, சுரேஸ், யனோசன் ஆகியோரின் பேரனும் தனுஷிகா, யனித்தா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2005) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி மத்தி வேலங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை (41172) (24-32-17-45-42)

தகவல்:
**பிள்ளைகள்.**

## திருமதி சிதம்பரம் சிதம்பரப்பிள்ளை



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம் சிதம்பரப்பிள்ளை 30.10.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னாட்சிப்பிள்ளை (மலேசியா), பொன்னம்மா, தம்பிஐயா ஆகியோரது அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம், சுப்பையா, தங்கரத்தினம் ஆகியோரது மைத்துனியும் வள்ளிநாயகி, சபாராணி ஆகியோரது அன்புத் தாயாரும் இராசரத்தினம், கணபதிப்பிள்ளை ஆகியோரது பாசமிகு மாமியாரும் ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), திருமதி சுதாகரன் ஜெயரஞ்சினி, மிதிலா, கோபிதா ஆகியோரது அன்புப் பேர்த்தியும் யோகப்பிரியன், மோகனப்பிரியா, கஜப்பிரியன் ஆகியோரது அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.10.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பி.ப.2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (சி/46024)(32-17-45-42)

தகவல்:
**மகள், மருமகன்.**

## நாகன் சுந்தரம்

பருத்தித்துறை, புலோலி கிழக்கு உத்திராவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகன் சுந்தரம் 29.10.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்வப்பாக்கியத்தின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2005) புதன்கிழமை அன்று அவரது இல்லத் தில் இடம்பெற்று காலை 9மணியளவில் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*தகவல்:*
*பிரான்ஸ்.* (42268)(32-17-45-42) **கில்பேட் (பெறாமகன்).**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

'பாலர்பாடசாலை' காலை 9இல் இருந்து ஒரு மணி வரை மார்கழி 31 வரை பதிவுக்கட்டணம் இலவசம். பதிவுக்கு தலைமை ஆசிரியர்

விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். THE ROYAL IS THE BEST

(42276) (21

## விற்பனைக்கு

நல்ல இன கறுப்பு பெரிய கிடாய் விற்பனைக்குண்டு.

தொடர்பு : P.V.சூரியர்

"செல்வவேல்"

இல.10,கல்லூரி வீதி,கொக்குவில் கிழக்கு.

(42252)

## பண்டிகைக்கால மலிவு விற்பனை

* ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான காலணி வகைகள்.
* Nokia 3310 கையடக்கத் தொலைபேசிகள்.

**றொப் மல்ரி ரேட் சென்ரர்**

11/1 செங்குந்த நியூ மார்கெட், மேல்மாடி, நல்லூர். (42226)


## ஒத்துமாறல்

கிளிநொச்சி நகரத்தில் பிரபல பாட சாலையில் திட்டமிடல் நிதி உதவியாளராகப் பணியாற்றுபவர் யாழ். மாவட்டத்திற்கு/ தீவகத்திற்கு/ பளைக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: 021 4591820
0779232592 (42141)

# மருதங்கேணியில் காணிப் பிரச்சினையை தீர்த்து வைக்க விசேட நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.1

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் அரச காணிகளில் வசிக்கும் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க வடக்கு -கிழக்கு மாகாண நிர்வாகத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட துரித காணிச் செயலணி ஆணையாளர் கு.ஞானசேகரம் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் அரச காணி தெடர்பான பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை தீர்க்கும் பொருட்டு எதிர்வரும் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் விசேட நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

மாகாணக் காணி ஆணையாளர் கி.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த சேவையில் வடக்கு- கிழக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்கள உயரதிகாரிகள் யாழ்.மாவட்ட துரித காணிச் செயலணி அலுவலர்கள் கலந்து கொண்டு அரசகாணி தொடர்பான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்குவர்.

காணி தொடர்பான பிரச்சினை உள்ளவர்கள் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு பயன் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-204-203)

# நூலக மற்றும் ஆயுள்வேத சேவைகளை பயன்படுத்துவதில் மக்கள் பின்னடிப்பு

புங்குடுதீவு,நவ.1

நூலகம் மற்றும் ஆயுர்வேத வைத்திய சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் அக்கறையற்று இருக்கின்றனர் என்று வேலணை பிரதேசசபைப் பொறுப்பதிகாரி இ.பேரின்பநாதன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தில் நூலக சேவை மற்றும் ஆயுர்வேதவைத்திய நிலையம் என்பன இயங்கி வருகின்றன. ஆனால் இச் சேவைகளில் முழுமையான பயன்பாட்டைப் பெறுவதில் மக்கள் பின்னடிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(3-ரி-202

## 5 ஆம் ஆண்டின் நினைவுகளுடன்

வாழ்வு 08 - 01 - 1960



ஆறு 25 - 10 - 2000

**அமரர் கந்தப்பு தவராசா (பவா)**

திதி: 01.11.2005

*சிந்தனைகளில் எந்நாளும் வரும்*
*வெந்த எம் நினைவுகள் என்றும்*
*உந்தன் பாச உறவுகள் மாறா*
*என்றும் உம் ஓசை ஒலிகள் முகத்தை*
*காணவே துடிக்கும் இன்றும் ஆண்டு*
*ஐந்துகள் ஆனதுவோ நம்பமுடியவில்லை!*

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.*

(42285)(21-54-13-15)

உம் நினைவுகளுடன்
**மனைவி, பிள்ளைகள்.**

# தீபாவளி வழிபாடு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று தீபாவளித்தினப் பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன

தொடர்ந்து மாலை 4 மணிக்கு மகிஷாசுர சங்காரம் இடம்பெறும். (ஓ-78)

## கைப்பை தவறிவிட்டது

30.10.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் நாவற்குழியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்யும் பொழுது எனது கைப்பை தவறிவிட்டது. அதற்குள் எனது தேசிய அடையாள அட்டை, எனது சாரதி அநுமதி அட்டை இவற்றுடன் பெறுமதிமிக்க சில பொருள்களும் தவறிவிட்டன. அடையாள அட்டையிலும், சாரதி அநுமதிப் பத்திரத்திலும் 80, கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரி இடம்பெற்றுள்ளது.

இவற்றைக் கண்டு எடுத்தவர்கள் *திருமதி மங்களாதேவி சிவசுப்பிரமணியம் 411/2, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். உரிய சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி : 222 3081, 4591189

*திருமதி மங்களாதேவி சிவசுப்பிரமணியம்,*
*411/2, காங்கேசந்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*


NAASH INTERNATIONAL LTD. (WELLAWATTE) Presents

தீபாவளி வெளியீடு




**கெப்பிட்டல்** (கொழும்பு) 10,30, 2.30, 6.30, 9.30

**நாதன்ஸ்** (யாழ்ப்பாணம்) 10,30, 2.30, 6.30, 9.30

**சிஹாரா** (திருகோணமலை) 10,30, 2.30, 6.30, 9.30


## அறிவித்தல்

*இதுவரை நியமனம் கிடைக்கப் பெறாத இசை/நடன டிப்ளோமா பட்டதாரிகள் சகல ஆவணங்களுடனும் [புள்ளி விவரத்துடன்] இன்று [01.11.2005] காலை 9.30 மணிக்கு கல்வி வலயம் முன்பாக சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.*

(42284)(21.11.

**ஜெ.குமுதினி**
**தலைவர்**

## பிற்போடப்பட்டுள்ளது

உரும்பிராய் லயன்ஸ் கழக செயற்பாட்டு நிதிக்காக இன்று (01.11.2005) நடத்தப்பட விருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பை தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 15.01.2006 அன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**உரும்பிராய் லயன்ஸ் கழகம்.**

(42276)

# பஸ்சேவை மாற்றம்

யாழ்ப்பாணம், நவ.01

அல்வாய், நாவலடிச் சந்திக்கும் தம்பசிட்டிப் பாடசாலைச் சந்திக்கும் இடையிலுள்ள மதகு உடைந்து சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக மேற்கொள்ளப்பட்ட 759 தட இலக்க பஸ்சேவை வேறுபாதையூடாக மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் சேவை 750 தட இலக்கப் பாதை வழியாக வதிரிச்சந்தி - திக்கம், வியாபாரிமூலை ஊடாக நவலடிச் சந்திக்குச் சென்று அவ்விடத்திலிருந்து 751 இலக்க சேவை பாதையில் பயணத்தைத் தொடர்கிறது.

(ஓ-15)

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

## வெளிவாரிப் பரீட்சைகள்

1. பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி - I - 2002
2. சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - I - 2002
3. சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி - III - 2002

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றவிரும்பும் பரீட்சாத்திகள் யாழ். பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/- செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள்பரீட்சைகள்அலகில்சமர்ப்பித்து உரிய விண்ணப்பப் படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தைப் பெற விரும்புவோர் 'நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/- க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 16.50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளி வாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 30.11.2005 ஆகும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**குறிப்பு:** பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி I 2001 மீள் பரீட்சார்த்திகள் உரிய பரீட்சைகள் பெறுபேறுகள் வெளிவந்ததும் உடன் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
30.10.2005

(சி-46029)
(54-13-15)


**ராஜா** யாழ்ப்பாணம்

*இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு*

விக்ரம், அஸின், மணிவண்ணன் நடித்த

**மஜா** (ரீல்ஸ்)

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30 , 6.30 9.30

(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின தீபாவளி வெளியீடு

ஸ்ரீகாந்த், சோனியா அகர்வால், நமிதா, வடிவேல் நடித்த



**பம்பரக் கண்ணாலே**

காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30, 1.00

அனைவருக்கும் நாகம்ஸ் நிறுவனத்தாரின் தீபாவளி வாழ்த்துக்கள்.

**மனோகரா** யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய் வெடிக்கும்

**சிவகாசி**

யாழ். மாவட்டத்தில் முதல் முறையாக DIGITAL dts SOUND ஒலியமைப்புடன்

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30

*விசேட காட்சியாக சிலதினங்கள் மட்டும் காலை 8.00 காட்சி காண்பிக்கப்படும்*

(4-45593)


# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் (கணேஸ்)



(யாழ், மாநகரசபை ஓய்வுபெற்ற ஊழியர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் அவர்கள் நேற்று (31.10.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற கமலாம்பிகை, ஓய்வுபெற்ற ஆசிரியை சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், நிர்மலா, மஞ்சுளா, ஜெயந்தி, வசந்தி, சிவேந்திரன், தாரணி, பாமினி, கௌரிதாஸ், ஆகியோரின் அருமைமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2005) செவ்வாய்க் கிழமை கனரட்ணம் வீதி, கதிரவேலு ஒழுங்கையில். உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனகரட்ணம் வீதி,*
*கதிரவேலு ஒழுங்கை, அரியாலை.* (32301)(54-13-15)

தகவல்:
**சகோதரி.**

## திருமதி முருகேசு றோஸ் செல்லமுத்து (பூமணி)

துன்னாலை தெற்கு, கொற்றஉடையார் பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜோன் கந்தையா முருகேசுவின் (ஓய்வுபெற்ற மருத்துக் கலவையாளர்) மனைவியுமான றோஸ் செல்லமுத்து காலமானார்.

அன்னார் காஞ்சென்ற றதினா, காலஞ்சென்ற நாதானியல், காலஞ்சென்ற டானியல், காலஞ்சென்ற தயாளன், எசேக்கியேல் (மேற்பார்வையாளர், ஆதார வைத்தியசாலை மந்திகை), யோவேல் (பாதுகாப்பு உத்தியோகத்தர்,விவசாயப் பண்ணை வவுனியா), இம்மானுவேல் (பாதுகாப்பு உத்தியோகத்தர், செஞ்சிலுவைச் சங்கம் வவுனியா), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 01.11.2005 இன்று பிற்பகல் 3 மணிக்கு மகன் எசேக்கியேலின் துன்னாலை மேற்கு இல்லத்தில் நடைபெறும்.

(32301)(21-13-15)

தகவல்:
**மு. எசேக்கியேல் (மகன்)**
மேற்பார்வையாளர்,
ஆதார வைத்தியசாலை, மந்திகை.

## தம்பு சிவலிங்கம் (அன்ரன்)



பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் (தேவாகட்டி அருகாமை) கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையில் திருமணம் செய்தவரும் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி பேக்கறி லேன், 20/01, இல் வசித்தவருமான தம்பு சிவலிங்கம் (அன்ரன்) அவர்கள் நேற்று (31.10.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மேரியசிந்தா (பாப்பா)வின் அன்புக் கணவரும் அன் மேர்வின் - அனிஸ்ரன், அன்று ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பெரிய மகாவில சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

(42253)(54-13-15)

தகவல்:
**மனைவி (பாப்பா)** மேரிய சிந்தா.

## வினாசித்தம்பி செல்லம்மா (முகமாலை)

முகமாலையைப் பிறப்பிடமாகவும் கண்டிவீதி, சாவகச் சேரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி செல்லம்மா அவர்கள் 30.10.2005 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பியின் அன்பு மனைவியும் மகாலிங்கம் (பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் தாயாரும், தவமணி (ரங்கா) வின் அன்பு மாமியாரும் மதிவதனி (பிரதேசசபை - பளை), அருள்லிங்கம் (டுபாய்), பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.10.05) திங்கட் கிழமை அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
வி.மகாலிங்கம்,
ஆஸ்பத்திரி அருகாமை,
கண்டி வீதி, சாவகச்சேரி.

(42280)
(21-54-13-15)

தகவல்:
**வி.மகாலிங்கம்,**
முகமாலை,
எழுதுமட்டுவாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைத்தட்டு வெளியீட்டுவிழா

நீர்வேலி இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் 'நீர்வைக் கந்தன் பாமாலை' இசைத்தட்டு வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு நீர்வேலி தெற்கு மாதர்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் க.கோபிராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராகவும் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் அரச அச்சக உத்தியோகத்தர் ச.சண்முகப்பிரபா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-17)

## பெண்ணுக்கு எரி காயம்!

யாழ்ப்பாணம்,நவ.1

நுளம்புத்திரியை கொழுத்தி படுக்கையருகே வைத்துவிட்டு உறங்கிய பெண்மணி அதன்மூலம் தீமூண்டு எரிந்ததில் எரிகாயங்களுக்குள்ளானார்.

பருத்தித்துறை கல்லூரி வீதியில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வராசா ரோகிணி (வயது 65) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

கொழுத்திவைத்த நுளம்புத்திரிமீது பெண்மணி அணிந்திருந்த சேலை பட்டுத் தீப்பற்றி அருகிலிருந்த பெற்றோல் கொள்கலனுக்கு பரவியதாலேயே தீமூண்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-15)

## மாவீரர் பெற்றோர் கவனத்திற்கு

மாவீரர் நாளில் வெளிமாவட்டங்களில் உள்ள துயிலும் இல்லங்களுக்கு செல்லவிருக்கும் மாவீரர்களின் பெற்றோர்களை பதியுமாறு கேட்கப்பட்டுள்ளது.

எள்ளங்குளத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (3-70)

## அமைச்சரவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமானால், எம்மால் ஏன் புலிகளை அமைச்சரவையில் சேர்க்க முடியாது? புலிகள் தவறு செய்திருக்கலாம். ஏதோ ஒரு காலத்தில் சந்தர்ப்ப சூழ்நிலையில் பிரபாகரன் தவறு செய்தார் என்பதற்காக அவரைக் குற்றவாளியாகக் காணுவதில் என்னதான் நியாயம் இருக்கிறது? இதைத்தான் நான் கேட்கிறேன்.

இப்போதும்கூட ஜனாதிபதித் தேர்தலுக்காக வடக்கு, கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பிரசாரம் செய்வதற்காக நான் விடுதலைப் புலிகளின் அனுமதியைக் கோரியிருக்கிறேன். அவர்களின் அனுமதி கிடைத்தவுடன் நான் அங்கு செல்லவுள்ளேன். இதற்காக நான் காத்திருக்கிறேன்.

- இவ்வாறு மேலும் கூறினார் விக்டர் ஹெட்டிகொட. (க)

## பட்ஜெட் எப்போது?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுதிய கடிதம் ஒன்றிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒன்பது நாள் இருக்கையில் - நவம்பர் 8ஆம் திகதி - வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. தேர்தலுக்கு முன்னர் வரவு - செலவுத்திட்டம் மூலம் வாக்குறுதிக் குண்டுகளை அள்ளி வீசி, முறையற்ற விதத்தில் வாக்குகளை சுருட்டி எடுக்கும் திட்டம் இதுவென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.

1994இல் பிரதமராக இருந்த சந்திரிகா குமாரதுங்க, இதேபோன்று ஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்ட போது, அவரது அரசு வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக இடைக்கால நிதி அறிக்கை ஒன்றையே சமர்ப்பித்திருந்தது என்பதையும் ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயத்தில் ஐ.தே.கவின் நிலைப்பாட்டைத் தெரிவித்து - ஜனாதிபதித் தேர்தலுக்கு சற்று முன்னராக வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதை ஆட்சேபித்து- அந்தத் திட்டத்தை கைவிடக்கோரி, ஐ.தே. கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு கடந்த வியாழனன்று ஜனாதிபதி பதிலளித்திருக்கிறார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்கள் 21, ஒக்டோபர் கடிதம் கிடைத்தது. பதிலளிப்பதற்கு ஏற்பட்ட தாமதத்திற்கு மன்னியுங்கள்.

நான் பிரசன்னமாக இருக்காத அமைச்சரவைக் கூட்டமொன்றில் வரவு - செலவுத் திட்டத்தை நவம்பர் 8ஆம் திகதி சமர்ப்பிப்பதென அமைச்சர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு சற்று முன்பதாக வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு எதிராக தாங்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்களை ஆராய்ந்து உங்களுக்கு உரிய பதிலை அளிக்குமாறு நிதி, திட்டமிடல் அமைச்சரை நான் கோரியுள்ளேன்.- என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். (க)

## திடீரென..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி இராணுவ முகாம் பிரதேசத்துக்கு வெளியில் வந்து மக்களை அவர் சந்திப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்று கூறப்பட்டது.

ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னறிவித்தலின்றி யாழ்ப்பாணத்துக்கு திடீரென வரத்திட்டமிட்டிருக்கின்றார் என்றும் - அவருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ். வரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் - சில வட்டாரங்களில் பேச்சுகள் அடிபட்டன. (க)

## புத்தூர்ச் சம்பவத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணியில் சென்றவர்கள் 'ஆக்கிரமிப்பு இராணுவமே உன் கொலை வெறிக்கு எம் இளைஞர்களா?', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'இராணுவமே வெளியேறு' என்று உரத்துக் கோஷமிட்டனர்.

கண்டனப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் புத்தூர் கிழக்கு மக்கள் எனப்பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர்.

பேரணி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தைச் சென்றடைந்ததும் அங்குவைத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் அரிபெக்கா நீமெலாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. பொதுமக்களால் தயாரிக்கப்பட்ட மகஜரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம் கையளித்தார்.

அதன் பின்னர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், ம.க.ஈழவேந்தன் ஆகியோர் புத்தூர் சம்பவத்தைக் கண்டித்து உரையாற்றினர்.

இதேவேளை - புத்தூர் கிழக்கு அண்ணமார் கோயிலடிப் பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணியின் உரித்துடையோர் அங்கிருந்து முகாமை அகற்றுமாறு கோரி கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியிடம் காணி உறுதியைக் கையளித்தனர்.

அதன் பின்னர் பேரணியாகச் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச தூதராலயங்களுக்கு தெரியப்படுத்துமாறுகோரி யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச நிறுவனங்களிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (எ-7-86-173)

## புலனாய்வு அதிகாரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பில் கேணல் மீடினுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தனர் எனக் கருதப்படும் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த 'புளொட் பாபு' என்பவரும், மேலும் சில சந்தேக நபர்களும் இரகசியப் பொலிஸாரினால் தீவிர விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கேணல் மீடின் கொல்லபட்ட தினத்தன்று புளொட் பாபுவை கிரிபத்கொட்வுக்கு அருகிலுள்ள இடமொன்றில் சந்திக்கவிருந்தார். கேணல் மீடினை சந்திப்பதற்காக புளொட் பாபு நீண்டநேரம் காத்திருந்து, பொறுமையிழந்து, பின்னர் மீடினின் வீட்டிற்குச் சென்றிருக்கிறார். இந்த நேரப்பகுதியில்தான் கேணல் மீடின் சிலரால் அழைத்துச் செல்லப்பட்டு சுடப்பட்டுள்ளார்.

கேணல் மீடின் பயன்படுத்திய கைத்தொலைபேசிக்கு இறுதியாக வந்த் அழைப்புக்கள் மற்றும் அவருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த நபர்கள் குறித்து இரகசியப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கேணல் மீடினின் மற்றுமொரு நெருங்கிய நண்பராகக் கருதப்பட்ட மீன் வர்த்தகரொருவர் திருகோணமலையிலிருந்து நாளாந்தம் கொழும்புக்கு மீன்களைக் கொண்டு வருபவராவார். ஈரியவெட்டிய கிராமத்தை சேர்ந்த 'சமிந்த' என்றஇந்த மீன்வர்த்தகர், 'ஐஸ் மஞ்சு' என்ற திருகோணமலையைச் சேர்ந்த நபரொருவரை இறுதியாக கேணல் மீடினுக்கு அறிமுகப்படுத்தியிருப்பதும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கேணல் மீடினுடன் இறுதியாகக் காரில் சென்ற இந்தச் சந்தேக நபர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதற்காகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்பட்டது.(க)

## பிரச்சினைக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்து வருகின்றனர். இதனால் இடம்பெயர்ந்த மக்கள் அச்சம் காரணமாக வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். எனவே, மேற்படி மக்கள் மீளக்குடியமர வசதியாக குடியிருப்புகளுக்குச் சமீபமாகவுள்ள இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்படி இராணுவ முகாமை அகற்றாவிட்டால் மீண்டும் வன்முறைகள் வெடிக்கும் அபாயநிலை தோன்றி விடலாம் என்று கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி அரி பெக்கா நிமெலாவிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

புத்தூர் கிழக்கில் நடைபெற்ற சம்பவத்துக்கு கண்காணிப்புக்குழு உடனடியாக சமுகந்தரவில்லை என்றும் -

சம்பவ இடத்திற்கு தாமதமாகவே கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி ஒருவர் வருகை தந்தார் என்றும் - மகஜர் கையளித்த பொது மக்கள் சுட்டிக்காட்டினர்.

பொதுமக்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர்:-

குடாநாட்டிலிருந்து இராணுவத்தினரை வெளியேற்றும் அதிகாரம் எதுவும் எமக்கு இல்லை. அதே போன்றுதான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கட்டளையிடும் அதிகாரமும் எமக்குக் கிடையாது.

நாங்கள் கண்காணிப்பாளர்கள் என்ற முறையில் இங்கு வந்துள்ளோம். இங்கு நடைபெறுவதை கண்காணிப்பதே எமது கடமை.

கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்ற சம்பவம் தொடர்பாக எமது தலைமையகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளோம் - என்று தமது நிலையை விளக்கினார். (ஒ-எ-7)

## பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு உயிரிழந்தார். படுகாயமடைந்த மற்றைய பொலீஸாரான கே.டபிள்யூ.குணவர்த்தன (வயது 33), ஆர்.பி. ஆரியதாஸ (வயது 45), ஏ.ஜே.சிறிநிஷாங்க குமார (வயது 34) ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து பலாலி வீதியில் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதேவேளை சம்பவம் இடம்பெற்ற சில நிமிடங்களில் அந்த வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பொது மக்கள் படையினரால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (13-78)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம்



பலாலி கிழக்கு, வசாவிளானை சொந்த இடமாகவும் புத்தூர் மேற்கு (பிள்ளையார் கோயில் அருகில்) நவக்கிரியை தற்போதைய முகவரியாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (31.10.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்தின் அன்புக் கணவரும் உதயகுமார்(அமரர்) ஜெயக்குமார், தயாபரன், மேனகா, வேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(42304)(33-12-13-15)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### திருமதி பொன்னுத்துரை தங்கம்மா

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியை சேர்ந்த பொன்னுத்துரை தங்கம்மா நேற்று (31.10.2005) திங்கட்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சண்முகநாதன், பத்மநாதன்,இராமநாதன், ஜெகநாதன், திலகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சண்டிலிப்பாய் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.*

(42305)(33-12-13-15)

தகவல்: பிள்ளைகள்.

### கருப்பசாமி ராமசாமி



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கருப்பசாமி ராமசாமி அவர்கள் நேற்று (31.10.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளப்பிட்டி வீதி,*
*கொக்குவில் மேற்கு.*
*T.P.: 077 3144735*

(42304)(33-12)

தகவல்: ரா.லங்கேஸ்வரா (மகன்)

"மின்னியல்"
துரித மீட்டல் வினாவிடை
By: Eng. விமல்ராஜ்
ஆரம்பம்:- 02/11/05 புதன் 10.30
NEW SCIENCE CENTRE
யாழ்நகர். (42157)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்
அபிவிருத்தி நிதிக்காக யாழ்ப்பாணத்தில் தலை சிறந்த இசைக்குழுக்கள்
ராஜன்ஸ், ராகம்ஸ்
மற்றும் தலைசிறந்த முன்னணிப் பாடகர்கள் கலந்து கலக்கும்
மாபெரும் இசைச் சங்கமம்
இடம்: யா/இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்: இன்று (01.11.2005) செவ்வாய்க்கிழமை
மாலை 07.01 மணி (இ.நே) (தீபாவளி தினத்தன்று)
ஒரே மேடையில் இரு இசைக்குழுக்கள் இணைந்து சங்கமிக்கும் இசைச்சங்கமம்
இசையால் வசமாவோம் (42283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2005 இல்

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

## அறியாமை இருளகற்றும் தீபாவளித் திருநாள்

ஆண்டுதோறும் ஆண்டி முதல் அரசன் வரை உலகோர் அனைவரும் கொண்டாடி மகிழ்வது தீபாவளித் திருநாளாகும். ஐப்பசி மாதத்து அபரபக்கத்து சதுர்த்தசியில்தான் இந்தத் தீபாவளித் தினம் கொண்டாடப்படுகிறது. அதிகாலை துயில் எழுந்து எண்ணெய் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஸ்டானங்களை முடித்துப் புத்தாடைகள் உடுத்துவார்கள்.

அதன்பின் குடும்பத்தினருடன் ஆலயத்துக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து நண்பர்கள். சுற்றத்தார்கள். உறவினர்கள் அனைவரும் ஒருவருக் கொருவர் வாழ்த்துக்கூறி பட்ஷணங் களுடன் விருந்துண்டு மகிழ்ச்சி கரமாகக் கொண்டாடுவார்கள்.

விரததினம் போல தீபாவளிப் பண்டிகை இருப்பினும் சைவபோஷணம் பட்ஷ ணங்கள் பலகார வகைகள் உண்ணலாம் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### நல்வழிப்படுத்தும் இந் துப் பண்டிகைகள்

மக்களை நல்வழிப்படுத்துவதே இந்துமதத் தின் பிரதான கோட்பாடாகும். தீபங்கள் ஏற்றுவதால் இருள் அகல ஒளி பரவுகிறது: இருள் என்னும் தீமைகள் அகல ஆன்மாக்கள் புனிதமடைகின்றன. இறைவனை ஜோதிவடிவமாக, ஒளிப்பிழம்பாக, அக்கினியாகவும் வழிபடுவது இந்து மதத் துவம் என்பதும் இங்கு முன் வைக்கப்படுகிறது.

துவாபரயுகத்தில் காத்தற்கடவுளான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் ஆன்மாக்களைக் காத்தற்பொருட்டு மானுட அவதாரம் எடுத்து ஸ்ரீ கிருஸ்ணராக துவாரகை என்னும்இடத்தில் இருந்துகொண்டு பூமியையும் மற்றும் மூவுல கங்களையும் நீதியுடன் பரிபாலனம் செய்து வந்தார். மகாலக்ஷ்மி, பூமிலக்ஷ்மி இருவரும் ருக்மணிதேவியாகவும் சத்தியபாமாவாகவும் அங்கே அவருடன் அவதரித்து இருந்தனர்.

ஒருநாள் துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ண பர மாத்மா இருந்தபோது இந்திரன் அங்கே வந் தான். பிரபுவே நீவிர் மானுட அவதாரம் எடுத் துள்ளதனால் அனைத்து ஜீவராசிகளது துன்ப மும் நீங்குகின்றன என்றாலும் பிராக்ஜோதிபுரம் என்னும் நகரில் நரகாசுரன் என்னும் கொடிய அரக்கன் எனது தாயாரின் அமுதம் ததும்பும் கவசகுண்டலங்களையும் எப்பொழுதும் மழை பொழிவதுமான வருணனின் குடையையும் தேவர், சித்தர், கந்தர்வர், மானிடர்கள், அரசர்கள் இவர்களின் கன்னியர்களையும் மந்தரபர்வதத் தின் சிகரத்தையும் வலுவில் கவர்ந்து சென்று சிறைவைத்துள்ளான். சகல பிராணிகளுக்கும் துன்பம்செய்து வருகிறான். இவனைத் தாங்கள் ஒருவரால் தான் தண்டிக்கமுடியும் என்று தங்களிடம் விண்ணப்பிக்கிறேன் என்று இந்தி ரன் பகவானிடம் கூறினான்.

இந்திரனுக்கு ஆறுதல் கூறி விடை கொடுத்து அனுப்பியபின் சத்தியபாமாவுடன் கருடன் மீத மா்ந்து பிராக்ஜோதிபுரத்துக்கு விரைந்தார்.



அங்கே முரன் என்பவன் பெரும் சேனை களோடு போருக்கு வந்தான். பகவான் அவனை யும் அவனது படைகளையும் சேனைகளையும் சக்கராயுதத்தால் அழித்தொழித்தார். இப்படியாக முரண் அயக்ரீவன், பஞ்சச னன் என்ற மந்திரி களை அழித்து தலைநகரினுள்ளே பிரவேசித்தார்.

அங்கே நரகாசுரன் பெரும் படைகளுடன் பகவானை எதிர்க்க வந் தான். ஏராளமான கொடிய அசுரர்களையும் பகவான் சம்கரித்தார். பலவிதமான அஸ்திரங்களை பிரயோகித்து நரகாசுரனை அடித்துக் காயப்படுத்தியபோதும் அவன் சிறிதும் களைப்படையாமல் போர் செய்துகொண்டு நின்றான், படைகள் பலவும் இறந்துபோன பின்பும் அவன் சளைக்கவில்லை.

### மக்களின் ஆரவாரம்

பரமாத்வாவினால் இவனுக்கு அழிவில்லை என்பதை உணர்ந்துகொண்ட சத்தியபாமா தேவியானவர் பகவானிடம் அனுமதிபெற்று ஓர் அம்பை எடுத்து வில்லை நாணேற்றி இவனின் கொடுமைகளை இனி அனுமதிக்கமுடியாது என்று கூறி அம்பை ஏவினார். சீறிக்கொண்டு சென்ற அம்பு நேராக நரகனது மார்பைத் துளைத்தது அலறிய வண்ணம் நரகன் பூமியில் விழுந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மக்கள் எல்லோரும் ஆரவாரம் செய்தனர்.

நரகன் பூமியில்விழும்போது தேவியின் அம்பு பட்டதாலோ என்னவோ அவனது உள்ளம் தெளிவடைந்தது. அறிவுவரப் பெற்ற நரகன் தனது வலி வேதனைகளை மறந்து மண்ணில் கிடந்தவாறே தனது கைகளைத் தலைமேல் வைத்து பக வானை வணங்கி தேவரீர் எனது பிழை களை பொறுத்தருளும் என்னை மன்னித்தருளும் அறியாமை என்ற இருள்என்னை விட்டு அகன்று விட்டது. தங்கள் திருக்கரத் தால் அடிபட்டதாலும் தேவியின் அம்பு பட்டதாலும் தங்கள் இருவரின் தரி சனத்தாலும் எனக்கு இனிப்பிறவியே கிடையாது என்பது புரியுது என் மரணத் துக்காக யாரும் வருந்தவேண்டாம். இன்றைய நாளை அனை வரும் மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் இது ஒன்றுதான் என் இறுதி ஆசை இதை நிறைவேற்றி வையுங்கள் என்று பிரார்த் தித்தான்.

பகவானும் அவனது இறுதிவிருப்பத்தை அனுக்கிரகித்தார். அன்றுமுதல் பூலோக மாந்தர் அனைவரும் இந்நாளை தீபாவ ளித்திருநாளாக இருள் என்னும் அறி யாமை ஒழித்து, அறிவாகிய ஒளி தோன்றியதைக் கொண்டாடி வருகின் றனர்.

பகவானது திருவதனத்தை பார்த்த வாறே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்!

தீபங்கள் வரிசையாக ஏற்றிடும் நன்னாள்
நல்லெண்ணங்கள் வரிசையாக ஏற்றிடும்
பொன்னாள்
தீமைகள் யாவும் அழிந்திடும் இன்னாள்
வட்ட நிலா பொட்டு இட்டு
கோயிலுக்குச் சென்று தீபங்கள் ஏற்றி
ஆராதனை செய்து இல்லம் ஏகாமல்
இறைச்சிக் கடைக்கு வேகமாகப் போகிறார்.
யாரொடு நோகேன்
யார்க்கெடுத்துரைப்பேன்!

நந்தன் -















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

## தீபம் திகழ்வுதரும்

தீபஒளி வீசும்
தீபாவளித் திருநாள்
பாபச்சுமை போக்கும்
பான்மை தனையீயும்!

கோலச் சுடரொளியில்
கொடுமைதனைத் தீய்க்கும்
காலச் சுழற்சியிலே
கவலை பறந்தோடும்!

உள்ளம் உவகைபெறும்
உழுதல் உயர்வுதரும்
கள்ளம் கரைந்துவிடும்
கடமை கனிந்துவரும்!

உண்மை உயர்வுதரும்
உரிமை உயர்ந்து வரும்
திண்மை தீர்வுதரும்
தீபம் திகழ்வுதரும்!

சுண்டிக்குழியூர் த.விதுரன்

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
அன்பு கலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அழகிய நவீன டிசைன்களிலான
தங்க நகைகள் தரமாகச்
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்:
சிறிமாரி நகைமாடம்
49(187), கே.கே.எஸ். வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்). யாழ்ப்பாணம்.
(C/45755)

அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை
(C/45778) Specialiest in Salvar, Saree, Shirting& Suiting
No.24,7,8, Modern, Market Inside,Jaffna.Tel:222 7179

எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்!
நவநாகரிகமான
ஆடைத்தெரிவுகளுக்கு
நம்பிக்கையோடு
நாடுங்கள்:
லைடன் புடைவை நிலையம்
இல.410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம். தொ.பே.222 238.
(C/45779)

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
❒ சுபமுகூர்த்தப் பட்டுப்
புடைவைகளா?
பட்டு வேட்டிகளா? அல்லது நீங்கள்
விரும்பும் ஏனைய புடைவை
வகைகளா?
❒ எது வேண்டுமோ அனைத்தையும்
உங்கள் எண்ணம் போல்
தெரிவுசெய்திட நாடுங்கள்.
சீமாட்டி புடைவையகம்
122.மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
மங்கை சில்க்ஸ்
15.நவீன சந்தை,
யாழ்ப்பாணம்
(C/45776)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
மொத்த வியாபாரிகளின் நன்மைகருதி இந்தியாவிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட பெட்சீற் வகைகளை மொத்தமாகப்
பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகல நவீன ஆடைத் திருசுகளுக்கும்
யாழ்.நகரில் பழைமை வாய்ந்த ஸ்தாபனம்
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
மங்களகரமான வைபவங்களுக்கு ஏற்ற குடும்பமாய் தங்கி கொண்டாடுவதற்கு அழகான வீடு
வாடகைக்கு உண்டு.
44,42,பெரியகடை, யாழ்ப்பாணம். தொ.பே.222 2985.
248/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0773 186842.
(C/45780)

UNIT
எமது அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்
அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்களுடன்

எமது முதலாவது ஆண்டை நிறைவு செய்யும் முகமாக மேலும் பல சலுகைகளுடன் நாங்கள் யார் என்பதை எமது அன்பார்ந்த உறவுகள் (வாடிக்கையாளர்கள்) நன்றாக உணர்ந்து கொண்டமையால் மீண்டும் எங்களுக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல எங்கள் பாதையில் புதிய அத்தியாயங்கள் படைத்து வீறுநடை போட வைத்துள்ளார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எவ்வளவோ போட்டிகள் மற்றும் பொறாமைகளுக்கும் முகம் கொடுத்து வளர்ந்துள்ளோம்.பழைய பொருட்கள் என்றார்கள் விரைவில் மூடிவிடுவார்கள் என்றார்கள். எல்லாம் புளித்துப் போய் விட்டது. சொன்னவர்கள் எல்லோரும் போற்றும் வண்ணம் வளர்ந்துள்ளோம்.

3வருட முழு உத்தரவாதம்

ஆம் நாங்கள் வழங்கும் கணனிகள் யாவும் பல பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டே வழங்கப்படுகிறது.

எப்படி இவ்வளவு ஆக்கங்கள் எங்களால் செயற்படுத்தப்படுகின்றது.

- இந்திய பொறியியல் துறையில் (Electronics &Communication) சிறப்புத் தேர்ச்சி இரு தசாப்தகால(20 வருடங்கள்) பட்டறிவு (Experience) அதன் மூலம் எதையும் செய்யக்கூடிய தேர்ச்சிகள்.
- இந்திய முன்னணி நிறுவனங்களான infosys, Satyam,pentafour, Aram ltd, UNITபோன்ற நிறுவனங்களில் பணியாற்றிய புலமை. இதன் மூலம் இணைந்து இயங்கும் அமைதி .
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft,Intel,Compaq,Toshiba,Sun Micro systems(Java),Hp,Red Hat,Cisco&Linksys நிறுவனங்களுடன் Hartware, Networkingமற்றும் Software துறைகளில் இணைந்த தயாரிப்பில் ஈடுபட்ட அனுபவ முயற்ச்சி.
- இந்திய பல்கலைக் கழகங்களான அண்ணா பல்கலைகழகம் அழகப்பா பல்கலைக் கழகம் மற்றும் முன்னணி நிறுவனங்களுக்குள் consutant ஆக இருந்த அனுபவம். இன்னும் பல...

புதிய P4 கணனிகள் 3 வருட முழு உத்தரவாதத்துடன் கொழும்பை ஒத்த விலைக்கே

No Additional Charges for Warranty Claim

தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை

இது எங்கள் மொபைல் சர்வீஸ் ரீமுடன் இணைக்கப்பட்டது.

An Indian Qualified Engineer's Workshop

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!
சைவ, அசைவ, மேலைத்தேய, கீழைத்தேய உணவுகளுக்கும் குளிரூட்டப்பட்ட,
குளிரூட்டப்படாத அறைகள், கார் (Car) மற்றும் இன்னோரன்ன வசதிகளுக்கும்
எங்கும் இல்லாத வகையில்
நவீன மயப்படுத்தப்பட்ட ...
SRI PALM BEACH
Restaurant
(Television, Digital Musical System & Fully Air-Conditioned)
ராஜா வளாகம், முதலாம் மாடி
205, [illegible] யாழ்ப்பாணம்.
T.P.: 222 6634, 0777 222180
077 3126902, 0777 283595
நிர்வாகி - S.சிறீரங்கன் (கம்சன்)
(C/45781)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005




## தீபாவளித் திருநாள்

அகந்தை அழிந்திடும்
ஆணவம் ஒழிந்திடும்
அன்பு பிறந்திடும்
அகமும் மலர்ந்திடும்
அதுதான் தீபாவளி
திருநாள் கொண்டாட்டம்
இல்லத்தில் இன்பவிழா
இன்னல்கள் தீர்ந்தவிழா
இதயத்தால் மகிழும் விழா
இதுதான் தீபாவளி விழா
புத்தாடை தரித்திடுவர்
புதுமையை விரும்பிடுவர்
புதுப் பொலிவு பெற்றிடுவர்
எங்கும் இன்பம் மலர்ந்திடும்
எதிலும் புதுமை பொலிந்திடும்
எல்லோர் மனமும் மகிழ்ந்திடும்

-கவிஞர் வ.யோ.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005




## அடுத்தவருசமாவது...

வண்ணங்களும்
வாணங்களுமாய்...
நகரத்தின் - தெருக்களில்
பிதுங்கி வழிகிறது
தீபாவளி...
அம்மா...!

இந்தமுறையும்
சீருடை வேண்டாம்
எல்லா வண்ணங்களும்
கண்களில் நிரம்ப
காற்றில் இரஞ்சுகிறது
சிறுவனின் குரல்... அவன்

ஒற்றை வெடியை - பார்த்துக்
கொண்டேயிருக்கிறான்
இது தீர்ந்துவிட்டால்
வெடிப்பது வல்ல...
வெடியிருப்பதே

சுகமாயிற்று ...அப்போதே
நினைப்பான்...
அடுத்தவருசமாவது
நம்பிக்கைகளை - இறுகப்பற்றி
காத்திருப்பான்
அடுத்த வருசமாவது...

*த. அகிலன், கிளிநொச்சி.*

## திக்கெலாம் தீபாவளி திருநாளாம்

மழைபொழிந்து மண்மீது முளைகட்டி பயிர்செழிக்க
மேடுகளின் அடிவாரம் மழைநீரும் குளமாகும்
தழைகளுடன் செடிகொடியும் தக்கநல் இலைகளுடன்
தரணியெங்கும் கொலுவிருக்கும் தீபாவளித் திருநாளாம்
முளைக்கின்ற நெல்வயலும் உழவனது உடல்வலுவும்
மக்களது பசிதீர்க்கும் ஏற்றமிகு இந்நாளில்
இளையோரும் முதியோரும் இங்கிதமாய் கொண்டாடும்
இல்லமெங்கும் பொன்னாளாம் தீபாவளித் திருநாளே!

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா













Digitized by Noolaham Foundation

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## கலை, கலாசார மேம்பாட்டுக்கும் பொருளாதார உயர்வுக்கும் வழிவகுக்கும் இந்துப் பண்டிகைகள்

தீபாவளி என்றால் தீபவரிசை எனப் பொருள் கொள்ளப்படும். இந்து மதத்தில் விரதங்கள், திருவிழாக்கள், பண்டிகைகள் யாவும் உயர்ந்த கலாசாரப் பின்னணி கொண்டமைந்தவை. இதன் அடிப்படையில் இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி குறித்து அவர்கள் மத்தியில் பற்பல கதைகள் நிலைபெற்றுள்ளன.

தேவர்களுக்குக்கும், பூவுலக மாந்தர்களுக்கும் தொல்லைகள் கொடுத்து வருத்தி வந்த நரகாசுரனை கிருஷ்ண பரமாத்மா, சத்தியபாமாவின் துணைகொண்டு வதம்செய்த சம்பவத்தை நினைவுறுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்து மதத்தவர்களால் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படும் பண்டிகையே தீபாவளியாகும். நரகாசுரன் தனது உயிர் பிரியும் தறுவாயில் அதுவரைகாலமும் தான் செய்த கொடுமைகளுக்கு மன்னிப்பு வேண்டிக் கிருஷ்ண பரமாத்மாவை இரந்துநின்றது மட்டுமன்றி தனது மறைவை உலகத்து மக்கள் யாவரும் கொண்டாடி மகிழ வரமளிக்குமாறும் கேட்டுக் கொண்டான். கிருஷ்ணபரமாத்மா அதற்கிணங்கி அவன் வேண்டியவாறு வரமளித்ததாகவும் புராணக் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் உலகத்து மக்களின் சிரமங்கள், கஷ்டங்கள் நீங்கவும் நாட்டிலும் பொதுமக்களது வாழ்விலும் நிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவவேண்டுமென வேண்டுதல் செய்வதே இத்தீபாவளித் திருநாள் உணர்த்தும் அடிப்படைத் தத்துவமாகும்.பொதுவாகவே இந்து மதத்தவர்களது பண்டிகைகள் ஆன்மீக தத்துவ அடிப்படை கொண்டமைவன. ஆன்மீக தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்டவையே இந்துமதப் புராணக் கதைகளாகும். இந்தப் புராணக் கதைகள் யாவும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையேயான பலப்பரீட்சையை மையமாகக் கொண்டமைந்தவை. மனிதர்களின் தர்ம, அதர்ம நடத்தைகளால் விளையக்கூடிய பலாபலன்களை சாதாரண மனிதர்களுக்கு உணர்த்துவதற்கான உத்தியாகவே இந்தக் புராணக் கதைகள் படைக்கப்பட்டன. தர்மநெறி நின்றொழுகுவோர் பற்பல சோதனைகளை எதிர்கொள்ள நேரிடினும் ஈற்றில் தர்மம் வெற்றியீட்டும் என்பதையும் அதர்மநெறிவழியில் நடப்போர் கடைசியில் அழிவையே சந்திக்கநேரிடும் என்ற தத்துவத்தையும் பாமர மக்களுக்கு எடுத்துணர்த்தி அவர்களை நல்வழியில் வாழ நெறிப்படுத்துவதே இந்த இந்துமத தத்துவ புராணக் கதைகள் படைக்கப்பட்டதன் முக்கிய குறிக்கோளாகும்.

அந்த வகையில் சைவசமயிகள் கொண்டாடும் பண்டிகைகள் உருவாகக் காரணமான அடிப்படை உண்மையும் அவற்றை எளிதில் பாமர மக்கள் விளங்கிக்கொள்ளும் நோக்கில் படைக்கப்பட்ட புராணக் கதைகளும் காலம் காலமாக இந்து மதத்தவர் மத்தியில் நின்று நிலைபெற்று வந்துள்ளன. மெய்ஞானம் என்ற உண்மைக்கு முன்னால் மனித மனங்களில் நிறைந்துள்ள காமம், குரோதம், பொறாமை, அச்சம் என்றவாறான அஞ்ஞான குணங்கள் செயலற்று முடிவில் பற்றற்றுப் போய்விடும் என்பது இந்துமத அடிப்படைத் தத்துவம்.

இந்துக்கள் தலைவிதி மீது மட்டற்ற நம்பிக்கை கொண்டவர்கள். விதியின் வலிமையை விளக்கிடும் வகையில் இந்துமத புராணங்களில் ஏராளமான கதைகள் உள்ளன. ஆனால், அவற்றின் பின்னணியில் உள்ள அடிப்படைக் கருத்து முக்கியத்துவம் கொண்டதே தவிர அக்கதைகள் கேலி செய்யப்படும் வகையில் கொள்ளப்படலாகாது.

இருண்ட வாழ்வில் பிரார்த்தனை எனப்படும் தீபத்தை ஏந்திச் செல்லும் வேளையில் பாதை தெளிவாகிறது. அதனால் தடுமாற்றமின்றிப் பயணத்தைத் தொடர முடிகின்றது. இந்தத் தத்துவதத்தின் அடிப்படையில் அமைபவையே இந்துமத வழிபாட்டு முறைமைகளாகும்.

உலகில் தர்மம் குன்றி, அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் கிருஷ்ண பரமாத்மா அவதாரமெடுத்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநிறுத்துவதான இந்து மதத்தவர்களது நம்பிக்கை உலகில் அதர்மம் புரிந்த நரகாசுரனை சத்தியபாமா என்ற சக்தியின் துணைகொண்டு கிருஷ்ணபரமாத்மா அழித்துத் தர்மத்தை நிலைநாட்டினார் என்ற புராணக் கதையை மெய்ப்பிக்கின்றது.

தீபாவளித் திருநாளில் அதிகாலையில் தலையில் எண்ணெய் தேய்த்து நீராடிப் புத்தாடை புனைந்து கோயிலுக்குச் சென்று இறைவணக்கம் முடித்து தித்திப்புப் பண்டங்களை தத்தமது குடும்பத்தவர்களுடன் சேர்ந்து புசித்து மகிழ்வதுடன் உற்றார், உறவினர், அண்டை அயலவர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வது இந்து மதத்தவர் மத்தியில் ஆண்டாண்டு காலமாய் வழக்கில் இருக்கும் பழக்கமாகும். இது ஒரு புறம் இருக்க ஆன்மீக அடிப்படையில் அமையும் செயற்பாடுகள் எனக் கருதத்தக்கதுடன் தமிழர் தம் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பற்றறுந்து அவற்றைக்கட்டிக்காக்க முயலும் பண்பாட்டு நடைமுறையாகவும் கருதற்பாலது. அது மட்டுமன்றி இன மத மொழி அடிப்படை வேறுபாடுகள் கொண்ட மக்கள் ஒன்று கலந்து வாழ நேர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இவர்கள் மத்தியில் புரிந்துணர்வும், அன்னியோன்யமும், ஒற்றுமையும் ஏற்படுத்தவல்ல இணைப்புப் பாலமாகவும் இத்தகைய பண்டிகைகள் அமைவதாகக் கூறினால் அது மிகையாகாது.

### வர்த்தக நோக்கில் தீபாவளி

இவை மட்டுமன்றி, காலப்போக்கில் இத்தகைய பண்டிகைகள் பொதுமக்களில் குறிப்பிட்ட சாராரின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையிலும் மாற்றம் கண்டுள்ளமை இவ்விடயத்தில் நோக்கற்பாலது. குறிப்பாக தீபாவளி பண்டிகையின் போது பெரும்பாலும் சகல இந்து குடும்பத்தவர்களும் புத்தாடை அணிவதை வழக்கப்படுத்திக் கொள்வதால் புடைவை வர்த்தகத்தில் ஈடுபடுவோர் இப்பண்டிகைக்காலத்தில் அதிகூடிய விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள் ள முடிகிறது. அதேபோன்று இந்துக் குடும்பத்துச் சிறுவர் சிறுமியர்கள் இப்பண்டிகைக்காலத்தில் பட்டாசு கொழுத்தி மகிழ்வது வழமையானதென்பதால் இப்பட்டாசு உற் பத்திமுயற்சிகளில் ஈடுபடுவோர் தீபாவளிப்பண்டிகைக் காலத்தில் தமது உ ற்பத்திகளைப் பெருமளவில் சந்தைப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டுகிறதல்லவா.

மொத்தத்தில் தீபாவளிப் பண்டிகை இந்து மதத்தவரின் ஆன்மீக நோக்கிலமைவதுடன் அவர்தம் கலை, கலாசார மேம்பாட்டுக்கு வழிவகுப்பது மட்டுமன்றி பொருளாதார உயர்விற்கும் காரணமாய் அமைவதாக நம்பமுடிகிறது.

**பொன்வேளன்.**


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

அடிமைத் தனங்கள் அழிந்த நாளை
அசுரத் தன்மை ஒழிந்த நாளை
கொடுமைத் தனங்கள் அகன்ற நாளை
கொண்டாடிக் கொண்டாடி மகிழும் தீபா வளி

நரகாசுரனெனும் அசுரனவன் இறைவனை
நாடிப் பெற்ற அரிய வரங்களால்
அராஜகத்தின் வடிவமாய் எழுந்தனன்
அவனிதனில் கொடுமைகள் புரிந்தனன்

தேவரும் மனிதரும் சிறையினில் வாடினர்
தேசம் முழுவதும் ஓலம் எழுந்தது
பாவமும் சாபமும் பாரினில் மலிந்தது
பார்க்கும் திசையெலாம் போரது எழுந்தது

வேதனை தாங்கிடா மக்கள் கூடினர்
விளைத்திடும் துன்பத்தைப் போக்கிட எண்ணினர்
மாயனாம் கிருஸ்ணனிடம் முறையிட்டு அழுதனர்
மாலவன் அசுரனை மண்ணினில் அழித்தனன்

திக்கெல்லாம் பரந்த இருள் ஒளிந்தது
தேசம் எங்கும் ஒளி பிறந்தது
மக்கள் மகிழ்ந்திடும் நாள் பிறந்தது
மானுட விடிவினைத் தந்தது தீபாவளி.

- ச ங்குநாதன் -

(C/45757)
எல்லோருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட்டில் குறித்த தவணையில்
நம்பிக்கையுடன் செய்துபெற்றிட
யாழ்.நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்.
நியூ நிரைஞ்சனாஸ் நகைமாளிகை
இல.கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.

லலிதா புடைவை மாளிகை
உங்களுக்கு வேண்டிய அனைத்துரக ஆடைத் தெரிவுகளுக்கு
* விசேட தெரிவுகளாவன
* திருமணப் பட்டுப் புடவைகள்
* சல்வார் கமிஸ்கள்
* முதலியவற்றுக்கு சிறந்த இடம்
LALITHA TEX
இல.5,6, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே. 5260
இல.80, மார்கட் வீதி, வவுனியா.தொ.பே. 024 21773
(C/45742)

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
வண்ண வண்ண ஆடைகள்
புத்தம் புதிய ஆடைகள்
எத்தனையோ அத்தனையும் உங்கள்
விருப்பம்போல் தெரிவு செய்திட...
கோபிகா ஆடையகம்

இன்பம் பொங்கும் நாளம் இத் திருநாளில் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
பட்டுவெட்டிகள், புதுரக மங்கையர் சல்வார் கமிசுகள், ஆண்கள், பெண்கள்,
சிறுவர், சிறுமியர் அனைவருக்குமான ஆடைகளை ஒரே கூரையின் கீழ்
பெற்றிட... இப்பொழுது யாழ்ப்பாணத்தில்................
எல்லோரும் விரும்பும் ஒரே இடம்...
த.சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
இல.21, சிறப்பு அங்காடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2826
கிளை.: சிறப்பு இங்காடி (மேல் மாடி) நவீன சந்தை, யாழ்ப்பாணம்

அன்பர்கள்,நண்பர்கள்,வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன எண்ணம் கொண்ட தங்க நகைகளை உங்கள்
எண்ணம்போல தெரிவுசெய்து நீங்கள் நீங்கள் விரும்பும்
தினத்தில்உங்களுக்குத் தருபவர்கள் மிக பழமை வாய்ந்த நம்பிக்கையான
ஸ்தாபனம்
பொ.அம்பலவாணர் நகைமாளிகை
இல 110, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்
(C/45760)

அன்பர்கள்,ஆதரவாளர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
உங்கள் தேவைகளுக்கு எங்களிடம்...
- ஆங்கில மருந்து வகைகள்
- பால்மா வகைகள்
- குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துகள்
- பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள், பென்சில், பேனா மற்றும் கல்வி உபகரணங்கள்
- குளிர்பான வகைகள் இவற்றுடன்
- Kit Card
- Mobile Card
- Kodak Film Roll
- Konica Film Roll
மற்றும் அழகுசாதனப் பொருள்கள் இன்னும் இன்னோரன்ன பொருள்கள்
பிரபா பார்மஸி
அன் குரோசரீஸ்
315, ஸ்ரான்லி றோட்,
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.
Horlicks
CORSODYL
Sensodyne
(C/45753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

# சமாதானம் நிலைபெறவேண்டி தீபாவளி நாளில் பிரார்த்திப்போம்

ஆண்டுதோறும் ஐப்பசித் திங்களில் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியில் உலகெங் கும் வாழும் இந்துக்களால் கொண்டாடப்படும் தீபாவளித் திருநாள் இன்றாகும். தீபாவளிப் பண்டிகை இன்பத்துக்கும் மகிழ்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் ஆனந்தத்திற்கும் உரிய ஒரு திருநாளாகும். எல்லாமக்களும் தங்களுடைய கஷ்டங்களை மறந்து குறைந்த அளவிலாவது கொண்டாடி மகிழும் திருநாளாகும்.

தீபாவளித் திருநாள் எவ்வாறு தோன்றியது என்பது குறித்துப் புராணங்களில் பல கதை கள் இருந்தபோதிலும் அகந்தையுடன் செயற் பட்டு மக்களை பலவித இன்னல்களுக்கு ஆளாக் கிய நரகாசுரனை விஷ்ணுபகவான் தோன்றி சத்யபாமா மூலம் வதம் செய்த தினத் தையே தீபாவளி என்பதைத்தான் அநேகமா னோர் நம்புகின்றனர். அதன் அடிப்படையில் தான் தீபாவளியையும் கொண்டாடுகின்றனர்.

ஆனால், தீபாவளியைப் பற்றிச் சொல்லப் படும் எல்லாக் கதைகளுமே அக்ந்தையும் அதர்மமும் அழிந்து தர்மம் நிலைபெறுவ தையே வலியுறுத்தி நிற்கின்றது.

தீபாவளி என்றால் தீபங்களை வரிசையாக ஏற்றுதல் என்று பொருள்படும். அதாவது அகந்தை, அதர்மம் எனும் இருளைப் போக்கி தர்மம் எனும் ஒளியை ஏற்றி மகிழ்வது. இந் நாளில் கார்த்திகைத் தீபத்திருநாளில் விளக்கு

ஏற்றுவது போல் ஆலயங்கள், நீர்த் தடாகங்கள், வீடுகள் ஆகியவற்றில் தீபங் களை வரிசையாக ஏற்றி மகிழ்வர். தீபாவளி நாளில் செய்யப்படும் வழிபாடு உயிர்களை நரகத்தினின்றும் காக்கின்றது என்று பத்மபுராணம் கூறுகின்றது.

எல்லா நாள்களிலும் விடியற்காலை வேளையில் எண்ணெய் வைத்து முழுக்காடுவது கூடாது என்று கூறும் அறநூல்கள் தீபாவளி நாளில் மட்டும் அவ் வேளையில் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும் என்று கூறுகின்றன. ஐப்பசி மாத தேய்பிறை சதுர்த்தசித் திதியிலே எல்லா நீர் நிலைகளிலும் கங்காதேவி உற்பவிக்கின் றாள். அன்றைய தினம் நல்லெண்ணையில் ஸ்ரீ லட்சுமி தேவி வாசம் செய்கிறாள். சிவபெருமானின் ஜடாமுடியிலிருந்து வரும் கங்கையில் நீராடினால் சகல பாவங்களும் நீங்கும் என்பது சைவ மக்களின் நம்பிக்கை. ஆதலினால் இந்துமக்கள் அனைவரும் இந்நாளில் எண் ணெய் தேய்த்து நீராடுகின்றார்கள். இதனை கங்காஸ்ஞானம் என்றும் குறிப்பிடுவதுண்டு.


அதன்பின்பு புத்தாடைகள் அணிந்து தீபங் கள் ஏற்றி எல்லாம்வல்ல இறைவனை வணங் குவதோடு தாய். தந்தை மற்றும் பெரியோர் களை வணங்கி அவர்களின் ஆசியைப் பெற்று தீபாவளிப் பட்சணங்களை அயல வர்களுக்கும் வழங்கி மகிழ்ச்சியுடன் கொண் டாடி மகிழ்வர். அன்றைய தினம் ஆதரவற்ற ஏழைகள், சிறுவர் களுக்கு உணவு, உடை போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு ஆறு தல் கூறுவதும் நோயாளர்கள், சிறைக் கைதி களைச் சந்திப்பதற்கு செல்வதும் அவர் களுக்கு இனிப்புப் பண்டங்களை வழங் குவதும் எமக்கு நல்ல பயனைத் தரும்.

ஆண்டிலோர் தீபாவளியாம் அதை ஆண் டியும் கொண்டாட வேண்டுமாம் என்று அனைத்து மக்களும் ஆனந்தமாகக் கொண் டாடும் இந்தத் தீபாவளித் திருநாளில் எமது நாட்டில் தமிழ்மறவர்களின் குருதியால் தோன் றிய சமாதானம் நிலைபெற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இனிமையாகக் கொண்டாடி மகிழ்வோமாக.

அல்லலப்பட்டு வடிக்கும் கண்ணீரில் தமிழரின் ஆறாத துயரங்கள் அழியாத வடுக் கள் தொல்லையில்இருந்து துயர்களைய எல்லையில்லா இன்பத்தைத் தந்திடும் தீப நாள் ஐக்கியம் தந்திடும் ஐப்பசி மாதம் ஐயத்தை ஒழித்திடும் ஆன் மீக நாள் பக்திகொண்டு பரசுராம னைப் பாடி பாவங்கள் அழிக் கும் சிறப்புநாள்! அமைதி தந்த அழி வைத் தடுத்து அஞ்ஞானம் போக் கிட வருகின்ற தீபநாள் சாந்தி பிறந்து சமதர்மம் தழைக்க ஒற் றுமை தந்திடும் நன்னாள்! கொடுமை புரிந்தவரின் கொட்டத்தை அழித்து நாசம் செய்த நரகாசுரனை வதைத்து மடமை ஒழிந்து மகிழ்ச்சியைத் தந்த மகிமை கொண்ட தீப நாளிது.

**அரியகுமார்**
**வடமராட்சி கிழக்கு**

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
ஆல் நியூ
அருண் ஐஸ்கிறீம்
கொதிக்கும் வெயிலிலும் உங்களைக்
குளிரவைத்து, களைப்பு நீங்கி புதிய உற்சாகத்தை
அளிக்க... சுத்தமாக, சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்ட ஐஸ்கிறீம் வகைகள்... மற்றும்
அறுசுவை உண்டிகளுக்கு
ஆல் நியூ அருண் ஐஸ்கிறீம்
133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்



வைஷ்ணவி
23
நகைப் பூங்கா
பிரதான வீதி,
நெல்லியடி.



இல்லங்கள் தோறும் இனிமை தரும் நன்னாளாம்
இத்திருநாளில் எல்லோருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் !
நவீனரக டிசைன்களிலான தங்கநகைகள்
குறித்த தவணையில் செய்து பெற்றிட சிறந்த இடம்
(C/45712)

சாணுகா 50
நகைமாடம்
அழகு நகைகளின் அரங்கம்
SHANUGA NAGAI MADHAM
(C/45713) 200 G, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 3700



மகிழ்ச்சிகரமான
தீபாவளி
திருநாளில் மனம்
நிறைந்த
நல்வாழ்த்துக்கள்

TILKO HOLIDAYS (PVT) LTD.
JAFFNA CITY HOTELE AND GUEST HOUSES
குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத தங்குமிட வசதிகள், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூஞ்சோலை, விருந்தினருக்கான சொகுசு வான் சேவை
தரமான ருசிமிக்க உணவு வகைகள் மற்றும் சிற்றுண்டிகள், முதலானவற்றுக்கு சிறந்த இடம்:
JAFFNA ☎:021 222 3969, 7291 TRINCO ☎:026 222 3900 M.T.LAVANIA ☎:011 421 6428, Balangoda ☎:0777 575958
✽ எமது வாடிக்கையாளருக்கு A/C, NON A/C வாகனங்கள் கட்டண சலுகை அடிப்படையில் வழங்கப்படும்.
✽ விமான நிலையத்தில் இருந்து வரும் பஸ் இறக்குமிடத்தில் இருந்து (மணிக்கூண்டு வீதி) எமது விடுதிக்கும், விடுதியில் இருந்து விமான நிலைய தரிப்பிடத்துக்கும் (சிங்கள ம.வி) இலவச வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
70/6, K.K.S. Road
(Near Jaffna Genaral Post Office)
Jaffna.



(C/45706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

## நல்லவர் கிடைப்பாரோ!

ஒளிவிழா என்றே இயம்பும் திருவிழா
களிபே ருவகைக் காசினி எங்கும்
அளவிலா வளமோடு வாழ்வும் ஓங்க
அளவெனும் எல்லை இல்லா இறையின்
அருளே வேண்டி நிற்கும் உலகினை
அருளே இல்லா திருக்கச் செய்யும்
இருளே அகல விளக்கு வேண்டும்
அத்திரு விளக்கில் திரியும் வேண்டும்
நின்று எரிய எண்ணெய் வேண்டும்
அறியா மையொடு வறுமை விலக
ஒளியும் வேண்டும் உழைப்பும் வேண்டும்
உழைப்பினை நல்க நல்லோர் வேண்டும்
விளக்குத் திரிநெய் எங்கும் கிடைக்கும்
நல்லோர் கிடைப்பரோ வியன்பே ருலகிலென்

சு.ஶ்ரீபால்





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## தீபாவளி தினத்தில் ஆசாரம் அவசியம்!

இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்று. தாரண வருட ஐப்பசி மாதத்தில் வருகின்ற கிருஸ்ண பட்சத்து சதுர்தசி தினத்தில் கொண்டாடப்படுகின்றது. பொதுவாக தீபங்களை ஒழுங்காக ஏற்றி வைத்தலே தீபாவளி என்று விளக்கப்படுகிறது. எனினும், இது ஆன்ம ஈடேற்றத்தினைப் பெற்றுத் தரும் ஒளியைப் பெறுகின்ற நாளாகவே அமைகின்றது. தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்தல் தீபாவளி எனப் பொருள்படுகின்றது. புராண இதிகாசவியல் வரலாற்றோடு தொடர்புடையதாக காலம்காலமாக இந்துமக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும்.

தீபாவளி என்பது உயிர்கள் ஒவ்வொன்றும் ஞான ஒளியை அடைவதையே தத்துவமாகக் கொண்டது. இந்துமதம் தத்துவத்தின் அடிப்படையிலே ஊற்றாகப் பிறந்தது. வெறும் களியாட்டங்களுக்காக ஆடம்பரங்களுக்காக என்று இல்லாமல் ஒவ்வோர் பண்டிகையும் விழாக்களும் ஒவ்வோர் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. தவறும் மூடநம்பிக்கைகளாக பலியிடல் போன்ற சடங்குமுறைகள் வடஇந்திய வரலாற்று நெறியிலே செல்வாக்குப் பெற்று வருகின்றன.

எங்கள் சமயாசார வழிபாட்டு நெறிகள் யாவும் தென்னிந்திய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இவ்வுலகில் வாழ்கின்ற இந்து மகன் ஒவ்வொருவனும் புனிதமாகக் ஆசாரமாக கொண்டாடவேண்டியது இத்தீபாவளிப் பண்டிகை. இத்தினத்தில் அதிகாலையில் துயில் எழுந்து நாம் நல்ல எண்ணம் உடையவர்களாக இருத்தல்வேண்டும் என்பதனை உணர்த்தவே எண்ணெய் தேய்த்து நீராடுகின்றோம். தீயவழிகளை விடுத்து சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றை நேர்வழிப்படுத்துவதற்காக எமது உள்ளம் தூய்மை பெறுவதற்காக சிரசிலே அரப்பினை தேய்த்து நீராடுகின்றோம். பின்னர் நேர்வழிப்பட்ட சித்தத்திலே ஞானம் ஏற்படுகின்றது என்பதனை உணர்த்த புத்தாடை அணிகின்றோம். இதன்பின் ஞானஒளியை பரப்பும் வகையிலே தீபங்களை ஏற்றி விழாக் கொண்டாடுகின்றோம். இதன்மூலம் தீபாவளி கொண்டாடப்படுவதன் உயர்ந்த விளக்கத்தினை நாம் அறிந்துகொள்ளலாம். இன்னொரு வகையில் புராணக் கதையின் வாயிலாக தீபாவளியின் தத்துவம் உணர்த்தப்படும். அகங்கார மமகாரங்களின் வடிவமாக நரகாசுரன் சித்தரிக்கப்படுகின்றான். தீய இயல்புகளை உடைய இவன் நல்லவர்களை வருத்திய வேளையில் இவனை அழிப்பதற்காக திருமால் துவாரகாபுரியில் கண்ணனாக தோன்றினான் எனக் கூறப்படுகின்றது. இறைவனால் சங்கரிக்கப்பட்ட வேளையில் தனது தவறுகளை உணர்ந்த இவன் அந்நாளில் இறைவனது அருள்வேண்டி வழிபடுபவர்களுக்கு நல்லருள் புரியவேண்டும் என வேண்டிக்கொண்டான். இங்கு அசுரன் தீய இயல்புகளால் கட்டுப்பட்ட ஆன்மாக்கள் ஆகவும் அவற்றுக்கு ஞானஒளியை வழங்கும் பரம்பொருளாக இறைவனும் எடுத்துக் காட்டப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.

தீபாவளி தினத்திலே பக்தியோடு இறைவனை வழிபாடு இயற்றி மது, மாமிசம், கேளிக்கை போன்றவற்றைத் தவிர்த்து இறைதியானத்தால் உயர்ந்த ஞானத்தைப் பெற்று அகஇருளை நீக்கவேண்டும். தீபாவளிப் பண்டிகை சைவர்கள், வைணவர்கள் கடைப்பிடிக்கின்ற ஒரு விழாவாக அமைகின்றது. இறைநம்பிக்கைகள், ஆசாரங்கள், குருபக்தி, ஆசீர்வாதம் போன்றன இன்று அருகிவருகின்றன. அர்த்தமுள்ள இந்துமதம் ஒவ்வொருவனும் வையகத்திலே வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகின்றது.

'நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் நான் யுகம் தோறும் தோன்றுகின்றேன்' - என்று முழங்குகிறான் கீதையிலே கண்ணன். கண்ணன் நல்ல கண்ணன் வெண்ணெய் உண்ட கண்ணன் காத்தற் கடவுளாக மக்களால் அதாவது சைவர்களாலும் வைணவர்களாலும் ஒருங்கே வழிபடப்பெற்று வரும் திருமால் வழிபாட்டோடு தொடர்புடையதாக இத்தீபாவளிப் பண்டிகையும் அமைந்து வருவது கண்கூடு. எனவே, தீபாவளிப் பண்டிகையை இந்துக்களாகிய நாம் வெறும் கேளிக்கையாக அல்லாது பக்திபூர்வமாக எமது உள்ளத்திலே அகஇருளை நீக்கி ஞானஒளியை ஏற்றிடும் நன்னாளாக அமையத் தீபமேற்றி இவ்வையகத்திலே சமாதானம் மலர்ந்திட நாட்டுமக்கள் சுபீட்சமாக வாழ்ந்திட இறையருளை நாடிடுவோம்.

ம.பங்கயன்
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## தித்திக்கும் தீபத்திருநாள்!

இந்துக்களின் பண்டிகைகளில் தீபாவளித் திருநாள் ஒரு முக்கியமான சிறப்பான பண்டிகையாக விளங்குகின்றது. ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் இத்திருநாள் அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் நாம் ஒவ்வொருவரும் எம்முள்ளேயுள்ள தீய எண்ணங்கள், குணங்களை அழித்து இந்நன்னாளில் அன்பு, கருணை, இரக்கம் போன்ற நல்ல குணங்கள் உள்ளவர்களாக விளங்கவேண்டும். இந்த உலகத்திலே சாந்தி, சமாதானம் என்பன நிலவ இறைவனை இந்த நாளிலே வேண்டி வழிபடுவோம். எங்கும் துன்பங்கள் நீங்கி அன்பு என்ற ஒன்றே மலர இறைவனை வேண்டுவோம். தீயகுணங்களை உடைய நரகாசுரனை அழித்த நல்ல நாளான தீப ஒளிநாளில் சத்தியம், தர்மம், சமத்துவம் என்பன இந்த அவனியில் மலர ஆண்டவனை இறைஞ்சுவோம்.

கடந்த போர்க்காலச் சூழலின் பின்னர் தற்போது எமது நாட்டில் நிலவும் சமாதானச் சூழல் தொடர்ந்தும் நிலவவேண்டும். இந்தச் சமாதானச் சூழலில் வருகின்ற தீபாவளித் திருநாளில் தொடர்ந்து நாம் சமாதானத்துடனான தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்று இறைவனை வணங்குவோம். ஒவ்வொரு குடும்பத்தவரும் தித்திக்கும் தீபாவளி நன்னாளில் புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் வாழவேண்டி, கடந்தகாலக் கெட்ட நினைவுகளை மறந்து மகிழ்வுடன் வாழவேண்டும். தீபாவளித் திருநாளாம் இன்று தீப ஒளிகளை ஏற்றிவைத்து மனஇருளைப் போக்கி வாழ்வை சந்தோசத்துடன் வாழவேண்டும். ஏழை எளியவர்களுக்கு தர்மதானங்கள் செய்ய வேண்டும். நல்லசிந்தனையுடன் இந்நாளில் எந்தவொரு காரியத்தையும் ஆரம்பிக்கவேண்டும்.

புத்தாடை அணிந்து புதுப்பொலிவுடன் தீபத்திருநாளில் இறைவனால் படைக்கப்பட்ட இந்த அற்புதப் படைப்பான கண்களால் இறைவனது திருக்கோலத்தைக் கண்டு இன்புற்று அவனது அருட்கடாட்சங்களைப் பெறவேண்டும். சோதியாகவும் சுடராகவும் ஒளியாகவும் தீபமாகவும் விளங்கும் இறைவனை தீபங்கள் ஏற்றிவழிபடும் ஒரு நன்னாளாகத் இந்தத் தீபத் திருநாள் விளங்குகின்றது.

தீபாவளித் திருநாளான இன்று நீராடி செய்து உடலும் உள்ளமும் தூய்மையாக உற்சாகமாக இறைவனது சந்நிதானத்தை அடைந்து அஞ்ஞான இருளைப் போக்கி அறிவுக்கு ஒளியூட்டும் இறைவனை வழிபடுவோம். இந்துக்களின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கொண்டாடப்படும் இத்தீபத்திருநாளில் அனைவரும் சுபீட்சமாக வாழ இறைவனது பாதார விந்தங்களை வழிபடுவோம். இன்று மலரும் இந்த 2005 ஆம் ஆண்டு தீபாவளித் திருநாளில் நாம் எல்லோரும் ஒற்றுமையுடனும் அன்புடனும் சமாதானத்துடனும் இருப்போம் என்று உறுதிபூணுவோம்.

– கங்கா



அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
தங்க நகையுலகில் தலக்கெனத் தனியிடம் பிடித்து நிற்பவள்
நிருத்திகா ஜுவலர்ஸ்
177, Kasthuriyar Road, Jaffna
Tel :022 222 2694



அன்பர்கள், நண்பர்கள், ஆதவாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
புடைவைத் தினுசுகள், கூறைச் சேலைகள், பஞ்சாபி, சேட்டிங், சூட்டிங், சேட், டெனிம், ஜீன்ஸ், Tசேட் (ரெடிமேட் மற்றும் அனைத்து வகையான ஆடைத் தெரிவுகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்
ஏக விநியோகஸ்தர்கள்-
சிவா ரெக்ஸ்ரைல்ஸ்
இல.27, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2463,5724

பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு

ஜெகன் களஞ்சியம்
இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.222 5035
(C/45763)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்

வானொலி, தொலைக்காட்சி, T.V, டெக், குளிரூட்டிகள், மின் விசிறிகள், மின் உபகரணங்கள் மற்றும் எலக்ரோனிக் பொருள்கள், KANCHAN மின்சார வீட்டுப்பாவனைப் பொருள்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்.
V.K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2056

kit
தீபாவளித் திருநாளை முன்னிட்டு
WESTERN UNION
MONEY TRANSFER
WESTERN UNIONமூலம் பணம் பரிமாற்றல் இலக்கம்(MTCN10 இலக்கங்கள்) உங்கள் கைகளில் கிடைத்து விட்டதா? வங்கிக்கணக்கு வேலையில்லை 24 மணி நேரமும் ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்துடன் அன்பளிப்பு கிடைக்க உடன் நாடுங்கள். விதமான தொலைபேசி அட்டைகள் Dialog GSM இணைப்புகள்(SIM) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும். உள்ளநாட்டு வெளிநாட்டு கடிதங்கள், பொதிகள் உடனுக்குடன் அனுப்பிட


SRI MURUGAN
TELE COMMUNICATION
AGENCY POST OFFICE,
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021 222 5392
இன்னும் பல சேவைகளையும்
(C/45769)


* AUDIO CD's
* VIDEO CD's
* MP3 CD's
* கர்நாடக சங்கீத CD's
* தமிழ், ஆங்கில DVD
* SOFTWARES, GAME CD's
* CD's
DVD Software, ACD
ACD and VCD, VCD, Yoga VCD
MUSIC WORLD
வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலிச், யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 6554


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கும்
உதயனின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
நவயுகம் மகிழும் புதுமலர்
பூங்கா புதுமணத்தென்றலில்
பூத்து நிற்கும் நவநாகரிக
நகை உலகம்
சிறீ மீனாட்சி
தங்கமாளிகை
C/45727) இல.187,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 6109

யாழ் கொழும்பு, யாழ் துரித வான் சேவை
விரும்பிய இடத்தில் ஏற்றியும் இறக்கியும்
பாதுகாப்பான பயணத்துக்கு
யோகாஸ் ரவல்ஸ்
இல:207/7, அளுத்மாவத்தை, கொழும்பு-15,
தொ.பே.526404, 526405
இல:9.47, Th Lane Colombo-6.
T.P.074519759, 506286, 594835

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
கிளை: யோகாஸ்

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
ஆடவர், மகளிர்,
சிறுவர், சிறுமிகளுக்கான
நவநாகரிக ஆடைவகைகளைப்
பெற்றுக்கொள்ள
வண்ண வண்ண ஆடைகள்
எத்தனையோ அத்தனையும்
உங்கள் எண்ணம்போல்
தெரிவு செய்திட
மகர சக்தி பெஷன்
இல.14, 333/2, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
கோடை வெயிலா...
இல்லைக் குளிர் நிலவா ...?
அதிரிக்கவைக்கும் ஆரவாடம்!!
நாவிற்கினிய ஐஸ்கிறீம் வகைகள்... சர்பத் வகைகள்...நெல்லிகிரஸ் வகைகள்...மாத்திரமல்ல சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப் பட்ட சிற்றுண்டி வகைகள், கேக், பிஸ்கட் வகைகள்... இன்னும் இன்னோரன்ன சகலவித பலகார வகைகள் வேண்டிய வகையில் உங்கள் வைபவங்களுக்கு ஓடருக்குப் பெற்றுக்கொள்ள விரையுங்கள். உங்களை குளிர்ச்சிகடலில் மூழ்கடிக்கும்
5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்
191, பிரதான வீதி, யாழ்ப்பாணம். உரிமையாளர்: A. ஜெயக்குமாரன்

அனைவருக்கும் எம் தீபாவளி வாழ்த்துக்கள்
நங்கையர், ஆடவர், சிறுவர்களுக்கேற்ற DSI
பாதணிகளையும் பாடசாலை மாணவர்களுக்கான DSI
பாதணிகளையும் ஒரே காட்சியறையில் பெற்றுக்கொள்ள
DSI காட்சி அறை
Sri Lanka's No.1,School Footwear.
நவநாகரிக நாரீமணிகள் விரும்பும் நல்ல
பாதணிகளுக்கு நம்பிக்கையான இடம்
இல.426, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎-021 222 6809

அன்பர்க, நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
விக்னேஸ்வரா நகைப் பூங்கா
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
205/3. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் தொ.பே: 021 4590022
10B,34D. கந்தசாமி கோயில் வீதி. வவுனியா. தொ.பே: 024 2221857. 024 222 1910
457, காலி வீதி. வெள்ளவத்தை, கொழும்பு-6 தொ.பே: 011 2559535
முடிப்பிள்ளையார் நகைப்பூங்கா
இல.167.யாழ் சாலை, கிளிநொச்சி. 021 459 0022. 024 222 1857. 024 222 1910. 011 255 9535

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!
Inland & I.D.D Calls, Internet Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing Cards, Laminating, CD Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories.
5/-
4/-
WESTERN UNION
பணம் பரிமாற்றம்
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259, கே. கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
குகன் தொலைத்தொடர்பகம்,
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

# அக, புறத் தூய்மைக்கு வழிகாட்டும் தீபாவளித் திருநன் நாள் இது!

தெய்வத்தை வழிபடவும் - தெய்வக் கருணையைப் பின்பற்றவும் - உதவு பவையே விரதங்களும், பண்டிகைகளும் ஆகும். விரதங்களின் போதும் பண்டிகைகளின் போதும் நீராடித் தோய்த்த உடை உடுத்துப் புறத்தூய்மை உடையவர்களாகவும் தெய்வ நினைவினால் அகத்தூய்மை உடையவர்களாகவும் ஆலயங்களுக் குச் சென்று தெய்வவழிபாடு செய்கின் றோம். விரதங்கள், பண்டிகைகள் அனைத்தும் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. அந்தப் புராணக் கதைகள் பெரும்பாலும் தெய்வத்தின் கருணையையும் அசுரர்களின் கொடுமையையும் விளக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி வகுக்கும்.

தர்ம, அதர்ம போராட்டங்களை விளக்கும் பண்டிகைகளுள் தீபாவளியும் ஒன்று. தீபாவளி புராணக் கதையில் வரும் நரகாசுரன் கொடியவன். ஆனாலும், கூடற் திருமாலாற் கொல்லப்படும் போது - சாகும் நேரத்தில் நல்லறிவு பெறுகின்றான். அந்த நல்லறிவு திருமாலின் திருக்கோலத் தைக் கண்டதனால் ஏற்பட்ட ஒன்றாகும். அந்த நல்லறிவினால் தீபாவளியை எப்படிக் கொண்டாடவேண்டும் என்றும் திருமாலிடம் வரம் கேட்கின்றான்.

நரகாசுரன் என்னும் அசுரன் குடிமக்களுக்குக் கொடுமைசெய்து ஆண்டு வந்தான். குளித்தல், உடை தோய்த்தல், வீடுகளைக் கூட்டுதல், மெழுகுதல் முதலிய நற்செயல்களை யெல்லாம் தடுத்துத் தனது ஆணை யினாற் பாவவழிகளிற் செலுத்தினான். தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் கருதிய திருமால் நரகாசுரனைக் கொன்றருளினார்.

நரகாசுரன் சாவதற்கு முன் நல்லறிவு பெற்று கடவுளே நான் எனக்காக ஒரு நன்மையையும் கேட்கவில்லை. இதுவரை எனது ஆணையினால் குளிக்காது, உடை தோய்க்காது, கோயிலுக்குச் செல்லாது பாவவழியிற் சென்றவர்கள் இனிக் குளித்துப் புதுஉடை உடுத்துக் கோயிலுக்குச் செல்லவும் புண்ணிய கருமங்களில் ஈடுபடவும் அருள்புரியுங்கள் என்று வேண்டிக் கொண்டான். எனவே, தீபாவளித் தினத்தில் குளிப்பதால் புறத்தூய்மையையும் புண்ணிய நினைவுகளால் அகத்தூய்மையையும் பேணிக்கொள்ளவேண்டும். கடவுளை வழிபடவேண்டும். ஆனால், தீபாவளியின் தத்துவம் அறியாத பலர் அன்றுதான் அளவுக்கு அதிகமாக மதுபானம் அருந்துகிறார்கள். அன்றுதான் பெரும் செலவில் இறைச்சி வாங்கி உண்டு பாவத்தைப் பெருக்குகிறார்கள். நரகாசுரன் வரம் கேட்பதற்கு முன்னர் நரகாசுரனின் ஆட்சியில் எப்படி இருந்தார்களோ அப்படி என்றும் இருக்க விரும்புகிறார்கள். நரகாசுரன் கேட்ட வரத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் இல்லை.




### பண்டிகைகளும் வாழ்வும்

சமயத்துக்கும் பண்டிகைகளுக்கும் வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சமயமும் பண்டிகைகளும் போதிக்கும் கருத்துக்களின் அடிப்படையிலேயே வாழ்வு அமையவேண்டும். நல்வாழ்வு என்பது இறைவனோடும் சமூகத்தோடும் தொடர்பு உடையதாக இருக்கவேண்டும். இறைவனோடும் சமூகத்தோடும் இருக்கவேண்டிய உறவைச் சமயப்பெரியார்கள் பலரும் பாடி இருக்கிறார்கள். பட்டினத்தடிகள் ஒரு பாடலில் வெகுசிறப்பாகப் பாடியுள்ளார்.

### தெய்வம் உண்டென்றிரு

மனிதனாகப் பிறந்த எவனும் தெய்வநம்பிக்கை உடையவனாக இருக்கவேண்டும். தெய்வ நம்பிக்கைதான் நீதியில் நம்பிக்கை கொள்ளச் செய்யும். நீதியைப் பின்பற்றித் தெய்வநம்பிக்கையோடு வாழ்பவன்தான் பிறிவியின் பயனை அடையமுடியும். பெற்றோரை, மற்றோரை மதித்து நற்பெயர் அடைய முடியும். தெய்வத்தின் கருணை விளங்கி எல்லா உயிர்களுக்கும் கருணை காட்டமுடியும்.உயிர்களுக்குக் கருணையைக் காட்டுவதன் மூலம் இறைவனின் கருணையைப் பெறமுடியும்.இவற்றுக்கெல்லாம் தெய்வம் உண்டென்றிருக்கும் நம்பிக்கையே காரணமாகும்.

### பசித்தோர் முகம்பார்

சமய வாழ்வு வாழ்பவன் பசித்தோர் முகம் பார்ப்பவனாக இருக்கவேண்டும். *'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'* - என்றார் திருவள்ளுவர்.

எக்காலத்திலும் இறைவனோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் பசித்தோர் முகம் பார்ப்பவர்களாக இருக்கவேண்டும். விரதநாள்களிலும் பண்டிகை நாள்களிலும் நாம் சிறப்பாகப் பசித்தோர் முகம்பார்க்க வேண்டும். செல்வ வசதி கொண்டவர்கள் முதியோர் இல்லங்களுக்கும் அநாதைகள் இல்லங்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுப்பதன் மூலம் பட்டினத்தார் கூறிய பசித்தோர் முகத்தைப் பார்க்கலாம். வசதி குறைந்தவர்களும், பசி என்று வீட்டுக்கு வருபவர்களுக்கும், ஏழைகளுக்கும் தம்மால் இயன்றதைக் கொடுக்கலாம். இது சமயப் பணியாகவும் சமூகப் பணியாகவும் அமையும். இக்கருத்தைத் பட்டினத்தார்.

*ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு*
*உயர் செல்வமெல்லாம்*
*அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்*
*நல்லறமும் நட்பும்*
*நன்றென்றிரு நடுநீங்காமலே*
*நமக்கிட்ட படி*
*என்றென்றிரு மனமே உனக்கே*
*உபதேசமிதே*

என்கிறார். எனவே, தீபாவளித் திருநாளாகிய புண்ணிய நாளிலே மது உண்டும், புலால் உண்டும் பாவத்தைச் சேர்க்காது தெய்வம் உண்டென்றும், வழிபட்டும், பசித்தோர் முகம் பார்த்தும் புண்ணியத்தைப் பெருக்குதல் நல்வாழ்வுக்கு வழியாகும்.

*புலவர் ம.பார்வதிநாதசிவம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

# இருளைப் போக்கி சாந்தி நிலவ தீபாவளி நாளில் பிரார்த்திப்போம்

தீபத்திருநாளாம் தீபாவளி நன்நாளில் ஒளியை ஏற்றி இருளைப் போக்கி நம் வாழ்வினில் சாந்திநிலவ இறைவனை வேண்டி வழிபடுவோம்.

உற்றார், உறவினர், சுற்றத்தார் உடன் ஒன்று கூடி அன்பைப் பகிர்ந்து உறவாடி உண்டு மகிழ்வோம்.

இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகை பற்றி பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

எங்கெல்லாம் ஆணவம் தலை தூக்குகின்றதோ அங்கெல்லாம் இறைவன் அவதாரம் செய்கின்றார்.

இதனையே கீதையில் கிருஷ்ண பரமாத்மா நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் யுகம் தோறும் நான் அவதாரம் செய்வேன் என்று கூறியிருக்கின்றார்.

தீபாவளியும் இத்தகைய ஓர் அவதாரத்தையும் அக்கிரமம் செய்து ஆணவம் தலைதூக்கிய நரகாசுரன் அழிக்கப்படுவதையும் உணர்த்தி நிற்கின்றது.

மனிதர்களுடைய வாழ்நாள்களிலேயும் தேவ - அசுர நிலைதான் உள்ளது. ஒவ்வொருவரது நடத்தைகள், செயல்கள் யாவும் அவர்களது உள்ளத்தால் நடக்கும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாகவே நடக்கின்றது.

தேவர்கள் - அசுரர்கள் வெளிப்படையாகவே யுத்தம் புரிவர். ஆனால், மனிதர் தமது உள்ளத்தில் ஏதாவதொன்றை வைத்து எப்போதும் யுத்தம் செய்து கொண்டிருப்பர்.

வெளியே நடக்கும் யுத்தத்தை விட உள்ளே புரியும் யுத்தம் தான் பயங்கரமானது .

மனதின் உள்ளே நடக்கும் யுத்தத்திற்குத் தீர்வு காண்பதென்றால் அதற்கு இறைவனது துணையைத்தான் தேடவேண்டும்.

ஒவ்வோர் ஆத்மாவும் தெய்வத் தன்மை கொண்டது. ஆனால், அசுரத்தன்மை அந்த ஆத்மாவைத் தன் பக்கம் இழுத்துக் கொள்கின்றது.

அது ஆத்மாவை நற்காரியங்கள் செய்ய விடாது தடுக்கின்றது. இவற்றினிடையே ஆன்மா மாட்டிக் கொண்டு திண்டாடும் நிலையில்தான் கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனும் தவறான காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கின்றான்.

ஒரு மனிதன் தானும் வாழ்ந்து பிறரும் வாழ வேண்டும் என நினைக்கவேண்டும். அதைவிடுத்து பிறரையும் அழித்துத் தன்னையும் அழிக்க நினைப்பானேயானால் அது அவனது அசுரத்தனத்தை வெளிக் காட்டும்.

இந்து மதமானது புராணங்கள் மூலம் தேவர் - அசுரர்களின் வரலாற்றுக் கதைகளைக் கூறி முடிவில் தெய்வீகத்தன்மை மேலோங்கி அசுரத்தனம் அடியோடு அழிக்கப்படுவதாகக் கூறி ஆன்மாக்களை நற்செயல்களின் பக்கம் திருப்புகின்றது.

**எங்கெல்லாம் ஆணவம் தலை தூக்குகின்றதோ அங்கெல்லாம் இறைவன் அவதாரம் செய்கின்றார்**

மனிதர்கள் இந்துமதம் காட்டும் கொள்கைப்படி நல்வழியில் நடந்து நற்காரியங்களைச் செய்வதே போதுமானது. நன்நாளான இந்தத் தீபாவளித் திருநாளில் ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து பெரியோர்களின் ஆசிபெற்று எம்மிடம் உள்ள ஆணவம், அரக்கத்தனம் என்பவற்றை அகற்றி இதய அசுத்தங்களை அகற்றி எல்லோரிடமும் அன்பாக இருப்போம் என்று உறுதி பூணுவோம். தீபாவளியானது - அன்னை பவானியின் பூஜையாக வங்காளத்திலும் தாம்பூலத் திருநாளாக மகராஷ்டிர மாநிலத்திலும் குபேர பூசையாக புதுக்கணக்குத் தொடங்கும் புத்தாண்டாக குஜராத்திலும் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளியைத் தொடர்ந்து கந்தசஷ்டி விரதமும் அதன் பின்னர் கார்த்திகைத் தீபத் திருநாளும் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

- சாயினி -





உங்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டுவதில் எப்போதும் முன்னிற்கும் மக்கள் வங்கி தீபத்திருநாளான தீபாவளி தினமான இன்று உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005



தீபத்திருநாளாம் தீபாவளி நன்னாளில் எமது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியுறுகிறோம்!
ஜெசீமா பிக்சர் பலஸ்
302, 304, 308, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 3124


## தர்மம் வெல்லப் பிரார்த்திப்போம்

பண்டிகைகள், விழாக்கள், வழிபாடு கள் யாவும் தர்மத்தையும், சமூக ஒருமைப்பாட் டையும் வலுப்படுத்தவே சமயங்கள் வாயிலாகக் கொண்டாடப்படுகின்றன. அறத்தை நிலை பெறச் செய்யவே யுகங் கள் தோறும் இறைவன் அவ தாரமெடுக் கின்றான்.

நரகாசுரனால் ஏற்பட்ட துன்பங்களை நீக்க சத்தியபாமா மூலமாக அவனை அழித்து தர்மத்தை நிலை பெறச் செய்தார் கிருஷ்ண பரமாத்மா.

அசுரனது வேண்டுதலின் படி அவன் அழிக்கப்பட்ட தீபாவளி தினத்தில் ஒளியுடனும் சந்தோஷத்துடனும் தீபங்கள் ஏற்றி புத் தாடை அணிந்து மக்கள் இறைவனை வழிபடுகின்றனர்.

இதனால், புறவுலகு இருளகன்று ஒளி பிரகாசிக்கின்றது. அதேபோன்று நமது அகத்தைப் பீடித்துள்ள ஆணவம் என்னும் இருள் நீங்குதல் வேண்டும்.

அந்த ஞானஒளி நமக்குள் ஏற்றப் படின் தீபாவளிப் பண்டிகையின் உண் மையான கருத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஆலயங்களில் நடைபெறும் பூசை களின் முடிவில் "லோகாசமஸ்தா சுகினோ பவந்து" என கூறுவார்கள். சகல உலகங்களும் நலத்துடன் வாழ வேண் டும் என் பதே இதன் பொருளாகும்.

இன்று தமிழ் மக்கள் நடத்தும் தர்ம யுத்தமும் இதன் காரணமேயாகும்.

"ஆண்டிலோர் தீபாவளியாம் அதை ஆண்டியும் கொண்டாட வேண்டும்" என் பது மகாகவியின் வாக்கு.

ஆகவே தர்மத்தை உணர்த்தும் ஒளித் தினமாகிய தீபாவளியை நமது தர்மயுத் தம் வெற்றி பெற்று மக்கள் யாவரும் அன்புடனும், அஹிம்சையுடனும் , இன மத பேதமற்ற சமுதாயமாக வாழ இறை வனைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின் றேன்.


சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்தி ஹரக் குருக்கள்
பிரதம குரு.
ஸ்ரீபரமேஸ்வரன் கோயில்.
யாழ். பல்கலைக்கழகம்.யாழ்ப்பாணம்.



ICI Dulux
We'll bring the colour. You live the life.
சிவன் மோட்டோர் ஸ்ரோஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 2763
Glidden AUTOCOLOR Necol ULTRA


இல்லம் சிறக்க உள்ளங்குளிர ஈடிணையற்ற எழில்மிகு புதுயுக புடைவைத் தினுசுகளை உங்கள் விருப்புக்கேற்ப இறக்குமதி செய்து உவந்தளிக்கும் ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ ஸ்தாபனத்தார்கள் மங்கலம் பொங்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.
ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ
இல.13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 3139



மங்கலமான தீபாவளி நன்னாளில் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
அருள் விநாயகர் றேடர்ஸ்
106, Stanly Road, Jaffna. T.P.021 222 5558
அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
108, Stanly Road, Jaffna. | Kandy Road, Chavakachcheri. | Main Road, Changanai.

ஜப்பான் தயாரிப்பு மோட்டார் சைக்கிள்களும் அதன் அனைத்து உதிரிப்பாகங்களும் இந்தியத் தயாரிப்புகளான HERO HONDA, TVS, BAJAJ போன்றவற்றுக்கான அனைத்து உதிரிப்பாகங்களும் TOYATA வாகனங்களுக்குரிய யாழ்.முகவர்களாகவும், ஜெனரெற்றர்கள், லான்மாஸ்ரர்கள்வாகன சேர் பொருள்கள் போன்றவற்றின் விற்பனையில் மோட்டார் சைக்கிள்பாவனையாளர்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும். பல கிளைகளைக் கொண்டியங்கும். தமக்கெனத் தனியிடத்தில் முன்னணி வகிக்கும் தனிப்பெரும் ஸ்தாபனம்

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## மனதைப் பீடித்துள்ள மாசுகளை அகற்றும் திருநாளே தீபாவளி

இந்து சமயிகளால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் தீபாவளி முக்கியமானதாகும். இப்பண்டிகையின் தோற்றம் பற்றிக் கூறும் இந்து சமயப் பிரமுகர்கள், நரகாசுரனைக் கொன்ற தினமே தீபாவளித் தினம் எனவும் நரகாசுரனின் மரண சமய வேண்டுகையை நிறைவேற்றவே தீபாவளி கொண்டாடும் வழக்கம் தோற்றுவிக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். மீசாலையில் பிறந்து 1900 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவரும் சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் கல்வியின் மகிமையை உணராது கல்வியில் நாட்டமின்றியிருந்த பெண்கள் அடிப்படைக் கல்வியை வீடுகளிலே பெற்று விழிப்புணர்ச்சி பெற வழிவகுத்த A "விளக்கேற்றும் விளக்கேற்றல்" என்னும் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியவருமான சிந்தனையாளர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் தீபாவளிப் பண்டிகை பற்றித் தெரிவித்த கருத்தே சாலப் பொருத்தமானது எனப் போற்றப்படுகின்றது.

மக்களது மனதிலிருந்து பொறாமை, வஞ்சகம், பழிவாங்கும் எண்ணம் போன்ற தீய மாசுக்களை நீக்குவதற்காகவே இந்துசமயம் தீபாவளிப் பண்டிகையை ஏற்படுத்தியுள்ளது என்பது இவரது கருத்தாகும்.

இவர் தெரிவித்துள்ள விளக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்து சமயம் மனித மனங்களிலுள்ள கொடிய எண்ணங்களை அசுரர்களாக உருவகித்து அவற்றைச் சங்காரம் செய்வதைக் காட்டுவதன் மூலம் மக்களது மனதைத் தூய்மைப்படுத்தும் ஏற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வகையில் கயமுக அசுர சங்காரம், சூர சங்காரம், நரகாசுர சங்காரம் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தீபாவளியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள நரகாசுரன் என்ற பெயரை ஆழ்ந்து நோக்கினால் அதில் பொதிந்துள்ள அர்த்தம் தெளிவாகப் புரியும் எனக் கூறிய தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் தாம் எழுதிய **TRUTHS AND MYTHS BEHIND HINDU RITUALS** என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நர+அக+ அசுரன் என்பது நரகாசுரன் எனச் சேர்த்து உச்சரிக்கப்படுகிறது எனவும் நரன் என்றால் மனிதன் அகம் என்றால் மனம் அசுரன் என்றால் தீய எண்ணங்கள் எனவும் பித்தளைப் பாத்திரத்திலுள்ள செழும்பு மாசை நீக்கி நன்கு மினுக்கி வைத்தாலும் சில நாள்களுள் அப்பாத்திரங்களில் செழும்பு எனப்படும் அழுக்கு மறுபடியும் தோன்றி, அப்பாத்திரத்தின் அழகைக் கெடுத்துவிடும்.

தீபாவளித் தினத்தில் மனதிலுள்ள குரோதம், வஞ்சகம், பொறாமை போன்ற தீயஎண்ணங்களை நீக்கிப் புத்தாடை உடுத்து அவற்றின் நீக்கத்தைத் தீபாவளியாகக் கொண்டாட வேண்டும். மீண்டும் மீண்டும் மனதில் மாசுபடியும் என்பதால் பித்தளைப் பாத்திரங்களை அடிக்கடித் துலக்குவது போல ஆண்டுதோறும் இந்த மாசுக்களை எமது மனத்திலிருந்து நீக்கிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதற்காகவே இப்பண்டிகையை ஆண்டுதோறும் கொண்டாட இந்துசமயம் ஏற்பாடு செய்துள்ளது என இவர் குறிப்பிட்டுள்ளார்.

மனதிலுள்ள மாசுக்களை அகற்றாமல் வெறுமனே நீராடிப் புத்தாடை புனைந்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவது அர்த்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் தீபாவளித் தினத்தன்று மது அருந்தி மாமிசம் புசித்து இந்துசமய பாதகங்களாகக் கருதும் செயல்களிலே ஈடுபடுவது மன்னிக்கமுடியாத குற்றம் எனவும் குறிப்பிட்டுள்ளார். இதனைக் கடுமையாகக் கண்டித்துமுள்ளார். பெரியார் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள் தெரிவித்த அரும்பெரும் கருத்துக்களை உள்வாங்கி அர்த்தமுள்ள தீபாவளியை ஆண்டுதோறும் கொண்டாடுவோமாக.

ந.சகாதீசன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்-2005

## நம்பிக்கைப் பொழுது

புதியன பூணுங்கள்- நம்பிக்கைப்
பொழுதினைக் காணுங்கள்
மதியினைத் தீட்டுங்கள்- வளர்கின்ற
மடமையை ஓட்டுங்கள்

இனிப்பை உண்ணுங்கள்- இருக்கையின்
இணைப்பை பின்னுங்கள்
முனைப்பில் செல்லுங்கள்- வரும்பகை
முகப்பில் வெல்லுங்கள்
களிப்பினில் ஆடுங்கள்- இறைவன்
கருணையைத்தேடுங்கள்
விழிப்புடன் கூடுங்கள்- என்றுமே
வெற்றியை நாடுங்கள்

வெடித்துத் தள்ளுங்கள்- மனவெறி
இடித்துத் தள்ளுங்கள்
படித்துக் கொள்ளுங்கள்- அறநெறி
படைத்துச் செல்லுங்கள்

வாழ்த்துக்கள் கூறுங்கள்- உயர்வுற
வானத்தைப் பாருங்கள்
காழ்த்தலை நீக்குங்கள்- அருஞ்செயல்
கடமையை ஊக்குங்கள்




























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளி சிறப்பு மலர்–2005

1 ஆம் பக்கத் தொடர்ச்சி...

நரகன் உயிரைவிட்டான். அவனது ஆவி ஒளி ரூபமாக பகவானை நெருங்கி வலம்வந்து அவரோடு ஐக்கியமாயிற்று.

**பரமாத்மாவிடம் வேண்டுகோள்**

அப்போது சத்தியபாமாவான பூமாதேவி நரகாசுரனின் மகனான பகதத்தனை அழைத்து வந்து பிரபு எனது பாரங்களைக் குறைப்பதற்காகவே நீர் அவதாரம் செய்கிறீர் நீவிர் வராக அவதாரம் எடுத்தபோது உனது கோட்டின் பரிசத்தால் நானே இவனைப் பெற்றேன். இவன் அசுரன் ஆக இருந்தமையால் இவனை அன்றே அழிக்கத் துணிந்தீர். பின்பு எனக்குத் தாங்கள் தந்த வரத்தால் இவன் இன்றளவும் உயிர் நிலைத்தான். வரத்தின்படி என்னால் தான் இவனுக்கு அழிவு. பிரபு இப்போது இங்கே நிற்பவன் நரகனின் மகன் பகதத்தன். இவனை ஆசீர்வதியுங்கள் என்று பரமாத்மாவிடம் வேண்டிக்கொண்டார்.

பகவானும் பகதத்தனின் தலைமேல் கைவைத்து தனது பரிசத்தால் அவனை ஆசீர்வதித்து முடிசூட்டி பிராக்ஜோதி புரத்தின் அதிபதியாக்கினார்.

பின்பு இந்திரனிடமும் மற்ற அனைவரிடமும் கவர்ந்த கன்னியர்களையும் கவசகுண்டலங்களையும் மணிபர்வதத்தையும் வருணனின் குடையையும் அவரவர்களிடம் ஒப்படைத்து விட்டு துவாரகை மீண்டார்.

இவ்வாறே தீபாவளி தினம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்துப் பெருமக்களால் வருடம் தோறும் அனுட்டிக்கப்பட்டுவருகிறது.

இன்று ஈழத்தின் பல்வேறு இந்து ஆலயங்களிலும் தெய்வங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தி பால். தயிர். பஞ்சாமிர்தம். பழவகை. கரும்பு. பன்னீர். இளநீர் என பல்வேறு அபிஷேகங்கள் செய்து கோடியுடுத்தி தீபங்கள் பலவும் ஏற்றி விசேட நைவேத்தியங்கள் படைத்து விசேட தீபாராதனை பூவை வழிபாடுகள் செய்வார்கள். சில ஆலயங்களில் தோசை விசேட நிவேதனமாக இறைவனுக்கு வைக்கப்படுகிறது.

உலகெங்கிலுமுள்ள இந்துப் பெருமக் கள் பல்வேறு இடங்களிலும் பல்வேறு விதமாக கொண்டாடுகிறார்கள். சம்பிரதாயங்கள். கலா சாரங்கள். வேறுபட்டாலும் வாழ்த்துக்கள் கூறிக்கொள்ள எவரும் தவறமாட்டார்கள்.

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு
பிரதமகுரு ஸ்ரீ வல்லிபுராழ்வார் சுவாமி கோயில். துன்னாலை.












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org